THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் அவர்கள் கிருஷ்ணகிரி, ஹோசூர், ஆகியவைகளைப்பற்றி என் பேசக்கூடாதென்ற காரணம் தெரியாமல் பேசுகின்றார் என்று நினைக்கிறேன். ஹோசூருக்கும் ஆந்திராவுக்கும் இணைப்புப் பிரதேசம் கிடையாது. கிருஷ்ணகிரியில் "காரிடார்" வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படி "காரிடார்" கொடுக்கவேண்டுமென்றால் அங்கு ஒரு பெரிய மலை குறுக்கே நிற்கிறது. ஆகையால் ஹோசூருக்கு அவர்கள் வருவது என்றால் ஒரு வேளை கோலார் அவர்களுக்குக் கிடைத்தால்தான் அப்படி வரமுடியும். அப்போதுதான் ஹோசூரைப்பற்றி பேசலாமே தவிர இப்போது அதைப்பற்றி பேசுவது மறுக்கப்பட்டது வேறு காரணத்திற்காக அல்ல என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

SRI P. JEEVANANDAM: அந்த ஒரு இடத்தைப்பற்றி மட்டும் சொல்லவில்லை. அதேபோல் கல்குளம், கூடலூர், மலையாளத்தையொட்டி இருக்கக்கூடிய தமிழ் பேசும் பிரதேசங்கள், ஆகியவை தமிழ் நாட்டுக்கு வரவேண்டுமென்று சொல்லும்போது அதே ஜனநாயகக் கொள்கையை நாம் அனுஷ்டிக்கவேண்டாமா? அதேமாதிரிதான் சித்தூர் இருக்கிறது. ஆகவே சித்தூர் ஆந்திராவுக்கும், பாலக்காடு மலையாளத்திற்கும் போக வேண்டியதுதான் சரியானது என்று சொல்கிறார்கள். தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கல்குளம், சித்தூர், கூடலூர் எதை எடுத்துக் கொண்டாலும் ஒரே கொள்கையை அனுஷ்டிக்கவேண்டும். அதுதான் நான் கூறுவது.

தேவிகுளத்தைப் பொறுத்தவரையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இது கொஞ்ச முக்கியமான பிரச்னை என்று நிதி மந்திரி அவர்களே சொன்னார்கள். இது விஷயத்தில், மலையாள மக்கள் சம்பந்தப்பட்டவரையில் அவர்களிடையே மாறுபாடே இல்லை. அவர்கள் எல்லோரும் அந்தப் பிரதேசம் மலையாளத்துக்கு போகவேண்டுமென்று சொல்லுகிறார்கள்; இல்லாவிட்டால், "ஊப் ஊன்" போய்விட்டதென்று சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டுக்கு வரவேண்டுமென்று பார்த்தால் அங்கு தமிழர்கள் தான் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள். தேவிகுளத்திலும், பீர்மேடிலும் 30 வக்கர் தோட்டக்காடு இருக்கிறது. அதில்

[Sri P. Jeevanandam] [21st November 1955

வேலை செய்கிறவர்கள் அவ்வளவு பேரும் தமிழர்கள். பீர்மேடில் 1/3 பங்குதான் மலையாளிகள் வேலை செய்கிறார்கள். மேற்கில் ஏலத் தோட்டத்தில் 99-3/4 சதம் தமிழர்கள் வேலை செய்கிறார்கள். மறையூர், காந்த ஹார் மூதலியவை தமிழ் கிராமங்கள். ஆகையால் அவற்றையும் தமிழ் ராஜ்யத்துடன் சேர்க்கவேண்டும். அங்குள்ள தமிழர்களை "மைனாரிடி காரகிடர்" என்று சொல்வதற்கில்லை. இந்தப் பிரச்னையச் சண்டையில்லா மல் தீர்க்கவேண்டும். மேலும் பெருவந்தாளம், பள்ளிவாசல் பகுதிகளை விட்டுவிட்டால் மிச்சம் இருக்கக்கூடியது தமிழர்கள் வாழும் பிரதேசம்.

தண்ணீர் பிரச்னை சம்பந்தப்பட்டவரையில் தமிழர்களும், மலையாளிகளும் பிறப்பதற்கு முன்னாலேயே மேற்கு தொடர்ச்சிமலை இருந்திருக்கிறது, அரபிக் கடல் இருந்திருக்கிறது. மலையாளப் பகுதியிலிருந்து வந்து அரபிக் கடலில் வழும் ஆற்றுத் தண்ணீரை நாம் உபயோகித்திருக்கிறோம். ஆனால் மாட்டுப்பட்டி, குண்டலா, மூணறு ஆகிய ஆறுகளின் உற்பத்திஸ்தானம் அங்கே (மலையாளத்தில்) தான் இருக்கிறது. இவைகள் மூலம்தான் பள்ளிவாசல் மின்சார சக்தி உற்பத்தியாகிறது. திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தின் வருமானத்தில் ½ பங்கு இந்த தேவிகுளத்திலிருந்துதான் வருகிறது. தேவிகுளம் மிகுந்த வருமானம் தரக் கூடியதாக இருக்கிறது. ஆகவே தேவிகுளம் மிகுந்த ஆதரவு உள்ளதாக இருக்கிறது என்ற ஒரு எண்ணம் மலையாளிகளிடையே உருவாகிக்கொண்டிருக்கிறது. அதேசமயத்தில் இன்றைக்கு மொழிகள் அடிப்படையில் ராஜ்யங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற ஜனநாயகக் கொள்கையைப் பார்க்கும்போது மேற்குத் தொடர்ச்சிமலை இரண்டு ராஜ்யங்களுக்கும் பொதுவாக இருக்கிறது. கம்பம், கூடலூர், வண்டிப்பெரியாறு ஆகிய இடங்களில் மக்கள் "கன்டி" பேசுகிறார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னைய சமாதான முறையில் தீர்க்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். எந்த முடிவு வந்தாலும் அதற்கு நாம் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்தப் பிரதேசம் நமக்குக் கிடைத்தால் இந்தப் பக்கம் வரும் தண்ணீர் நமக்குக் கிடைக்கும். ஆகையால் நம்முடைய "கேஸ்" பலமாக இருக்கும் என்று சொன்னார்கள். தண்ணீரின் உற்பத்தி ஸ்தானம் அங்கே இருந்தாலும் இங்கே உபயோகப் படுகிறது. அப்படிப் பார்க்கும்போது காவேரித் தண்ணீர் கூர்க்க நாட்டிலிருந்து செல்வதால் அங்கே அந்த நதியைத் தேக்கிவிடவேண்டுமென்று சொன்னால் அதில் நமக்குப் பிரயோஜனம் இல்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தத் தண்ணீரை அங்கு உபயோகிப்பதற்கு இடம் இல்லை. அது நேரே கடலில் போய் விழுகிறது. அங்கே உபயோகிப்பதற்கு நிலம் இருந்தால் அப்போதுதான் அதைப்பற்றி யோசிக்கமுடியும்.

SRI P. JEEVANANDAM : ஆகவே அந்தமாதிரி நாம் விவாதிப்போமானால் நாமும் கேரள மக்களும் ஒன்றுகச் சேர்ந்து, நாமும் வாழ்ந்து, அவர்களும் வாழ்ந்து, இந்தியா ஒன்றுகப் போவதற்கு உதவ புரியாது, நமது சகோதர கேரள மக்களை "கன்வின்ஸ்" பண்ணும் விதத்தில் இந்த கொள்கை இருக்காது.

இன்றைக்கு இந்த கமிஷன் ரிப்போர்ட் நமக்கு பிரதிகூலமாக இருக்கிறது. தமிழர்கள் நிறைய இருக்கக்கூடிய பிரதேசம் நமக்குக் கிடைக்க முடியாதபடி இருக்கிறது. இதைப் பார்க்கும்போது இந்த ராஜ்யத்தில் இருக்கும் மக்கள் பயப்படுகிறார்கள். இருந்தாலும் இந்திய யூனியனிலேயே நாம் இருப்பதால் எங்கு இருந்தாலும் கவலையில்லை என்று சொல்லப்படுகிறது. எல்லா ராஜ்ய மக்களும் வளருவதற்கு எல்லாவிதத்திலும் நாங்கள் உதவியாக இருக்கிறோம். ஆகையால் தென்னிந்தியாவைப்பற்றி கவலையில்லை என்று சொல்லப்படுகிறது.

எனவே இப்பொழுது மக்கள் அதைப்பற்றி கவலைப் படக்கூடாது. மக்கள் கவலை இல்லாமல் வாழ்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். அதற்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கவேண்டும். அப்படி வசதி

21st November 1955] [Sri P. Jeevanandam]

கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நம்பிக்கை மக்களுக்கு இருக்கவேண்டும் என்றால் சமாதான முறையில் பிரச்னையைத் தீர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். ஏற்கெனவே சிக்கலாக இருக்கக்கூடிய இடங்களில் ஜனநாயக முறையில் சிக்கல்களை தீர்க்க ஏற்பாடு செய்யவேண்டும். அந்த முறையில் சிக்கல்களைத் தீர்த்தால் அதைப்பற்றி ஆட்சேபனை இல்லை. தாலுகாக்களைப் பொருத்த வரையில் இரண்டு சர்க்கார்களும் ஹை பவர் கமிட்டிக்குப் போகப்போகிறார்கள். அதன் பிறகுதான் அதைப்பற்றிய விவரம் தெரியும். அதன் முடிவு அந்தக் கமிட்டியின் சிபாரிசு வந்த பிறகுதான் தெரியும். (நேரம் முடிந்து விட்டதென்று கனம் சபாநாயகரால் மணி அடிக்கப்பட்டது.) இன்னும் ஒரே ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். தண்ணீர் விஷயம் பொறுத்த வரையில், மின்சாரம் விஷயம் பொருத்த வரையில், நீர்பாசன விஷயம் பொருத்த வரையில் உள்ள எல்லா பிரச்னைகளிலும் எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளைத் தீர்ப்பதற்கு மக்கள் எல்லோரும் சகோதர மனப்பான்மையில் விவாதித்து அதற்கு வேண்டிய பரிகாரம் தேடவேண்டும். அதற்கு உதவி செய்வதற்கு அங்குள்ள மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்குத் தகுந்த முறையில் பேச்சு இருக்கவேண்டும். ஜனநாயக முறைப்படி சமாதான முறையில் அவைகளைத் தீர்க்கவேண்டும். அப்படித் தீர்க்கவும் முடியும். அப்படித் தீர்ப்பதற்கும் முயற்சிக்கவேண்டும். இது என்னுடைய கருத்து. இவைகளில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் சமாதான முறையில் அவைகளைத் தீர்க்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுவரையில் கனம் ஜீவானந்தம் பேசியதை கேட்டு வந்தேன். அவர் பேசியதில் முன்னுக்குப் பின்னால் முரணாக இருப்பதாக தெரிகிறது. மணியகாரருடைய மாடு முன்னால் பார்த்தால் ஒரு மாதிரியாகவும் பின்னால் பார்த்தால் வேறு மாதிரியாகவும் இருக்கும் என்று சொல்லுவார்களே (ஒரே சிரிப்பு) அதைப்போல் இருக்கிறது. பீர்மேடு, தேவிகுளம் முதலியவைகள் நம்முடைய ராஜ்யத்துடன் சேரவேண்டும் என்பது அவருடைய கருத்தா அல்லது அவைகளை திருவாங்கூருடன் சேர்க்கவேண்டும் என்பது அவருடைய கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன். அந்த அபிப்பிராயத்தை தெரிவித்தால் அதன்மேல் நான் பேசும்போது பதில் சொல்வதற்கு சௌகர்யமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

SRI P. JEEVANANDAM : என்னுடைய பேச்சை கவனித்தால் ஒரு முடிவிற்கு வர முடியும். அவைகள் நம்முடன் இருக்கவேண்டுமா அல்லது திருவாங்கூருக்குப் போகவேண்டுமா என்ற பிரச்னையைத் தீர்ப்பதற்கு பல சிக்கல்கள் இருக்கின்றன. அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முன் சகோதர அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி செய்யவேண்டும். அங்குள்ள பிரச்னை ரொம்பவும் சிக்கலாக இருக்கிறது. இரண்டு பக்கத்திலுள்ள ஜனங்களின் நிலைமையை கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைப்பற்றி பேசும்போது அங்குள்ள பார்டர் முழுதும் குறிப்பிட்டேன். கிராமத்தை யூனிட்டாக எடுத்துக்கொள்ளவேண்டும். தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி குறிப்பிட்டு விட்டேன். இவைகளைப்பற்றி பேசிக் கொண்டிருந்தால் அங்குள்ள சிக்கல்கள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டு போகும். அதனால் சகோதர முறையில் அவைகளைத் தீர்க்க வேண்டும். சிரமம் இல்லாமல் மக்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு இந்த சிக்கலைத் தீர்க்கவேண்டும். இந்த சர்க்காரும் அந்த சர்க்காரும் சேர்ந்து இங்குள்ள கட்சிக்காரர்களும் அங்குள்ள கட்சிக்காரர்களும் சேர்ந்து சகோதர முறையில் பேசி கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்படி சமாதான முறையில் பேசி தமிழ் பிரதேசம் தமிழ் பிரதேசத்துடனும் மலையாளப் பிரதேசம் மலையாளப் பிரதேசத்துடனும் போகவேண்டும். தாலுகா என்று பேசக்கூடாது. இரண்டு பேர்களுக்கு சௌகர்யம் எற்படும் முறையில் பேசி முடிவு காணவேண்டும். ஜனநாயக முறையில் சமாதான முறையில் பேசி நியாயம் வழங்கவேண்டும். அதில் கொஞ்சம் சிரமம் தான் இருக்கிறது. நல்ல முறையில் இந்தப் பிரச்னையைத் தீர்க்க

[Sri P. Jeevanandam] [21st November 1955

அங்குள்ளவர்கள் முயற்சிக்கிறார்கள். அதனல்சமாதான முறையில் பேச்ச வார்த்தைகளை நடத்தலாம். மக்கள் நமக்கு அனுகூலமாக இருப்பார்கள். அவர்களுடைய பிரதேசம் நமக்கு வேண்டாம். ஒன்றையும் மறைத்து வைத்துப் பேசவேண்டாம். ஒன்றையும் மறைத்து வைக்காமல் பேசினல் நல்ல நிலைமைடைக் காண்பதற்கு வேண்டிய நிலைமை ஏற்படும். இதையே கம்யூனிஸ்ட் கட்சியும் கருதுகிறது. நானும் கருதுகிறேன். இரண்டு பேர்க ளுடைய கருத்தையும் கேட்டால் இதை சுமுகமாக தீர்க்க முடியும் என்பது கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்து என்னுடைய கருத்தும் கூட.

3-25 p.m. * RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD : Mr. Speaker, Sir, I must felicitate the Hon. Leader of the House for having stated the case for the Tamil areas in the South to be added to the small fragmented State of Madras. I am one of those who regret the future size of the Madras State vis-a-vis Indian politics. In a way there is no use of wasting time in discussing it or repenting over what has happened. Now at least, there is a strong case for the addition of the Tamil areas in the South to this State. The Hon. Leader of the House has made out a very good case and it should be our wish and prayer that he would continue his fight in Delhi and win the case for the Tamilians. The Hon. Minister has stated that we should do it in a peaceful manner. It is a notorious fact that we in the South are permanently peaceful with regard to our representations unlike those in the other parts of India. I am afraid Delhi has not cared for the South because it puts forward its representations in a peaceful manner. I think it is time that Madras tells Delhi that just because we are accustomed to doing things in a peaceful way we should not lose our case. There is a limit to one's patience. It will not take long to foment trouble in the South if needed. I do sincerely hope that it will not be necessary to take that step. The Hon. Leader of the House who has put forth his case in a very persuasive manner will succeed in his attempt. This should be done as early as possible, for we see in the newspapers that the Chief Minister of Travancore-Cochin State and his associates are very active in making representations at Delhi. There is a feeling in Madras that the Madras Government are not taking as much steps as the Travancore-Cochin Government are taking in this connection. In reality it may not be so. From the way the Hon. Leader of the House has made his case to-day, we should presume that he must have sent his written case already to Delhi. Information should be given to the newspapers about the steps taken by the Government and it is very necessary to publish in the papers and the Madras Government should send a Cabinet Delegation immediately to Delhi to make the Government at Delhi accede to our demands made already.

A very pertinent question was put by the Hon. Leader of the House to my Friend Sri P. Jeevanandam. The latter has not clearly answered the point. Am I right in presuming that he is for the addition of the Tamil taluks, Devikulam and Peermede to Madras State?

21st November 1955]

SRI P. RAMAMURTHI : I will answer the point . . . Since this is a very important question, with your permission, Sir, I wish to intervene. As far as the Communist Party is concerned, its position on the whole question of reorganization is . . .

SRI V. BALAKRISHNAN : On a point of order, Sir. It was a direct question that was addressed to Sri P. Jeevanandam who just now spoke. How is it right and proper for the Leader of the Opposition to get up and . . .

SRI P. RAMAMURTHI : As far as the position of the Communist Party on this question of reorganisation of States and on this question of borders is concerned, it is very clear. The Communist Party . . .

MR. SPEAKER : I am afraid that if the hon. Leader of the Opposition is to explain the position of the Communist Party in the middle of a speech of the other Member it will not be in order. I will request the other hon. Member to continue his speech unless it is a matter of elucidation of a particular point.

SRI P. RAMAMURTHI : The only point that the Communist Party wants to urge on this question is this. On a question like this where, unfortunately, heat has been raised on both sides it may not be politic at a particular moment to give a definite answer to that question which will only add to the inflammation that is already there. In view of the fact that this question has got to be solved in a particular way, we ask for a new approach to be made so that understanding of the people itself might change. We want that that approach should be from the point of view of contiguity, from the point of view of language composition of the majority of the people on the basis of village and at the same time taking into consideration certain interests which are involved on the understanding that both of us want to serve the interests of the other and that no nationality wants to develop at the expense of the other nationality. If both these points of view are taken into consideration, then a solution can be found.

3-30 p.m. * RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD : I am very glad that the hon. the Leader of the Opposition has made the point clearer than my friend Sri Jeevanandam. I can understand the way in which the Hon. the Leader of the House has put it. His views are very clear. He is for the addition of the Tamil areas with Madras State, but he wants to please the other group in Travancore-Cochin also and wants to appease them. There is no use of my continuing the point any further except to say that there is a consensus of opinion even from the other side to the effect that they are for the addition of Tamil areas on the ground that the language spoken in those areas is predominantly Tamil and the people there are predominantly Tamilians.

On the question of population, Sir, the Hon. the Leader of the House has given the statistics and let me not take up the time of the House by repeating them. It is abundantly clear that the

[Raja Muthiah Chettiar of Cheesinad] [21st November 1955

question of floating population applies more to the other side than to our side. If at all there is a floating population in Travancore-Cochin and people have migrated to that place, it is only by the usual process of addition in population once in ten years. It is not by any other process. That being so, there is a strong case for the integration of Peermede and Devikulam with Madras State. The arguments advanced in the Report are many and I can only characterise them as a " mixture " or " chow chow ". By using one argument in one place the Commission have come to some decision and by using the same argument at another place they have come to a different decision. There is no rationale at all, though the sub-heading given is " Rationale of Reorganisation ". That is my humble opinion. In one place they say that the language spoken should be the criterion. In another place they say that financial and economic considerations should be the test. The most important reason advanced for the inclusion of Peermede and Devikulam taluks in Travancore-Cochin is economic consideration. They concede the other points. But at the end of their Report where the conclusions have been summarised, they say that economic consideration alone shall not be the guiding factor as against regional and linguistic considerations. So economic viability is not the main consideration. They are evidently right. Most of the States in India are not economically viable. They have all to depend upon the support of the Government of India. What does it matter if the Government of India helps one State to the tune of Rs. 10 crores or Rs. 15 crores? If they can give Rs. 10 crores, they can as well give Rs. 5 crores more. This being conceded in another part of the Report, there is no case for the inclusion of Peermede and Devikulam taluks in the proposed Kerala State and I feel very strongly that this argument will not hold good any further.

Further, the labour population in Peermede and Devikulam taluks is predominantly Tamil and they have practically settled there permanently. What is the case in Ceylon? They have settled in Ceylon permanently and they have got their children and grand-children. The same is the case here also. The people in Devikulam and Peermede have no homes in the present Madras State. They have their homes in those areas. There is no justification in saying that they are a floating population. The arguments advanced by the Hon. the Finance Minister in respect of these areas are fool-proof and I do hope that the Government of India will pay heed to them. What does it matter if the Kerala State has to get a few crores of rupees more from the Central Government? We shall all be happy if they get it.

This House is composed of a very interesting set of Members whom we will be losing after a year. Particularly, the Members of Malabar have really enriched the proceedings of this House from time to time and they have helped to the progress of the old State and the present State. Of course, I can understand the embarrassing position in which they are. I may even say that it is no embarrassment at all. They are going to a new State.

21st November 1955] [Raja Muthiah Chettiar of Chettinad]

Some of them are not very keen about the new State and really want to stay in the Madras State, because they do not know where they will be in the new State. We really sympathise with them.

SRI K. C. GOPALAN UNNI : We know where we will be!

* RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD : It may be that some Members coming from Malabar may know where they will be, but there is a genuine apprehension on the part of a certain section. It may be a minority. I was about to pay a compliment in one minute, but the hon. Member has interrupted me. Perhaps he did not want to receive a compliment from me. If he had waited for one more minute, he would have received my compliment. The Members from Malabar should take a dispassionate view so far as Peermede and Devikulam taluks are concerned. I am only pleading for more support for Mr. Jeevanandam's point of view. After all, these two taluks are not going to really affect the people in Malabar, who are going to leave us shortly. That they should take a dispassionate view and that they can have no embarrassment was the compliment I was about to pay to the Members representing Malabar in the present Assembly.

Mr. Speaker, Sir, I do not want to refer to any other question except to say that the case put forward by the Hon. the Leader of the House is a fool-proof one. That is should succeed is my prayer and wish.

There is one other small matter with regard to Palghat and Chittur taluks. It may be that a few villages are not purely Tamil. Excluding them, I think there is a very good case for the other areas in the Madras State being added to the Coimbatore district. The Hon. the Finance Minister has referred to the forests in Kollegal and Kollengode. I need not take up the time of the House by repeating them. My main point is about Devikulam and Peermede taluks. They are predominantly Tamil-speaking areas and their integration with Madras State will conduce to the harmonious working and development of that area.

SRI K. P. GOPALAN : Sir, regarding the States Reorganization Commission's Report, I have to make the following observations. Firstly it is a big victory for the movement for the formation of linguistic States, it is a victory for the democratic movements in our country. Secondly the Commission have recommended the removal of the distinction between Part A, Part B and Part C States and the abolition of the institution of Rajapramukhs. Thirdly, the Commission have been forced to accept fourteen States out of sixteen on a linguistic basis. As far as the southern States are concerned, I am of opinion that it is a big victory for the people of the States of Tamilnad, Kerala and Karnataka. We are able to achieve this victory because the people and the political parties in all these States stood unitedly in the fight for the formation of linguistic States. That is why I say that

3-40 p.m

this is a big victory for the people of all these States. It is well-known that during our struggle for freedom against British imperialism, we were able to unite our people and thus achieve freedom for our country. After the attainment of freedom, the movement for the formation of linguistic States grew up, and we were able to present a united front in that movement. That unity was achieved by all the people in the various States in India. The main and important question now is how we should preserve that unity. The point of view from which I look at the Commission's Report is how we should make this unity a lasting one and how we can solve this problem of linguistic States amicably. The Communist Party wants to develop this unity not only in the States but in the whole of India. That has been the view and the standpoint of the Communist Party in the past and that will be the view and the standpoint of the party in future also. You know why we lay stress on this point. If the people of Tamilnad, Kerala and Karnataka want to make any advance, surely there must be industrialization. For industrialization there must be overthrow of feudalism and confiscation and nationalization of British properties, etc. To achieve these objectives, there must be united effort by the people in the various States in India. Only after we achieve these things, the condition of our people can be made better.

The question that now arises for consideration is how we should settle the border issues. When I heard the speech of the Leader of the House, the Hon. Sri C. Subramaniam, I was reminded of a Malayalam proverb which means that the devil is quoting the scripture. I was very glad to hear him speak about unity and other things. But he ended in a most chauvinistic way. Such an attitude will never help the people of Tamilnad or Kerala or Karnataka. We have to solve this border question in a very friendly and compromising manner. When the question of the formation of the Andhra linguistic State came up before this Assembly, we adopted two formulas. One is that village should be taken as the unit for the purpose of division and the other is that assets and liabilities should be divided on a population basis. At that time I was happy that the Msdras Government had acted wisely in accepting these formulas.

The Hon. Sri C. Subramaniam wants to see that the Kollengode forest goes to Tamilnad, if possible. As far as I am concerned, I can state here that the people of Kerala never want an inch of territory which should belong to others and they will never give up an inch of territory which should belong to them. They want to settle every dispute amicably and in a friendly manner on the basis of certain principles. The Hon. Sri C. Subramaniam was talking about the issues regarding the Karnataka State. I can state here that the issues regarding the Karnataka territory can be settled without any trouble. Our party has agreed that village should be taken as the unit. If, in any village, there is a majority

of Kannada-speaking people, certainly it will go to the Karnataka State, and if in any village there is a majority of Malayalam-speaking people, it will go to the Kerala State.

SRI K. VINAYAKAM : What does the hon. Member say about Devikulam?

SRI K. P. GOPALAN : I will come to that.

Speaking about the Karnataka State, the Hon. Sri C. Subramaniam referred to the difference in the land tenure system between the northern part of the South Kanara district and the southern part of that district. Why should he not apply the same principle to Gudalur? He looks at the whole problem on a different basis. Really he never wants to bring about unity between the Kerala and the Karnataka people. That is what I feel. He put forward a very wonderful argument. He said that, because there were water resources in Devikulam and Peermedetaluks, that area must go to Tamilnad. As far as that question is concerned, I will give my opinion after some time. Everybody knows that there is the Periyar in that area and a portion of Tamilnad is benefited by the waters of that river. Whatever water resources are required for Tamilnad is a matter for negotiation between the Madras Government and the Kerala State Government. The people of Kerala will never stand against giving water to Tamilnad, if there is surplus water. The Finance Minister says, if there are water resources in an area, that area must go to Tamilnad; if there are forests in Kollengode, that area must go to Tamilnad. This is a most chauvinistic approach. I hope that every patriot in Tamilnad, Kerala and Karnataka will oppose this argument, because this is a most chauvinistic argument. I never expected such an argument to come from the Finance Minister.

3-50 p.m.

Regarding Devikulam and Peermede, I have to represent here the feelings of the Kerala people. I will give my opinion also. Unfortunately or fortunately, there is such a feeling in Kerala that they should not go to the Tamil State. I know, as a matter of fact, that there is such a feeling in Tamil Nad also and that some interested people are fomenting the differences between the peoples of Tamil Nad and Kerala on this question. Even persons like our hon. Member Sri Kuttikrishnan Nair want that the whole report should be shelved and that Dakshina Pradesh should be formed. But the Congress Working Committee has taken a very firm decision. After this, the hon. Member Sri Kuttikrishnan Nair says, 'As an obedient man, I will plead for the formation of the Kerala State and other States'. So, even now, there are some people who have no democratic feelings for the formation of linguistic States. Those interested people, backed by the bigger monopolists and landlords of our country, do not want the formation of linguistic States. They are even now wanting to shelve the Report and to see that no linguistic State comes into being either as Kerala or Tamil Nad or Karnataka. So, how are we to solve this problem? Regarding Peermede and Devikulam, I know for certain that there are some places in these areas where the workers come mostly

[Sri K. P. Gopalan] [21st November 1955

from Tamil Nad. There are also some places where the Kerala people are predominant. The Hon. Sri Subramaniam has given some facts and figures. I can also quote some facts and figures. But facts and figures may be right or wrong. So, I do not want to enter into a dispute on that question. As far as I am concerned, I feel that the whole question must be settled amicably. Isolated pockets should be avoided. The village should be the unit for consideration and partition of the village should be avoided. Due consideration should be given to the needs of Kerala as regards the water resources and power potential that are there in of Devikulam and Peermede taluks for irrigation, power as well as to the revenues that the Travancore-Cochin State is now getting through these two taluks.

As far as Kerala is concerned, as far as Malabar is concerned, I am not bothered when the High Power Commission takes a decision. We will accept that decision. We will approach the problem in a very reasonable and friendly way so that the passions of the people may not be roused. In doing so, I have to say a few things. As far as Kerala is concerned, I need not say here that it is a very backward area. Even in the Report of the Commission, they have made some recommendation in the last pages how the industries should be located and how a backward nation should be helped. They have also recommended that it is the primary duty of the Union Government to see that the standard of all backward nationalities is raised. I accept *in toto* all the recommendations regarding these matters. Even now I can understand the feelings in Tamil Nad. There is a feeling among the Malayalee officers—I do not know whether I am correct or not—that they are not confirmed. So, we have to consider the problem in a calm way.

THE HON. SRI C. SUBRAMANIAM: I may assure the hon. Member that there is absolutely no basis for this very unjust allegation.

SRI K. P. GOPALAN: It is not an allegation. I am thankful to the Hon. Minister for removing my doubt.

From the speech of the Hon. Minister I find that the Government gave some opinion of theirs to this Commission. There is also a wide talk in Malabar that the Congress Government in Madras State gave some memoranda to this Commission regarding Gudalur, Devikulam, etc. I am not bothered even if a Minister gives his individual opinion to the Commission. But if the Government gave some opinion or memoranda to the Commission (in the name of the Government), then I want to submit that they did not get the consent of this Assembly. This Assembly will not be responsible for such things. We will never agree to it because this Assembly was not consulted. They have not taken the opinion of the people of the whole State. We would never be a party to that memorandum even if it be given by the Hon. the Chief Minister or the Hon. the Finance Minister.

21st November 1955] [Sri K. P. Gopalan]

Now, we must take the village as a unit. My hon. Friend Sri Jeevanandam has very clearly explained the position. Even in Chittoor, Noyyatrankarai and Shenkottah, if there are villages where Tamil-speaking people are in a majority, I can straightaway say that they should go to Tamil Nad. As far as we are concerned, we will never hold the view expressed by the Hon. the Finance Minister. His view is a very crude one. I can state here that he will never stand for the unity of either the Tamil people or the Kerala people or for the unity of India. We shall state here that the Kerala people, Tamil Nad people and others stand for a strong Union Federal Government. All of us, whether we belong to the Congress Party or the Communist Party, must fight against disruption and any commotions which may disturb peace. With these few words, I resume my seat.

SRI M. CHADAYAN: മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, സംസ്ഥാന പുന സ്സംഘടനാ കമ്മീഷൻ റിപ്പോർട്ടിനെ ആൻ സാഗോതം ചെയ്യുന്നു. മലബാർ ജില്ല മുഴുവനും കാസർഗോട്ട് താലൂക്ക് മുഴുവനും ഗൂഡലൂരും തിരുവിതാംകൂർ-കൊച്ചി സംസ്ഥാനം മുഴുവനും ലക്കടീപും കൂടിച്ചേർന്നതായ കേരള സ്റ്റേറ്റാണ് മലയാളികൾ ആഗ്രഹിച്ചത്. തമിഴ്നാട്ടിനോട് ചേർക്കാൻ കമ്മീഷൻ ശിപാർശചെയ്തിരിക്കുന്ന തെങ്കാശി തിരുവിതാംകൂറിലെ കുറച്ച് താലൂക്കുകളും കേരളസംസ്ഥാനത്തിൽതന്നെ ഉൾപ്പെടുത്തിരിക്കണമെന്നാണ് എന്റെ ബലമായ അഭിപ്രായം.

മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, മോയുടെ അഭിസംബോധനത്തിൽ ഒരു കേരള സംസ്ഥാനം രൂപീകരിക്കണമെന്ന് മലയാളികൾ വളരെക്കാലമായി ആവശ്യപ്പെട്ടുകൊണ്ടിരിക്കയാണ്. കേരളസംസ്ഥാനത്തിന് പല പ്രശ്നങ്ങളും പരിഹരിക്കാനുണ്ട്. കേരള സ്റ്റേറ്റിന്റെ സാമ്പത്തികനില വളരെ മോശവുമാണ്. വിദ്യാഭ്യാസപരമായും സാമ്പത്തികമായും വ്യാവസായികമായും മറ്റെല്ലാ പ്രകാരത്തിലും പിന്നോക്കം നില്ക്കുന്ന ഒരു പുതിയ സ്റ്റേറ്റാണെല്ലോ കേരളം. ഹരിജനങ്ങളും മറ്റു പിന്നോക്ക സമുദായങ്ങളും വിദ്യാഭ്യാസപരമായും സാമ്പത്തികമായും ഇന്നും പുരോഗമിച്ചിട്ടില്ല. അവരെല്ലാംതന്നെ പുതിയ കേരള സംസ്ഥാനത്തെ ആശ്രയിച്ചുകൊണ്ടിരിക്കയാണ്. കാസർഗോഡ് താലൂക്കിനേയും തിരുവിതാംകൂർ-കൊച്ചിയേയും വെട്ടിമുറിച്ചുകൊണ്ടുള്ള ഒരു ചെറിയ കേരള സംസ്ഥാനമല്ല ഞങ്ങൾക്ക് വേണ്ടത്. ഒരിഞ്ച് സ്ഥലംപോലും കേരളത്തിനിന്നു തമിഴ് സംസ്ഥാനത്തിൽ ചേർക്കാൻ വിട്ടുകൊടുക്കുന്നതു ഞങ്ങൾ സമ്മതിക്കുകയില്ല. മലബാർ മുഴുവനുമായി അഭിമുഖീകരിച്ചുകൊണ്ടിരിക്കുന്നത് ഞങ്ങൾ മുമ്പിലിരുത്തിക്കൊണ്ടിരിക്കുമ്പോൾ ഒരു പുതിയ കേരളസംസ്ഥാനം ഉടലെടുക്കുന്ന ഈ അവസരത്തിൽ തിരുവിതാംകൂർ-കൊച്ചിയിലെ തെക്കുള്ള താലൂക്കുകളും ഗൂഡലൂരും പാലക്കാടും വേർപെടുത്തി തമിഴ്നാട്ടിനോട് ചേർക്കുന്നു. കാസർഗോഡ് താലൂക്കിനെ പങ്കിട്ട കർണ്ണാടകസംസ്ഥാനത്തോട് ചേർക്കുന്നതുള്ള ശ്രമം ബഹുമാനപ്പെട്ട വിദ്യാഭ്യാസമന്ത്രിയുടെ പ്രസംഗത്തിൽനിന്നു ഞങ്ങൾക്ക് മനസ്സിലായിരിക്കയാൽ അതിൽ ഞങ്ങൾക്ക് ശക്തിയായ എതിർപ്പുണ്ട്. തിരുവിതാംകൂർ-കൊച്ചി സംസ്ഥാനവും മലബാർ ജില്ലയും കാസർഗോഡ് താലൂക്കും മുഴുവനും, ഗൂഡലൂർ താലൂക്കും ലക്കടീപുകളും ഉൾപ്പെടുന്ന ഒരു കേരള സ്റ്റേറ്റ് കൊണ്ടല്ലാതെ മലയാളികൾ തൃപ്തിപ്പെടുകയില്ല. മലയാളികളുടെ ബുദ്ധിമുട്ടുകളും പ്രശ്നങ്ങളും പരിഹരിക്കുന്നതിനു ഇങ്ങനെ ഒരു സംസ്ഥാനം രൂപീകരിച്ചു കഴിയുമ്പോൾ മാത്രമേ ഈ പ്രദേശങ്ങളെല്ലാം ഉൾപ്പെട്ട ഒരു നല്ല കേരള സ്റ്റേറ്റുതന്നെ ഞങ്ങൾക്ക് കിട്ടുന്നതിനും തമിഴ്നാട്ടിലെ ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിമാരും മറ്റു മെമ്പർമാരും ഞങ്ങളോട് സഹകരിക്കണമെന്നു ഞങ്ങൾക്ക് ഇടയ്ക്കിടയ്ക്കു നില്ക്കുവാനും ആവശ്യമായ സഹായം തന്നു ഞങ്ങളെ സഹായിക്കണമെന്നും ഞാൻ അപേക്ഷിക്കുന്നു. തിരുവിതാംകൂർ-കൊച്ചിയും മലബാറും കാസർഗോഡു, ഗൂഡലൂരും ലക്കടീപും വെട്ടിമുറിക്കാതെ ഒരു കേരളസംസ്ഥാനം രൂപീകരിച്ചുതരുവാൻ ഞാൻ അഭ്യർത്ഥിക്കുന്നു. ന്യൂനപക്ഷസമുദായത്തിന്റെ വിദ്യാഭ്യാസത്തിനും സാമ്പത്തികമായുള്ള ഉയർച്ചയ്ക്കും മറ്റും ആവശ്യമായ സഹായമെല്ലാം ചെയ്തുതരുവാൻ ഞാൻ പ്രതീക്ഷിക്കുകയും ചെയ്യുന്നു.

[21st November 1955

4-05 p.m.

Shri N. MAHALINGAM : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நாம் ராஜ்ய சீரமைப்புக் கமிஷனுடைய சிபாரிசுகளைப் பற்றி விவாதித்து இந்தச் சபையின் அபிப்பிராயம் அதைப்பற்றி என்னவாக இருக்கிறது என்பதை மத்திய சர்க்காருக்கு அனுப்ப வேண்டியவர்களாக இருக்கிறோம். ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் எந்த நோக்கத்தோடு இந்தக் காரியங்களை எடுத்துக்கொண்டதோ அதை வெற்றிகரமாக முடிக்கவில்லை யென்றே நான் கருதுகிறேன். முக்கியமாக அவர்கள் தங்களது யாதாஸ்தில், "மொழியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ராஜ்யங்களை பிரிக்க தாங்கள் முயற்சிக்கவில்லை. மொழி ஒரு காரணமாக இருந்தாலும் மற்ற பொருளாதார, நீர்வாக சௌகர்யங்கள் ஆகியவற்றையும் கணக்கில் வைத்துக்கொண்டே ராஜ்யங்களைப் பிரித்திருக்கிறோம்," என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் தென்னாட்டைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண்டால் மொழிவழி மாகாணங்களே இங்கே ஏற்படவேண்டுமென்று கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. தமிழ் நாடு என்று தனியாகச் சொல்லாவிட்டாலும் சென்னை என்றால் தமிழ்நாடு தான். ஆந்திர ராஜ்யம் ஏற்கெனவே ஏற்பட்டுவிட்டது. புதியதாக இன்னொரு தெலுங்கானா ராஜ்யம் கூட ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள். அதோடு தெலுங்கானாவும், ஆந்திராவும் சேர்ந்து ஒரு விசால ஆந்திர ராஜ்யம் அமைந்துவிடும்போலிருக்கிறது. ஆகவே தென்னிந்தியா பூராவும் மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் அமைந்துவிட இருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். அப்படியிருக்கும் போது தமிழ் மொழி பேசக்கூடிய சிலயிடங்களை மலையாளத்துடன் சேர்க்க சிபார்சு செய்திருப்பது மிகவும் பொறுத்தமற்றதாகும். முக்கியமாக தமிழ் பேசக்கூடிய மக்கள் மிக அதிகமாகவுள்ள பீர்மேடு, தேவிகுளம் தாலுக் காக்களை கேரள ராஜ்யத்துடன் சேர்ப்பதற்கு கமிஷன் சிபார்சு செயதிருபபது பொறுத்தமற்றது. அந்தப் பிரதேசத்தில் தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்றால் அங்கே கூலி வேலை செய்வதற்கு வரும் தமிழர்கள் தான் அதிகம். அந்தப் பிரதேசம் அவர்களுடைய நிரந்தர வாசஸ்தலமல்ல, ஆகவே அவை இரண்டும் கேரளத்துடன் சேர்ந்திருக்க வேண்டும் என்கிறார். இது மிகவும் தவறுதலான கருத்தாகும். பீர்மேடு தேவிகுளம் ஆகியவற்றில் இருக்கும் தமிழர்கள் அங்கேயே நிரந்தரமாக வசிக்கக் கூடியவர்கள். வாக்காளர் ஜாப்தாவில் அவர்களுடைய பெயர் அந்தப் பிரதேசத்திலேயே இருக்கின்றன. சென்ற பொதுத் தேர்தலிலும் அவர்கள் வாக்குப் பதிவில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரதிநிதிகள் இன்றைக்கு திருவாங்கூர்-கொச்சி சட்டசபையில் இருக்கிறார்கள். அப்படியிருக்கும் அந்தப் பிரதேசத்திலுள்ள மக்களை, அவர்கள் அங்கே நிரந்தரமாக வசிக்கக் கூடியவர்கள் அல்ல, கூலி வேலை செய்வ தற்காக வந்து போய்க் கொண்டிருக்கக் கூடியவர்கள் என்று கமிஷன் தெரிவித்திருக்கிறது என்றால் கமிஷனில் இலங்கையைச் சேர்ந்த சர் ஜான் கொத்தவாலாவே அங்கம் வகித்துவிட்டாரோ என்று எண்ண வேண்டி யிருக்கிறது. இந்த நாட்டில் எந்தப் பிரதேசத்தில் வேண்டுமானாலும், ஒரு மாத காலம் தொடர்ந்து வசித்தால் அவர்களுக்கு வோட்டுரிமை உண்டு என்பதாக நமது அரசியல் சட்டத்தில் நிர்ணயித்திருக்கும்போது, இந்தப் பீர்மேடு, தேவிகுளம் முதலிய பிரதேசத்தில் வசிக்கும் தமிழர்களை அந்தப் பிரதேசத்திற்கு அடிக்கடி வந்து போகும் கூலிகள் என கமிஷன் தன்னுடைய யாதாஸ்தில் எப்படி கூற முடியும் ?

அடுத்ததாக கோவை ஜில்லாவை எடுத்துக் கொண்டால் கோவையில் இருக்கக்கூடிய பிரதேசங்கள் சிலவற்றைப் பிரித்து கன்னடத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கொள்ளேகாலம் தாலுக்காவை மைசூருடன் சேர்த்துவிடவேண்டுமென்று சொல்லியிருக்கி றார்கள். கொள்ளேகாலம் தாலுக்கா பூராவிலும் கன்னடம் பேசும் மக் களே இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவ்வூருக்கு நீண்ட தூரம் காடுகள் வழியே செல்ல வேண்டும். அந்தப் பிரதேசம் கோவை யுடன் இணைந்து இருக்கக்கூடியது. ஆகவே அந்தக் காட்டுப் பிரதேசங்கள் எல்லாம் கோவையுடனேயே இணைந்து இருக்க வேண்டியவை.

21st November 1955] [Sri N. Mahalingam]

கோவைக்கு அடுத்தாற்போல் சித்தூர் தாலுக்கா இருக்கிறது. அங்கே தமிழர் மிக அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய காலாசாரத் தொடர்பு, பொருளாதாரத் தொடர்பு ஆகியவையெல்லாம் தமிழர்களோடு சம்மந்தப்பட்டதாகத்தான் இருக்கிறது. அதை இப்பொழுது கேரள நாட்டில் சேர்க்க சிபார்சு செய்யப்பட்டிருப்பது வருந்தத்தக்கது. சித்தூர் நகரம் வரையில் அந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் தமிழர்கள் தான். சென்ற 11, 12, 13-ந் தேதியில் தமிழர் இணைப்பு மகாநாடு நடைபெற்றது. பத்தாயிரத்துக்கு அதிகமான மக்கள் வந்து கூடினார்கள். இந்த சித்தூர் பிரதேசம் முழுவதும், பொள்ளாச்சி தாலுக்காவை ஒட்டி யுள்ள பிரதேசம் யாவும் தமிழ் ராஜ்யத்துடன் இணைக்கப்படவேண்டு மென்று அந்த மகாநாட்டில் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ் வாறாக மக்களுடைய எண்ணம் சித்தூர் பகுதி தமிழ் ராஜ்யத்துடன் சேர வேண்டுமென்று இருக்கிறது. அதைப் பொறுத்தவரையில் சில இராமங் களில் மலையாளம் பேசக்கூடியவர்கள் அதிகமாக இருக்கலாம். சென்சஸ் கணக்கை எடுத்துப் பார்த்தால் சரியாக இருக்காது. எனென்றால் அங்கே மலையாளம் பேசத் தெரிந்தவர்களையெல்லாம் மலையாளி என்று கணக்கு எடுத்துவிட்டார்கள். அவர்களெல்லாம் இரு மொழி தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். தமிழ் தெரிந்தவர்கள் எவ்வளவு பேர் என்று கணக் கெடுத்தால்தான் தமிழர்கள் எவ்வளவு பேர் என்ற கணக்கு நன்றாகத் தெரியும். தமிழ் நாட்டுடன் சேர்க்கப்படவேண்டிய பகுதிகளைக் கணக்கிட மதுக்கரையை மையமாக வைத்துக்கொண்டு தெற்கு வடக்கில் ஒரு கோடு போட்டால் அந்தக் கோடு சித்தூர் நகரத்திற்கே வந்து சேரும். மீஞ்சூர் புரத்திற்கு அருகில் மலையாளிகள் இல்லை. மீஞ்சிபுரத்தில் தமிழ் இணைப்பு மகாநாடு நடைபெற்றது. கொல்லங்கோடு, முதல்மடை பிர தேசம் பூராவையும் தமிழ்நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று கோரியிருக்கி றார்கள். சித்தூருக்கும், பொள்ளாச்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கி றது. ஆகவே கொள்ளேகால காட்டுப் பிரதேசங்களையெல்லாம் தமிழ் நாட்டுடனேயே சேர்க்கவேண்டும். ஆகவே அந்தப் பிரதேசங்களை தமிழ் நாட்டுடன் சேர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவசியம் சென்னை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆந்திர ராஜ்யம், கேரளராஜ்யம், தமிழ் ராஜ்யம் என்று ஏற்படுத்தும் பொழுதே தமிழ் பேசக்கூடிய பகுதிகளையெல்லாம் தமிழ் ராஜ்யத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக் கொண்டாகவேண்டும். ஆந்திர ராஜ்யம் ஏற்படுத்தப்பட்டபொழுது இவ்விஷயம் அவசரத்தில் கவனிக்கப்படாததால் பல தகராறுகள் எழுந்துள்ளன. சித்தூர் ஜில்லா விலுள்ள தமிழ் பிரதேசம், திருத்தணி பகுதி ஆந்திராவுடன் இருந்து வருகிறது. சில வருஷங்களுக்கு முன்னால் சித்தூர் ஜில்லா என்று தனியாகவே ஒரு ஜில்லா இல்லை. நிர்வாக சௌகரியத்திற்காக என்று தமிழ் பேசும் பகுதிகள் சிலவற்றையும் தெலுங்கு பேசும் பகுதிகள் சிலவற்றையும் சேர்த்து சித்தூர் ஜில்லாவை ஏற்படுத்திவிட்டு, அது பூராவையும் இன்றைக்கு ஆந்திராவுடன் சேர்த்திருப்பது சரியல்ல. இன் றைக்கு ஆந்திராவுடன் சேர்ந்த அந்த ஜில்லாவிலுள்ள தமிழ் பிரதேச மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பிரதேச மக்களிடையே சில ஆண்டுகளாகவே எல்லைக் கமிஷன் ஏற்படுத்தவேண்டுமென்ற ஊர்ச்சி இருந்தும், சென்னை அரசாங்கத்தார், ஆந்திர அரசாங்கத்துடன் நேரிடை யாகப் பேசி சுமுகமான முறையிலேயே இந்த பிரச்னைக்கு முடிவு ஏற் படுத்திவிடலாமென்று எண்ணியிருந்தார்கள். அந்த எண்ணம் தவறு என்பது இப்பொழுதுதான் நன்கு தெரிகிறது. பேச்சுவார்த்தையின்போது ஆந்திர சர்க்கார் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைக்கு ஒரு சிறிதளவுகூட சம்பந்தம் இல்லாத ஹோசூர் தாலுக்காவைப்பற்றிய பிரச்னையை எழுப்பி முடிவுக்கு வரமுடியாமல் செய்துவிட்டதோடு இப்பிரச்னையைத் தீர்க்க எல்லைக் கமிஷன் தான் நியமிக்க வேண்டுமென்பதாக முடிவு செய்துவிட் டார்கள். நீண்ட காலத்திற்கு முன்னதாகவே எல்லைக் கமிஷனை நிய மித்திருந்தால் இதற்குள் இப்பிரச்னை சுமுகமாகத் தீர்ந்திருக்கும். ஆந்திர ராஜ்யப் பிரிவினையின்போது அரைத்தையாக இருந்து தமிழ் பகுதிகளை கேட்டைவிட்டுவிட்டது போல், இன்றைக்கு மலையாள, கன்னட ராஜ்யங் களைப் பிரிக்கும்போது தமிழ் பகுதிகளை விட்டுவிடக்கூடாது. பிற ராஜ்யப்

பிரதேசம் நமக்கு வேண்டாம். அதைப்போல நம் ராஜ்யத்துடன் இணைந்து இருக்கவேண்டிய பிரதேசங்களை பிற ராஜ்யத்துடன் இணைத்துவிடுவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. ஆகவே இன்றைக்கு தகராறில் உள்ள தமிழ் பிரதேசங்களையெல்லாம் தமிழ் ராஜ்யத்துடன் இணைப்பதற்குப் போதுமான நடவடிக்கைகளை நம் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அந்தப் பகுதியில் வாழும் தமிழ் மக்களின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தேவிகுளம், பீர்மேடு விஷயமாக, அங்கே வாழும் தமிழர்கள் தற்கால வாசிகள்தான், அன்றுடம் வந்து போய்க் கொண்டிருக்கும் கூலி வேலைக் காரர்கள்தான் என்று ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் கூறியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. பொறுப்புள்ள கமிஷன் அம்மாதிரி தங்கள் யாதாஸ்தில் எழுதியிருப்பது தவறு என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

4-15 p.m.

*SRI S. THINAKARASAMI THEVAR: கனம் சபா நாயகர் அவர்களே, இன்றய S.R.C. கமிஷன் ரிப்போர்ட்டு, இன்று இந்த சட்டசபையின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த ரிப்போர்ட்டைப் பொருத்த அளவிலும் பீர்மேடு, தேவிகுளம், இவைகளைப் பொருத்த அளவிலும் சில முக்கிய விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் இப்போது பேசுவது உங்களிடத்திலே அழகாகவும் திறமையாகவும் பேசி உண்மையை மறைத்துக் கூறும் தோரணையில் இருக்காது. இந்த பிராந்தியம் ஏற்பட்டு, பல வருஷங்களாக, அந்த பிராந்தியத்திலே பழக்கம் உடையவன்; எனது பகுதியிலுள்ள பெரும்பான்மையான மக்கள் அந்த பிராந்தியத்திலே வாழ்க்கை நடத்துகிறார்கள். சுமார் நூறு வருஷங்களுக்கு முன்னதாக எங்கள் பகுதி மக்கள் அந்த பிராந்தியத்திற்குப் போய் அங்கே வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆகவே அந்தக்காரணத்தை முன்னிட்டு அந்த பிராந்தியத்தில் நேரடியாக தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் எனக்கு இருந்த காரணங்களைப்பற்றியும், நேரடியான விஷயங்களை நேரடியாகப் பார்த்துத்தெரிந்து அந்த விஷயங்களை, இப்போது இங்கு சொல்ல முன்வந்துள்ளேன். இந்த ரிப்போர்ட்டைப்பற்றி நான் பேசவில்லை. நேரடியாக நான் பார்த்த விஷயங்களை மாத்திரம் இங்கே சொல்லுகிறேன். முதலாவதாக இந்த ரிப்போர்ட்டில், பீர்மேடு, தேவிகுளத்தில் தமிழர்கள் 72 சத விகிதம், 44 சத விகிதம் இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பதினைந்து வருஷங்களுக்கு முன்னதாக நாங்கள் கணக்குப் பார்க்கும் போது 90 சத விகிதம், 51 சத விகிதம் தான் இவ்விரு பகுதிகளிலும் கணக்கெடுக்கப்பட்ட சென்ஸஸ் புள்ளிவிவரம். அதற்கு மாறுக, 72 சத விகிதம், 44 சத விகிதம் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அதிலே 1951-ம் வருஷ கணக்கைப்பார்த்தால் பாஷாவாரியாக பிரித்து புள்ளி விவரம் சேகரிக்கப்படவில்லை என்பது தெரியும், இன்னும் பார்த்தால் அந்த பிராந்தியத்தில் 10 சத விகிதமும், 30 சத விகிதமும் தான், மலையாளிகள் இருப்பதும் தெரியவரும். அதிலேகூட, அவர்கள் சாதாரண சர்க்கார் அதிகாரிகள், ஓட்டல் கீப்பர்கள், P.W. டிபார்ட்மெண்ட் தொழிலாளர்களாகத்தான் இருப்பார்கள். அவர்கள் பூர்வீகம் கூட கோட்டயம், செங்கனாசேரி. இந்த இடங்களாகத்தான் இருக்கும். சமீபத்தில் நடந்த தேர்தலில், இந்த பிராந்திய தொகுதிகளில், திருவாங்கூர் தமிழர் காங்கிரசின் சார்பாக நின்றவர்கள் தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இதுவும் ஒரு அத்தாட்சி. இங்கு, இதிலே அவர்கள் பூர்விகவாசிகள் அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் நூறு வருஷங்களாக அந்த பிராந்தியத்தில் குடியேறி இருக்கிறார்கள். இன்று நேற்று குடியேறியவர்கள் அல்ல, என்பதை சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன். அடுத்தார்போல் அங்கேயுள்ள ரப்பர், டீ, ஏலக்காய் தோட்டங்களில் வேலை செய்பவர்கள் நூற்றுக்கு 95 பேர் தமிழர்கள்தான். அவர்கள்கூட நூறு வருஷங்களாக, அந்த பிராந்தியத்தில் வசிக்கிறார்கள். அடுத்தார்போல், அந்த பிராந்தியத்தில் ஏலக்காய் தோட்டங்களை எடுத்துக்கொண்டால், நூற்றுக்கு 90 தோட்டங்கள் தமிழர்களுக்கு சொந்தமானது. நெல் சாகுபடியை எடுத்துக்கொண்டாலும் மறையம், கோபந்தநூர், பட்டவடை இவ்விடங்களிலெல்லாம் தமிழர்கள்தான் சாகுபடி செய்கிறார்கள். வியாபாரத்தை எடுத்

துக்கொண்டாலும் நம்மக்கள் தான் முழுக்கவும் நடத்துகிறார்கள். மலையாளிகள் அவ்வளவு வியாபாரம் செய்வதில்லை. மலைகளில்கூட பல ஜாதிக்காரர்கள் இருக்கிறார்கள். மன்னர், பலயம், மலங்காடு, பண்டாரம் என்ற ஜாதிக்காரர்கள் தமிழ்தான் பேசுகிறார்கள். அப்பிராந்தியத்திலே, நம் மவர்கள், ஆடு, மாடுகளைக் கொண்டு போய் மேய்க்கும் பாத்தியதையும் உண்டு. இங்கே இரண்டு ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. அதாவது மூணார், கொச்சின் ரோடுகள். இந்த ரோடுகள் போடுவதற்கு முன்னதாக, இப்பிராந்தியத்தில் மலையாளிகளே கிடையாது. ரோடுகள் போட்ட பிறகுதான் அங்கு மலையாளிகள்வர ஆரம்பித்தார்கள். பீர்மேட்டிலிருந்து கோட்டயத்துக்கு இந்த ரோடு போட்ட பிறகுதான் மலையாளிகள் வந்தார்கள். அதற்கு முன் தமிழர்கள்தான் அங்கு இருந்தனர். அந்த ரோடுகள் போட்ட பிறகு அங்கு மலையாளிகள் குடியேறிக்கொண்டு, இன்று அந்த இடங்கள், தங்களுடையதென்று பாத்தியதைகொண்டாடுகிறார்கள். ரேஷன் காலத்தில், அரிசி இல்லாமலிருந்தபோது, கோயம்பத்தூர்காரர்களும், மதுரை காரர்களும்தான் அந்த பிராந்தியத்திற்கு அரிசி அனுப்பி உதவி செய்தார்கள். அதற்கு எவ்வளவு தூரம் நன்றி காட்டுகிறார்களோ தெரியவில்லை. பூகோள ரீதியாக பார்த்தால்கூட, அது சென்னை மாகாணத்துடன் தான் சேர்ந்திருக்கவேண்டும். இயற்கை அமைப்பும் அப்படித்தான் இருக்கிறது. சென்னையுடன் சேருவதாகத்தான் இருக்கிறது. பெரியகுளம் தாலுக்காவுடன்தான் சேர்ந்திருக்கிறது. அங்கு வருமானம், விசேஷமாக இருக்கிறது. தேயிலை தோட்டங்கள் முதலியன இருக்கின்றன. ஆனால் செலவு ஒன்றும் கிடையாது. வருமானத்தில் நான்கில் ஒரு பங்குகூட அத்தோட்டங்களுக்காக செலவு செய்யப்படுவதில்லை. தவிர பெரியாறு, நல்லாறு, பம்பையாறு, இந்த நதிகளின் தண்ணீரை உபயோகப்படுத்திக்கொள்ள அங்கு நிலங்களும் கிடையாது. சென்னை ராஜ்யத்தில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. ராமனாதபுரம் பஞ்சப் பிரதேசம், மழையும் கிடையாது. அந்த தண்ணீரை இங்குள்ள நிலங்களுக்கு உபயோகப்படுத்தி நல்ல சாகுபடி செய்யலாம். மின்சாரத்தை எடுத்துக்கொண்டாலும், அங்கு உற்பத்தியாகும் எல்லா மின் சாரத்தையும் அப்பகுதி மக்களால் உபயோகப்படுத்தப்படுவதில்லை. உபயோகப்படுத்தவும் முடியாது. அந்த மின்சாரத்தை தமிழ் ஜில்லாக்களுக்கு உபயோகப்படுத்தலாம். இப்படி இங்கு தேவைகள் இருக்கின்றன. இது போதாதென்று, இப்போது நம் சர்க்கார், சில திட்டங்களை Investigation செய்ய ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. தேச சுபிட்சத்திற்கு இது மிகவும் அவசியம்தான். இந்த ஒரு கோடி ரூபாயும் செலவழித்து, அந்த பிராந்தியத்திலுள்ள நதி தண்ணீரை, சமுத்திரத்தில் வீணாக போய் விழாமல், தமிழ் நாட்டுக்குத் திருப்பி, இங்கு சாகுபடிக்கு உபயோகமாகும்படி செய்யவேண்டும். அந்த பிராந்தியத்திலுள்ள மின்சார சக்தியை தமிழ் ஜில்லாக்களிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் அனுபவிக்கலாம். ஆகையினாலே, இந்த மாதிரி பலவிசேஷமான காரணங்கள் இருப்பதால் இந்த பிராந்தியம் தமிழ் நாட்டுடன் சேருவதுதான் பொருத்தம். அப்படி இல்லாமல் மலையாளப் பகுதியுடன் சேர்ப்பதென்றால் அதிலே நியாயமிருக்காது. நியாயமில்லாவிட்டாலும், நியாயம் செய்யாவிட்டாலும், அநியாயத்தை தடுக்கவேண்டும். இந்த இரண்டுமில்லாமல் அந்த பிராந்திய நதித் தண்ணீரை சமுத்திரத்தில் கொண்டு போய் விடுவது, பகுத்தறிவுக்கு பொருத்தமாக இல்லை. வீணாக நஷ்டம்தான். ஆகையினாலே இதில் எல்லோரும், கேரள நண்பர்கள் எல்லோரும் விசேஷ ஒத்துழைப்புக்கொடுத்து பீர்மேடு, தேவிகுளம், இந்த பகுதிகள், சென்னை ராஜ்ஜியத்துடன் சேர்க்கவேண்டும். நாங்கள் சுபிட்சமாக இருப்பது உங்களுக்கும் நல்லது. உங்களுக்கு உபயோகப்படாத விஷயம், தண்ணீர், சென்னை ராஜ்ய மக்கள் அனுபவிக்கவிடுவது உங்கள் கடமையாகும். ஆகவே நீங்கள் பீர்மேடு, தேவிகுளத்தை சென்னை ராஜ்யத்துடன் சேர்க்க ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

*SRI P. K. THIRUMURTHI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்ய புனரமைப்பு கமிஷன் அறிக்கையை குறித்து பேசும்போது, நான் சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன். இப்போது, சித்தூர் 4-28 p.m.

எல்லையிலும் பாலக்காடு முதலிய பகுதிகளிலுமுள்ள மலை யாள மக்கள் தமிழ் நாட்டுடன்தான் அதிகமான தொடர்பு கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். மேலும் இந்த பகுதிகளில் வாழ்பவர்கள் பெரும் பாலும் தமிழ் மக்கள்தான். உத்தியோகங்களிலும், மற்றும் பல பதவி களிலும் தமிழர்கள்தான் அதிகமாக இருந்து வருகின்றனர். அப்படி யிருக்கும்போது இந்த சித்தூர், பாலக்காடு எல்லைகள் தமிழ் நாட்டுடன் தான் இணைக்கப்பட வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

அதோடுமட்டுமில்லாமல், மார்க்கெட் விஷயத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், அதிகமான தமிழ் மக்கள், பொள்ளாச்சியிலிருந்து கூட இந்த மலையாள பகுதிகளுக்குப்போய், வியாபாரம், கொள்வினை, கொடுப் பினைகள் நிறைய செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த முறையிலும், அந்த பகுதி மக்கள் தமிழ் நாட்டு மக்களுடன் அதிக தொடர்பு கொண்டி ருப்பதால், அவைகள் தமிழ் நாட்டுடனதான் இணைக்கப்பட வேண்டும் என்று சர்க்காருக்கு வலியுறுத்தி சொல்ல விரும்புகிறேன்.

மேலும், இந்த மலையாள பகுதிகளில் சிறு பள்ளி மாணவர்கள் கூட தமிழ்தான் படிக்க முடிகிறது. நான் இந்த பகுதிகளில் உள்ள ஒவ் வொரு சிறு கிராமத்தையும், சுற்றுப் பிரயாணம் செய்து பார்த்தேன். முதலிலேமேடு மகாநாட்டிற்கும் போயிருந்தேன். இங்குள்ள கிராமங்களில் பினையோலைகளைக் கொண்டு சிறு சிறு பள்ளிக்கூடங்கள் அமைத்திருக்கி ருர்கள் என்றாலும், மலையாளம் போதிக்கக்கூடிய பள்ளிகள் சரியான முறையில் இல்லை. பள்ளி மாணவர்களில் ஒரிருவர்தான் மலையாளம் படிக்கிறார்கள். பாக்கி மாணவர்கள் பூராவும் தமிழ்தான் படிக்கின்றனர். மலையாளம் சொல்லிக்கொடுத்தால் கூட, இந்த குழந்தைகளுக்கு சரியாக படிக்க வரவில்லை. ஒரு வருட காலம் படித்தாலும், அந்த மாணவர்களுக்கு மலையாளம் வருவதில்லை. தமிழ்தான் அவர்களுக்கு நன்கு தெரிகி றது. ஆகவே, இந்த நிலையில் சித்தூர், கொல்லங்கோடு, பாலக்காடு எல்லைகளை தமிழ் நாட்டுடன் சேர்த்தால் நலமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன். அந்தந்த தொகுதியிலுள்ள அங்கத்தினர்களுக்குத்தான் அந்தந்த பகுதி விஷயங்கள் நன்கு தெரியும் என்ற முறையில் நான் இவற்றை எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் கூட, இந்த பகுதிகள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும் என்று தான் கூறியிருக்கிறார்கள். நானும் அதே மாதிரி தமிழ் நாட்டுடன் சித்தூர் எல்லையையும், கொல்லங்கோடு எல்லையையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

4-30 p.m.

* **Sri V. MUTHU :** கனம் சபாநாயகர் அவர்களே, இவ்வறிய விவாதத்திலிருக்கும் ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் அறிக்கையை குறித்து பேசும்போது, முக்கியமாக எல்லா அங்கத்தினர்களின் மனதில் இடம் பெற்றிருக்கக்கூடிய விஷயம் பீர்மேடு, தேவிகுளம் சம்பந்தப்பட்டதா கும். சமீபத்தில் கனம் நிதியமைச்சர் அவர்கள் மதுரை ஜில்லாவின் மேற்கு பிரதேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அந்த சமயத் தில், பீர்மேடு, தேவிகுளம் ஆகிய இரு பிரதேசங்களும் சென்னை ராஜ்யத் துடன் இணைக்கப்படவேண்டும் என்ற இளைச்சி அவர்கள் சுற்றுப் பிரயா ணம் செய்த அந்த வட்டாரங்களில் இருந்து வருவதை நேரில் கண்டார். பீர்மேடு, தேவிகுளம் எல்லையோரத்தில் உள்ள கம்பம், கூடலூர், போடி, தேவாரம் முதலிய பிரதேச மக்கள், சிறுவர்களும் பெரியோர்களும், எல்லோரும், கட்சிப் பாகுபாடின்றி பீர்மேடு, தேவிகுளம் சென்னை ராஜ்யத்துடன் சேர்க்கப்பட வேண்டும் என்ற உறுதிப் பாட்டில், எதிர் காலத் தில் ஒரு போராட்டத்திற்குக் கூட தயாராகக்கூடிய முறையில் அதைப் பற்றி பேசி வருகிறார்கள். கனம் நிதி மந்திரி அவர்கள் கலந்து கொண்ட ஒவ்வொரு கூட்டத்திலும், பஞ்சாயத்து போர்டு முனிசிபாலிடி மற்றும் இதர பொதுக் கூட்டங்கள் அனைத்திலும் தேவிகுளம், பீர்மேடு ஆகிய இரண்டு தாலுக்காக்களும் சென்னை ராஜ்யத்துடன் சேர்க்கப்படவேண்டு மென்று தீர்மானங்கள் நிறைவேற்றி, நிதி மந்திரி அவர்களிடம் கொடுத்

திருக்கிறார்கள். இவற்றின் ஆதாரவுகொண்டு நிதி மந்திரி அவர்கள், இந்த பிரச்னையை முடிவு கட்டுவதற்கு இடமான நம்பிக்கை பெற்றிருப் பார்கள் என்று நான் கருதுகிறேன். இன்று சட்ட சபையில் பேசும் போது நிதி மந்திரி அவர்கள் இந்த பிரச்னையை குறித்து நல்ல முறைமில் பேசியிருக்கிறார்கள்.

case of indiscriminate levying of water rates in respect of the lands which have not yet got the supply of the project water even though they are included in the ayacut, is brought to the notice of the Government, it will be examined.

III.—GOVERNMENT MOTION.

MOTION UNDER RULE 23 (1) (ii) OF THE ASSEMBLY RULES

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg to move—

" That rule 23 (1) (ii) of the Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, the 24th November 1955."

SRI K. T. RAJU : On a point of order, Sir, நான் கொடுத்த மோஷன் முக்கிய விஷயப் பிரேரேபணையில் கண்ட penalty சம்பந்தமாக, rule 40-படி கனம் மந்திரியார் அவர்கள் படித்த ஸ்டேட்மெண்டில் ஒன்றுமே இல்லை. அதைப்பற்றி என் பதில் இல்லை என்று கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : Under rule 40, a Member may call the attention of a Minister to any matter of urgent public importance and the Minister may then make a brief statement on the matter or ask for time to make a statement later. The Member calling attention cannot say that the Minister had not said this or the other and ask for further elucidation. I do not think it is a point of order. Motion moved—

" That rule 23 (1) (ii) of the Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, the 24th November 1955."

SRI T. C. NARAYANAN NAMBIAR : It is only for seeking some information that I am raising. I want to know whether this arrangement was discussed in the Business Advisory Committee and an agreement arrived at.

THE HON. SRI C. SUBRAMANIAM : This was discussed in the Business Advisory Committee and a unanimous decision was taken that on the 24th Government business should be transacted.

SRI V. GOPALA GOUNDER : Has any day been allotted in this sitting for the transaction of non-official business?

THE HON. SRI C. SUBRAMANIAM : I spoke about this day before yesterday on the floor of this House. On the 26th November, the rest of the day after the discussion of the Appropriation Bill will be allotted for non-official business.

MR. SPEAKER : The question is—

" That rule 23 (1) (ii) of the Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, the 24th November 1955."

The motion was put and carried.

23rd November 1955]

IV.—REPORT OF THE STATES REORGANIZATION COMMISSION, 1955 (DISCUSSION)—*cont.*

MR. SPEAKER : I must tell the Members that there are a large number of Members desiring to participate in the discussion. So we will have to ration time rather strictly. Ten minutes will be allotted for each speaker.

* SRI M. S. MOGRAL : Mr. Speaker, Sir, the recommendation of the States Reorganization Commission to merge the entire Kasaragod taluk in the proposed Kerala State has cast a gloom over the people of the South Kanara district and especially over the people in Kasaragod taluk. The very principles adopted by the Commission in the scheme of reorganization are, to quote their own words, as follows :—

" In our scheme of reorganization, we have adopted the district as the basic unit for making territorial readjustments. We have departed from this rule only when, for ensuring geographical contiguity or for some other important administrative or economic considerations, detachment of part of a district has become imperative."

These principles have unfortunately not been adhered to in deciding the future of Kasaragod taluk. To the factor of geographical contiguity and administrative and economic considerations should be added the social and cultural set-up of the people of the area. The application of any one of these tests will hardly justify the conclusion arrived at by the Commission. A proper and balanced consideration of all these factors stressed by the Commission should lead one to the inevitable conclusion that the Kasaragod taluk should be left as it is. The merger of Hosdrug sub-taluk with the Kerala State may be justified. But this does not in any way stand in the way of the claim of the main Kasaragod taluk to be with Karnataka. From ancient times, the Chandragiri river was the boundary separating the Karnataka from the Kerala. This is quite clear from the following passages on pages 338 and 392 of the *East-India Gazetteer* by Walter Hamilton (Second Edition), Volume I, London :—

" Canara South—The northern division of the province is situated between the 12th and 14th degrees of north latitude. The country to the north of the river Chandragiri where Malabar ends, is called Tuluva by the Hindoos and South Kanara by the British.

Chandragiri (the moon mountain)—A large square fort in the Malabar province, thirty miles from Mangalore, situated on the south side of the river of the same name, which is the northern boundary of Malayala or Malabar."

From the above extracts it is clear that the recommendation of the Commission to merge the entire Kasaragod taluk with the proposed Kerala State is historically perverse and unsound. Kasaragod taluk consists of five revenue firkas, namely, Manjeshwar, Kumbla, Kasaragod, Hosdrug and Nileshwar. The first three firkas constitute the Kasaragod main taluk and the last two firkas

[Sri M. S. Mogral] [23rd November 1955

constitute the Hosdrug sub-taluk. Kasaragod taluk is contiguous to the Puttur and Mangalore taluks and the Hosdrug sub-taluk is contiguous to Malabar district. These two portions form distinct units and each has an independent administrative set-up. Every office in the main taluk has its counterpart in the sub-taluk, such as the District Munsif's Court, the Treasury and Taluk office, the Sub-Magistrate's office, the Police station, the Deputy Registrar's office and so on. It is a misnomer to call Hosdrug a sub-taluk. It is not a sub-taluk; it is an independent taluk by itself. The language in the Civil, Criminal and Revenue Courts of the Hosdrug sub-taluk is Malayalam, while that in the Kasaragod main taluk, is Kannada. Malabar Tenancy Act has been made applicable to Hosdrug sub-taluk. If Kasaragod taluk is merged with the Kerala State, it will definitely lead to administrative confusion.

Language was one of the factors that was considered by the Commission in redistributing the areas. But I find that the Commission have not adhered to but deviated from this principle in certain cases. They say in their report—

" The mere fact that a certain language group has a substantial majority in a certain area should not be the sole deciding factor.

Linguistic considerations have been subordinated to other compelling reasons.

We are not inclined to concede any demand on the sole ground of language. We have therefore to weigh the linguistic factor with other relevant considerations bearing on the well-being of the people of this region."

As I have already pointed out, the social and cultural set-up of the people inhabiting an area should also be considered, because it is the most reliable and conclusive guide to determine to what State that area should be allotted. Many things are included in the term ' cultural set-up ' such as dress, customs and manners, mode of living, observance of festivals, popular games and recreation, historical traditions, literary pursuits and land tenure. Certain other factors also should be taken into consideration such as commercial interests, transport facilities, administrative cohesion, medium of thought in everyday life and instruction in educational institutions. If there is a combination of all these factors in a State, such a State will be a homogeneous and viable administrative unit and will be able to withstand the ravages during periods of stress and strain. Applying these tests, I am absolutely certain that the Kasaragod main taluk, which lies north of the Chandragiri-Payasani river, should form an integral part of the Karnataka State.

Yesterday an hon. Member read out the names of some villages lying to the north of the Chandragiri river where the majority of the people were stated to be speaking Malayalam. May I tell him with all seriousness that the language spoken in those villages is not at all Malayalam? It is an admixture of the regional language Kannada and a local dialect Thulu,

23rd November 1955] [Sri M. S. Mogral]

with a superficial coating of Malayalam. A Malayalee from the Travancore-Cochin State or Kerala will not be able to understand this language. He will be very much confused to hear some of us speak the so-called Malayalam language. It is relevant to note that out of 164 schools in Kasaragod taluk lying to the north of the Chandragiri river 139 schools have Kannada as the medium of instruction. Out of the remaining 25 schools, five schools have both Kannada and Malayalam as the media of instruction and of the total of 22,445 students attending the schools, 19,583 students are taught in Kannada. Out of 4,000 documents registered in a year, 3,990 documents are registered in Kannada. Out of 36 panchayat boards, 35 have passed resolutions recommending the merger of this part of the taluk with the Karnataka State. These statistics bear ample testimony to the unreasonableness of tacking on this part of the taluk to Kerala by sheer compulsion and contrary to the declared wishes of the people. Under these circumstances, I submit to this Government to recommend to the Central Government to merge the northern portion of Chandragiri-Payasani river with the Karnataka State.

SRI E. L. RAGHAVA MUDALIAR : Mr. Speaker, Sir, I wish to add a few remarks to those that have already been made by my Colleagues. Having decided on the reorganization of States on linguistic basis, I think that we must take language as the most dominant consideration, if not the only consideration. Having decided on various considerations that the district should be the unit, the Commission itself has come to the conclusion that smaller units like taluks and firkas have to be taken into consideration in reorganizing the States. The only parts over which there is some dispute are the nine taluks or rather the four taluks in Travancore-Cochin, one taluk in South Kanara and one taluk in Coimbatore district. With regard to the two taluks in Travancore-Cochin State, though there is a predominant Tamil population, the Commission seems to circumvent it by an argument which is fallacious. From a reading of the Report, I find that having come to the conclusion, they want to find out some arguments to support that conclusion and that they have not come to the conclusion on grounds that are already existing. It is admitted that the Tamil population is predominant in those two taluks but they simply brush it aside saying that a large portion of the Tamil population have migrated into that area for purposes of doing some cooly work. In the same breath they say that during the last elections the candidates put up by the Travancore Tamil Nad Congress have come out successful. That shows that the Tamil population is indisputably in a majority there and that there is no reason for retaining these two areas in Travancore-Cochin State. Further, instead of having these linguistic minorities which are always a trouble and which are always creating a political crisis in that State, it is better from the administrative point of view also to add them to the Madras State than keeping them in the Kerala State. The Commission itself says, ' The demand for Tamil-speaking taluks has a history behind it and has assumed a form that prejudices the polifical

[Sri E. L. Raghava Mudaliar] [23rd November 1955

and administrative stability of this area.' Last year also we saw that members coming from this area were the cause of many a political crisis in that State and the downfall of many a Ministry. So, from an administrative point of view and in the interests of peaceful administration of that State, it is better that our Kerala friends agree to add these four taluks to Tamil Nad. With regard to Kollegal, even the Hon. the Leader of the House has stated that, no doubt, there is a predominant population of Karnataka people there and that he has no objection for that area to be added on to Karnataka but that, taking into consideration our depleted forest wealth, it is better that that forest area is retained in Tamil Nad. Somehow, we have been having the knack of losing all our forest wealth. During the separation of Andhra we lost the zamin forests which lay on the borders of our State. About 22 villages where there were some mamool rights over the forests are retained in the Tamil State, but the forest has been given to the Andhras. Not only the forest but also the irrigation sources that lie within the forests which are irrigating lands in Madras State are in the Andhra State and very often troubles arise with regard to the enjoyment of these irrigation rights and the exercise of mamool rights in the forests. So, let us not commit the same mistake again and let us request our Karnataka friends to be generous enough to allow us to retain this forest area in our State. That is a matter between the Tamils and the Karnataka people alone and I hope the Karnataka friends will be generous enough to treat this as part of Madras State.

With regard to Kasaragod taluk, it is a matter for our Karnataka friends and Kerala friends to settle between themselves. I think I need not say anything about that area. I am very little acquainted with that area. Therefore, it will be impertinent for me to offer any remarks about that. I am glad that we have avoided unseemly scenes which are obtaining to-day in Bombay and other places. We have lived together as brothers for centuries and I hope that we will part with great goodwill towards each other and remain as ideal neighbours. With these few remarks, I resume my seat.

Thank you, Sir.

10-40 a.m. * **Dr. P. VARADARAJULU NAIDU** : கனம் தலைவர் அவர்களே இந்த நாட்டை பிரிக்கவேண்டுமென்று நியமிக்கப்பட்ட கமிஷனின் ரிப்போர்ட்டு வந்து இருப்பதால், இங்கு பேசிய நண்பர்கள் எல்லாம், பாஷாவாரியாக இந்த நாட்டை பிரிப்பதற்காகத்தான் இந்த கமிஷன் நியமிக்கப்பட்டது என்ற எண்ணத்துடன் பேசி இருக்கிறார்கள். இந்த நாட்டு அரசியல், நிர்வாகம் எப்படி இருக்கவேண்டும், அதற்காக மாகாணங்களைப் பிரித்து அமைக்கவேண்டும் என்பதை தீர விசாரித்து ரிப்போர்டு செய்வதற்காகத்தான் இந்த கமிஷனை ஏற்படுத்தினார்களேயொழிய பாஷாவாரியாக இந்தநாட்டை பிரிக்கவேண்டுமென்று இந்த கமிஷனை ஏற்படுத்தவில்லை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் அப்படி நாட்டை பிரிக்கும்போது, கூடுமான வரையில் ஒரே பாஷை பேசுபவர்கள் ஒரு ராஜ்ஜியத்தின், unit-ன் கீழ் தரவேண்டுமென்ற நோக்கத்தோடு, இந்த கமிஷன் ஆலோசனை செய்து, ரிப்போர்டு சமர்ப்பித்திருக்கிறார்கள். பாஷை பேசுபவர்கள் இந்த நாட்டில், குறிப்பாக தென் மாவட்டங்களில் பேசப்படும் இடம் இருக்கிறதென்றால், அதுதான் தமிழ் நாடு. தமிழ் நாடு ஒரு compact-ஆக தமிழ் பேசும் பிரதேசமாக இருக்கிறது.

23rd November 1955] [Dr. P. Varadarajulu Naidu]

இந்த தமிழ் பிரதேசத்திலே நூற்றுக்கு 82 பேர் தமிழ் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். இங்கே தெலுங்கு பேசுகிறவர்கள் 40 லட்சமும் கன்னடம் பேசுகிறவர்கள் 8 லட்சமும் இருக்கிறார்கள். இன்னும் சௌராஷ்டிரர்கள் ஒரு லட்சம் ஜனங்கள் இருக்கிறார்கள். இது தவிர உருது, மலையாளம் பேசுகிறவர்களும் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகையினாலே நாட்டை, ராஜ்ஜியங்களாக பிரிக்கும்போது சில ஒரங்களிலுள்ள கிராமங்களில் தெலுங்கு பேசுபவர்கள் இருக்கலாம், சித்தூர் ஜில்லாவில் இருப்பதுபோல், கோயம்பத்தூர் பக்கத்தில் மலையாளம் பேசுகிறவர்களும் இருக்கலாம். இப்படி எல்லாம் இருக்கும்போது, கமிஷன் நன்றாக யோசித்து, அந்தந்த சர்க்கார் நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்காகவும், ஒழுங்கான ரீதியில் நடக்கவேண்டுமென்ற நோக்கத்தை மனதில் கொண்டே, ராஜ்ஜிய புனரமைப்பு செய்திருக்கிறது. இன்னொரு விஷயம் முக்கியமாக கவனிக்க வேண்டும். ஆந்திர தேசம் பெரிதாக இருக்கிறது. அந்த ராஜ்ஜியத்தின் ஜனத்தொகை ஏராளமாக இருப்பதால், அந்த நாடு பெரிதாக இருக்கிறது. அப்படி இருப்பது நம் தேச நிர்வாகத்திற்கு நல்லதல்ல. அதேமாதிரி உத்திர பிரதேசம் பிரம்மாண்டமான ராஜ்ஜியம் ஆகப்போகிறது. இப்படி பெரிய ராஜ்ஜியங்களாகவும் சிறிய ராஜ்ஜியங்களாகவும் நாட்டைப் பிரிப்பதால், மத்திய சர்க்காரின் நிர்வாகம் பாதிக்கப்படலாம். ஆகவே, சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஒழுங்காகவும் நல்ல முறையிலும் நடக்க, சென்ட்ரல் பார்லிமெண்டில் இருக்கும் பிரதிநிதித்வம், மாகாணங்களுக்கு ஒரே மாதிரி அளவில், கொடுக்கப்படவேண்டும். அப்படி ஒரேமாதிரியாக பிரதிநிதித்துவம் கொடுக்கப்படாவிட்டால், தெலுங்கு நாட்டிற்கு அதிக இடங்களும், இந்தி பேசும் நாடுகளுக்கு அதிக இடங்களும் பார்லிமெண்டில் கிடைத்துவிடும். பிறகு அதிக பிரதிநிதித்துவமுள்ள நாடுகளின் செல்வாக்குத்தான் மத்திய சர்க்காரின் நிர்வாகத்திலிருக்கும். கேரள நாட்டிற்கு, கம்மி ஸ்தானங்கள்தான் பார்லிமெண்டில் ஏற்படும். ஆகவே, இதுமாதிரி பெரிய விஷயங்களில் புத்தியை செலுத்தவேண்டும். இந்த தாலூகா தெலுங்குக்கு போய்விட்டது, தெலுங்கர் பூமி தமிழ் நாட்டுக்கு போய்விட்டது என்ற சில்லரை விஷயங்களில் புத்தியை செலவிடாமல், எந்த நாட்டு மனிதர்களையும் இன்னாட்டு மனிதர்கள், அடக்கியாளாமல், பாதுகாக்க வழிபெறச் செய்யவேண்டும். இப்போது பெங்களூரை எடுத்துக் கொள்வோம். இந்த ஊர் தமிழ் நாட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது, தவிர இந்த ஊரில் இருப்பவர்களில் பாதி பேர் தமிழர்களாக இருக்கிறார்கள். இருந்தாலும், பெங்களூர் தமிழ் தேசத்துடனேயே சேர்க்கவேண்டுமென்று கேட்பது நியாயமாகாது. மற்ற ஜில்லாக்களிலும் இம்மாதிரியான தொல்லைகள் இருந்துகொண்டுதான் இருக்கும். ஒசூரை எடுத்துக்கொண்டால் நண்பர் முனி ரெட்டியார் அவர்கள், ஒசூரை தெலுங்கு நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அங்கே இருக்கும் ஜனங்கள், தெலுங்கு, கன்னடம், தமிழ் பேசுபவர்கள், இவர்களில் ஒவ்வொரு பாஷைக்காரரும் அவ்வூர் ஜனத்தொகையில் மூன்றில் ஒருபங்கு இருக்கிறார்கள். ஒசூரைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டை விட்டுப்போவதென்றால், மைசூருக்குத்தான் போகவேண்டும், தெலுங்கு நாட்டுக்கு போகமுடியாது. நீலகிரியில், குறிப்பிட்ட ஒரு பாஷை பேசுபவர்கள் இல்லாததால், அங்கு இருப்பவர்கள் தமிழ் நாட்டுடன்தான் இருக்கவேண்டுமென்று கமிஷன் ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறது. சிலர் சொல்லுவார்கள், கமிஷனிலுள்ள மெம்பர்கள், ஏதோ சுயநல எண்ணங்கொண்டு, இவ்விதமான ரிப்போர்ட்டு சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று. அதுவும் குறிப்பாக பணிக்கர் அவர்களுக்கு, பீர்மேடு, தேவிகுளத்தில் சொத்துக்கள் இருப்பதால் அவ்வூர்களை, கேரள ராஜ்ஜியத்தில் சேர்த்துவிட்டார்கள் என்று சொல்லுவார்கள். அதிலே உண்மையே கிடையாது. பணிக்கர் அவர்களுக்கு அங்கு சொத்து கிடையாது. திருவாங்கூரிலே காவனம் என்ற இடத்தில்தான் அவருக்கு சொத்து இருக்கிறது. எல்லா நாட்டவர்களும் கூடி வாழவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் தான் கமிஷன் இந்த ராஜ்ஜிய புனரமைப்பை செய்திருக்கிறது. ஆகவே, நமக்கு சாத்தியமில்லாத இடங்களை மற்றவர்களுக்கு விட்டுக்கொடுத்து நாம் எல்லோரும் அண்ணன் தம்பிபோல் நடந்து கொள்ளவேண்டும். நூற்று ஐம்பது வருஷங்களாக நம் நாட்டில் பலமாக ஊன்றிக்கொண்டிருந்த அந்நிய வெள்ளைக்காரனை எதிர்த்து போராட்டம்

நடத்தி சுதந்திரத்தை பெற்றோம். இந்த சுதந்திரம் தேசத்திற்கு வந்த பிறகு, ஆந்திரர்கள், தமிழர்களை விரோதித்துக்கொண்டும், தமிழர்கள் மலையாளிகளை விரோதித்துக்கொண்டிருந்தால் இந்த மாதிரியான விரோத எண்ணங்கள் நாட்டிலே பரவுமானால், நம் நாட்டில் எப்படி சென்ட்ரல் கவர்ன்மென்ட் சுமூகமாக நடத்த முடியும்? இது இன்றையதினமே போகும் விஷயம் அல்ல. நீடித்து ராஜாங்கத்தை நடத்தவேண்டி இருப்பதால், இந்த சில்லரைச் சச்சரவுகள் நம்மிடையே நீடித்திருக்க விடக்கூடாது.

காங்கிரஸ் காரிய கமிட்டி மகாராஷ்ட்ர தேசத்தில், பம்பாய் தனி ராஜ்ஜியமாக, ஆக்கவேண்டுமென்று சொன்னபோது, சென்னை நகரத்திற்கும், அதே அனர்த்தம் பிடிச்சுமென்று நினைத்தேன். ஆனால் காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்தை மகாராஷ்டிரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எப்போதுமே அவர்கள் காங்கிரஸ் சொல்வதை மறுப்பதுதான் வழக்கம். மகாத்மா காந்தியைக்கூட அவர்கள் நம் தேசத்தலைவர் என்று எண்ணி, அவர் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளுவதில்லை. இந்தமாதிரி எல்லாம் ஒன்றும் ஏற்படாமல் தமிழர்களுக்கு தனி ராஜ்ஜியம் ஏற்பட்டுவிடுகிறது. பம்பாய் நகரம் தனி ராஜ்ஜியமாகப் போகிறதோ இல்லையோ அதை விட்டு விடுவோம். ஆனால், நாளைய தினம், பம்பாய் நகரம் ஒரு தனி State ஆனால், சென்னை நகரத்தின் கதியும் அதேதான் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். அதேமாதிரி கல்கத்தா நகரமும் ஆகலாம். இந்த மாதிரி சிக்கல்கள், காங்கிரஸ் கமிட்டியின் முடிவுகளால் வருகின்றன. 1921-ம் வருஷம், மாகாண காங்கிரஸ் கமிட்டிகளை பாஷாவாரியாக பிரிக்க வேண்டுமென்று அகில இந்திய காங்கிரஸ் முடிவு செய்தபோது, நான் மகாத்மா காந்தியிடம், 'அப்படி காங்கிரஸ் கமிட்டிகளை அமைக்கக்கூடாது provincial காங்கிரஸ் கமிட்டிகளாகவே இருக்கவேண்டு' என்று சொன்னேன். அப்போது நான் சிறு வயதாக இருந்தேன். மகாத்மா காந்தி அவர்கள், பாஷாவாரி காங்கிரஸ் கமிட்டிகள் ஏற்படுத்தினால்தான் காங்கிரஸ் ஸ்தாபனம் நாட்டில் நன்றாக வேலை செய்ய முடியும் என்று சொன்னார்கள்.

விஜயநகர சாம்ராஜ்ஜியம் இருந்தபோது, 250 வருஷ காலம் மலையாளிகள், தமிழர்கள், கன்னடியர்கள், ஒன்றாகவே இருந்தோம். 150 வருஷம் வெள்ளைக்காரன் ஆட்சியில் நாம் ஒன்றாகவே இருந்தோம். ஆகவே, இப்போது, இந்த ராஜ்ஜிய புனர் அமைப்பால் ஒரு சின்ன தாலுக்கா அல்லது கிராமம் வேறு ஒரு ராஜ்ஜியத்திற்கு போய்விட்டதே என்று, விரோதித்து, அந்த ராஜ்ஜிய மக்களுடன் மோதிக் கொள்ளக்கூடாது.

தற்போது தமிழ் தேசம் சின்னதாகப் போய்விட்டது. தமிழ் தேசத்திற்கு செங்கோட்டை காட்டைத் தவிர வேறு ஒரு காடும் கிடையாது. இந்த ரிப்போர்ட்டுபடி, எல்லா காடுகளும் கேரள நாட்டில் சேர்ந்துவிட்டது. இருந்தாலும், சாத்தியமான முறையில், பொருளாதாரம், பாஷை இவைகளை கவனித்து, எல்லா மச்சகளுக்கும் எல்லா உரிமைகளும் இருக்கும்படியாக ராஜ்ஜியங்களை அமைக்க வேண்டும். தமிழ் பேசும் இடங்கள் எல்லாம் தமிழ் நாட்டுடன் இருக்க வேண்டுமென்று சில நண்பர்கள் நினைக்கிறார்கள். அது முடியாத காரியம். தெலுங்கு தேசத்தில் தமிழர்கள் இருக்கக்கூடாதென்று சொல்லுவதும் தவறாகும். தமிழ் நாட்டில் தெலுங்கர்களோ மற்றவர்களோ இருக்கக்கூடாதென்று சொன்னால், அதுவும் முடியாத காரியம். ராஜ ராஜ சோழன் காலத்தில் கோதாவரி நதிக்கரையில் நம்மவர்கள் குடியேறி அங்கேயே இப்போதும் இருக்கிறார்கள். நாக்பூரில் Tent street-ல் 10 ஆயிரம் தெலுங்கு மக்கள் குடியேறி வசிக்கிறார்கள். நாங்கள்கூட வீட்டில் தெலுங்கு பேசுகிறோம், ஆனால் நற்போது வெளியே தெலுங்கு பேசுவதையே விட்டுவிட்டோம். ஆகவே அர்த்தமில்லாத பாஷைச் சண்டை போடாமல், கூடுமான வரையில், விவகாரத்திலுள்ள பிரதேசங்களின் விஷயமாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ராஜ்ஜிய புனரமைப்புக்கான இந்த ரிப்போர்ட்டை அங்கீகாரம் செய்ய வேண்டும்.

நம் தமிழ் நாட்டுக்கு எற்கனவே திருப்பதிதான் Outpost எல்லையாக இருந்தது, அதாவது நெல்லூர் நமக்கு Outpost-ஆக இருந்தது, பக்கத்தி

லுள்ள தெலுங்கு ஜனங்கள் அங்கு வந்து குடியேறியதால், இப்போது அவ்விடங்களைப்பற்றிய விவகாரம் வந்துவிட்டது. பாஷாவாரி என்ற அடிப்படையில் சித்தூரை விட்டுவிட்டோம். அது இப்போது தெலுங்கு தேச பகுதி ஆகிவிட்டது. அதே மாதிரி கொச்சின்-சித்தூர் பகுதிகளை கேரளாவுக்கு கொடுத்துவிடவும் தயார். ஆனால் தேவிகுளம், பீர்மேடு, பாகங்கள் நமக்கில்லை. ராஜ்ஜிய புனரமைப்பு கமிஷன், இந்த இடங்களைப்பற்றி என்ன சொல்லி இருக்கிறது என்றால், தேவிகுளம், பீர்மேட்டில் நிறைய தேயிலை, காப்பித் தோட்டங்கள், ஸ்ரியன் கிருஸ்தவர்களுக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் சொந்தமாக இருக்கின்றன. அங்கே வேலை செய்பவர்கள் எல்லாம் தமிழர்கள், தமிழ் கூலிகள். இந்த தமிழ் கூலிகள் வருஷத்தில் சில மாதங்கள் அத் தோட்டங்களில் வேலை செய்துவிட்டு மறுபடியும் திரும்பி தங்கள் தமிழ் தேசத்துக்கு திரும்பி விடுகிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த காரணத்தாலே, அந்த இடங்களை தமிழ் நாட்டுடன் சேர்க்காமல், கேரள நாட்டுடன் சேர்க்க, கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. இதைப் பற்றி எல்லாம் நாம் சச்சரவு செய்துகொள்ள வேண்டியதில்லை. கனம் நிதி மந்திரி அவர்கள், இதைப்பற்றி கவனிக்க இருக்கிறார்கள். அவர்கள் எப்படி முடிவு செய்கிறார்களோ, அதன்படி நாம் நடக்க வேண்டும். இதற்காக, ஸ்ரீ விநாயகம் போன்றவர்கள் வீண் கிளர்ச்சி செய்யாமல், நாம் எல்லோரும் நல்லவர்கள் என்று உலகத்திற்கு எடுத்துக் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

10-5 a.m.

*DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN: சபாநாயகர் அவர்களே, மொழிவாரி மாகாணங்கள் வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்னை இப்போது கிடையவே, கிடையாது. எனென்றால் பல வருடங்களுக்கு முன்னாலேயே மொழி அடிப்படையில் மாகாணங்களை அமைப்பது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ராஜ்ய சீரமைப்பு கமிஷன் செய்திருக்கிற தீர்மானங்கள், ஓரளவிற்கு சென்னை ராஜ்யத்தை பொறுத்த வரையில் எவ்வளவு நன்றாக இருக்க வேண்டும் என்று ஆலோசித்து செய்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. எவ்வளவு தூரம் மொழிவாரி மாகாணங்கள் பிரிந்தாலும், இந்தியா முழுவதிலும், ஒவ்வொரு ராஜ்ய எல்லையோரங்களில் மட்டுமல்ல, நகரங்களிலும், கலாசாலைகளிலும், ஆஸ்பத்திரிகளிலும், உத்தியோகங்களிலும் பல்வேறு மொழி பேசுபவார்கள் என்றென்றைக்கும் இருக்கத்தான் செய்வார்கள். ஆகவே நாம் எல்லோரும் சகோதர மனப்பான்மையுடன் வாழ வேண்டுமென்பதில், யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்கவே முடியாது. ஏகதேசம், நமது கலாசார அபிவிருத்தி, வேலையில்லா திண்டாட்ட ஒழிப்பு, கல்விச் சலுகைகள் அளித்தல், இவை போன்ற காரியங்களுக்காகத் தான் மொழிவாரி மாகாணங்கள் அமைக்கப் படுகிறதே தவிர, ஒருவருக்கு ஒருவர், இது என்னுடைய தேசம், அது உன்னுடைய தேசம் என்று அடித்து கொண்டு, பண்டைக் காலத்தில் இந்தியாவில் 56 தேசங்கள் இருந்தது என்று சொல்லுகிறார்களே அந்த முறையில் வைக்க அல்ல என்பதை நண்பர்களுக்கு நான் வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

இப்போது தென் திருவிதாங்கூரிலுள்ள ஐந்து தாலூக்காக்கள் தமிழ் நாட்டுடன் இணைய வேண்டியது என்பது தீர்ந்து போன விஷயம் என்று நான் நம்புகிறேன். பத்து வருடங்களுக்கு முன்னாலேயே, அதாவது 1945 லேயே, கஸ்தூரிபா நிதி, மற்றும் எங்களுடைய சமூக நல திட்டம் இவை சம்பந்தப்பட்ட வரையில், சர்க்காருடைய ஆதரவு இல்லாமல் நடக்கும் போதே, நாகர்கோயில் பகுதி திருநெல்வேலி ஜில்லாவுடன் இணைக்கப் பட்டு, அங்கிருந்து இதுவரை நூற்றுக் கணக்கான சகோதரிகள் இங்கு வந்து பயிற்சி பெற்று, திருநெல்வேலி ஜில்லாவிலும், நாகர்கோவில் பகுதியிலும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் சம்பந்தப்பட்ட வரை, நாகர்கோவில் பகுதி முழுவதையும் திருநெல்வேலி ஜில்லாவில் இணைத்தாகி விட்டது. தமிழ்நாடு கஸ்தூரிபா நிதிக்கு போன வருஷம் நாகர்கோவில் வட்டாரத்தில் சில ஆயிர ரூபாய்கள் வசூல் செய்திருக்கிறோம். இதை என் சொல்லுகிறேன் எனறால், திருவிதாங்கூர் ராஜ்ய பெண்களுக்கு நான் சொன்ன வேலைகளுக்கு பயிற்சி

கொடுப்பது என்றால் அவர்கள் கேரள கஸ்தூரிபா நிதியில் திருச்சூரில் பயிற்சி கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ் பெண்கள் இங்கு தான் வர விரும்புகிறார்கள். அதே போல ஆண்களும் தமிழ் நாட்டுக்கு வந்து தான் படிக்க விரும்புகிறார்கள்.

தவிர, எல்லையோர பிரதேசங்களை எடுத்துக் கொண்டால், பனக்குடி போன்ற கிராமங்கள் எல்லாம் கைமாறிக் கொண்டிருந்திருக்கின்றன. தென் திருவிதாங்கூர் பிரதேசங்கள் என்றென்றும் மலையாளிகள் கையில் இருந்தது என்று சொல்ல முடியாது. நாகர்கோவில் ஆதியிலிருந்து திருவிதாங்கூரில் இருந்திருக்கிறது என்று சொல்லுவார்களேயானால், அது சரித்திரப்படி சரியாகாது. நாகர்கோவில், திருவாங்கூர் ராஜாக்களின் ஆட்சியின்கீழ் கொஞ்ச காலம் இருந்து வரும், அப்புறம் மாறும், இப்படி மாறி மாறி வந்திருக்கிறது. ஆகவே தென் திருவிதாங்கூரில் உள்ள தமிழ் பகுதிகள் எதோ சில வருஷங்களாக அவர்கள் ஆதிக்கத்திலிருந்தது என்பதற்காக விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்பது சரியாகாது.

அடுத்தபடியாக, எல்லா மாகாணங்களும், ஓரளவிற்கு வாழ்க்கை வசதிகள், நீர்ப்பாசன வசதிகள், மலைவளம், **administrative convenience** இவற்றை வைத்துத் தான் பிரிக்கப்பட வேண்டுமென்பதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அந்த முறையில் தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டு பார்த்தால் மலைவளமேயில்லை. மலைவளம் ஒன்றுமில்லாது போனால் தமிழ்நாடு எதிர்காலத்தில் எப்படி தன்னுடைய காரியங்களை நடத்திக் கொண்டு போக முடியும். ஆகவே, இந்த விஷயத்தை நாம் வற்புறுத்த வேண்டியது மிகவும் அவசியம் என்பதில் சந்தேகமில்லை.

பீர்மேடு, தேவிகுளத்தை எடுத்துக்கொண்டால், நேற்று ஸ்ரீ சுப்பராஜ் அவர்கள் சொன்னது மாதிரி, 50 பட்டாக்கள் மலையாளிகளுக்கு இருந்தால், 2,500 பட்டாக்கள் தமிழர்களுக்கு இருக்கின்றன. நான் அந்த பகுதிகளிலும் கொஞ்சம் சுற்றியிருக்கிறேன். அங்கு எங்கே போனாலும் தமிழர் நாடு போல் காட்சியளிக்குமே தவிர, மலையாள பிரதேசமாக தோன்றாது. அந்த பகுதி மக்களுடைய தொடர்பு தமிழ் நாட்டுடன் தான் சமீப காலம் வரை இருந்து வந்திருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு தான் முண்டகாயம் வழியாக பீர்மேடு, குமிழி பக்கத்திற்கு ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. பத்து வருடங்களுக்குள்ளாகத் தான் மலையாள விவசாயிகள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை என்னைப்போன்று அந்தப் பக்கம் போகின்றவர்கள் பார்க்கலாம். இதைச் சொல்லும்போது, திருவிதாங்கூர் பிரதேசத்திலும், மலபாரிலும் ஜன நெருக்கம் அளவுக்கு மிஞ்சி இருக்கிறது, அவர்களுக்கு சில வசதிகள் வேண்டும், இட வசதி வேண்டும், என்பதையெல்லாம் நான் மறந்து பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். ஆனால் அதே சமயத்தில், இந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் எவரால் சீர்படுத்தப்பட்டன, எவரால் அங்குள்ள தோட்டங்கள் பல வருஷங்களாக உண்டாக்கப்பட்டன என்பதை மலையாளிகள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். இன்னமும் இந்த பிரதேசங்களுக்கு உணவுப் பொருள்கள் தமிழ் நாட்டிலிருந்து, அதாவது மதுரை பக்கத்திலிருந்து போகிறது. மலையாளத்தோடு இணையக்கூடிய வசதி இன்னும் அவர்களுக்கு வரவில்லை. அதோடுகூட, தமிழ் நாட்டுக்கு வேண்டிய தண்ணீர் வசதிக்கு இந்த பகுதிகள் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தக் கருத்துக்களில் தேவிகுளம், பீர்மேடு ஆகிய பிரதேசங்களை தமிழ் நாட்டுடன் இணைப்பது சரியென்றாலும், மலையாளிகள் அங்கேயிருக்கக் கூடாது, உள்ளவர்களும் போய் விட வேண்டும் என்று நாங்கள் சொல்லுகிறோம் என்ற மனப்பான்மை கொள்ளக்கூடாது. எல்லையோரங்களில் இரண்டு பக்கத்தவரும் சுமுகமாகவும், சந்தோஷமாகவும் இருக்க முடியும். திருவாங்கூர் தெற்கு ஜில்லாக்களை விட்டு விட்டு, மற்ற ஜில்லாக்களில் போனாலும், உதாரணமாக சென்டரல் திருவாங்கூரில் ஒரப்பாடு, மாங்காணம் முதலிய இடங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் **contiguous area**-தான் தமிழ் பிரதேசத்துடன் சேர்க்கப்படவேண்டும்.

பீர்மேடு, தேவிகுளத்தில் உள்ள தமிழர்கள் **floating population**-ஐ சேர்ந்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு விஷயத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மலையாளிகளும் காடுகளை திருத்தும் காலத்திலும், விவசாயம் செய்யும் காலத்திலும் வந்துபோகிறார்கள். ஆகவே, அந்த முறையில், இரு தரப்பினருக்கும் **floating population** என்று சொல்லுவது பொருத்தமே தவிர, எதோ மலையாளிகளுக்கு சேர்ந்த நாட்டில் தமிழர்கள் போய்விட்டு வருகிறார்கள் என்று சொல்லுவது மிகவும் தவறான விஷயம். நாகர்கோவிலும் இதே பிரச்னை கிளப்பப்பட்டது. தமிழர்கள் வந்து விவசாய கூலிகளாக குடியேறினார்கள் என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டது. இப்போது சொல்லமாட்டார்கள். தவிர, தமிழ் நாட்டுக்கு வாழ வகைவேண்டும் என்றால், சுற்றுமுற்றும் இருப்பவர்கள் தண்ணீர் வசதி, மின்சார வசதி கொடுக்கமாட்டேன் என்றால், நாமும் நமக்கு மலைவளம் வேண்டும், நீர்வளம் வேண்டும் என்று அழுத்தமாக கேட்கவேண்டிய அவசியமிருக்கிறது.

அடுத்தபடியாக, கூடலூரைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். ஆந்திரத்திற்கும் நமக்கும் உள்ள பிரச்னைகள் சில எல்லை கிராமங்களால்தான் வருகிறது. இந்த பிரச்னைகளை எல்லைக் கமிஷன் வந்து தீர்மானிக்கப்போவதாக பேப்பரில் பார்த்தேன். ஆகவே அந்த பிரச்னைகளை நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கே விட்டுவிடுகிறேன். கூடலூரை எடுத்துக்கொண்டால், அது எந்த நாட்டைச் சேர்ந்தது என்று கூறுவதில் கஷ்டம் இருக்கிறது. கூடலூர் காடுகளுக்கு நான் போயிருக்கிறேன். உள்ளே புகுந்து பார்த்திருக்கிறேன். அது ஒரு காலத்தில் நிலம்பூர் ராஜாவின் நிலமாக இருந்ததுதான். பிறகு நீலகிரி ஜில்லாவோடு சேர்க்கப்பட்டது. அங்கு இருக்கக்கூடிய ஜனங்கள் மலையாளிகள் என்று யாராலாவது தீர்மானமாக சொல்லமுடியுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அங்கு ஜனங்கள் பல இடங்களில் இங்கும் அங்குமாக குடியேறியிருக்கிறார்கள். படிப்பிலும், மற்ற எல்லா துறைகளிலும் மிகவும் மோசம். செட்டி, வேடுவர் என்ற மாதிரி பல ஜாதியினர் இருக்கின்றனர். அவர்களது பழக்க வழக்கங்கள் சில பகுதிகளில் **Badagas** மாதிரியும், வேறு பகுதியில் தமிழர்கள், கன்னடியர்கள் மாதிரியும் இருக்கின்றன. நிலம்பூர் ராஜாவின் கீழ் ஜென்மியின் ஆதிக்கத்தில் இருந்ததால், சில பகுதிகளில் சில மலையாள பழக்க வழக்கங்களும் இருக்கின்றன. எனவே, அங்குள்ள மக்கள் மிச்ர ஜாதியை சேர்ந்தவர்கள் என்று சொல்லமுடியுமே தவிர, தீர்மானமாக இன்ன ஜாதியை சேர்ந்தவர்கள் என்று சொல்லமுடியாது. ஆகவே, கூடலூரை பற்றி நான் கூறவிரும்புவது எல்லாம், நீலகிரி மலை தமிழ் நாட்டுடன் சேரவேண்டுமென்றால், அதைச் சேர்த்து, கூடலூரையும் அத்துடன் சேர்க்கவேண்டுமென்பதுதான். இரண்டும் ஒரே ஜில்லாவாக தமிழ் நாட்டுடன் இணையவேண்டுமென்பதை நான் ஆதரிக்கிறேன்.

எல்லைக்கோடு வகுக்கும்போது, தீவு தீவாக அங்கும் இங்கும் சேர்க்காமல், தொடர்ச்சியாக ஒரு வரையறை வகுத்து, **islands, pockets, enclaves,** ஒன்றுமில்லாமல், ஏக தேசம் கிராமத்தை அடிப்படையாக வைத்து எல்லைக்கோடு வகுக்கவேண்டும். அப்பொழுதுதான் எல்லைக்கோடுகள் சரியானதாக அமையும்.

நெய்யாற்றங்கரை பற்றி இறுதியாக கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். எனக்கு இந்த பிரதேசம் பரிச்சியப்பட்ட பிரதேசம். நான் சொல்லப்போவது தமிழர்களுக்கு பிடிக்காததாய் இருந்தாலும் கூட, சொல்ல ஆசைப்படுகிறேன். மிஸ்டர் ஜி. ராமச்சந்திரன், நெய்யாற்றங்கரையில் ஒரு பகுதியிலிருந்து போனதடவை அசெம்பிளி எலெக்ஷனுக்கு நின்றபோது, நான் பல கிராமங்களை சுற்றிப் பார்த்தேன். நெய்யாற்றங்கரை தாலுகாவில் உள்ள எல்லா கிராம விவரங்களும் எனக்குத் தெரியாது என்றாலும் நான் புள்ளி விவரங்களை பார்த்தமட்டில் சுமார் 60 சத விகிதத்திலிருந்து 65 சதவிகிதம் வரை மலையாளிகள் அந்த தாலுகாவில் இருக்கின்றனர். நெய்யாற்றங்கரைக்கு தெற்கே உள்ள கிராமங்களில் தமிழர்கள் அதிகமாக இருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. ஆனால்

[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

[23rd November 1955

நெய்யாற்றங்கரை தாலூகாவை மொத்தமாக எடுத்துக்கொண்டால், அதில் மலையாளிகள் நிச்சயமாக 65 சதவிகிதத்திற்கு மேல் இருக்கிறார்கள் என்று ரைனஸ புள்ளிவிவரங்களில் பார்த்தேன். இப்படி இந்த கமிஷன் ரிப்போர்ட் டின் மீது நான் பேசும்போது கேள்வி வந்தால் பதில் சொல்லவேண்டும் என்பதற்காக பார்த்தேன். குழித்துரை தாலூகாவைச் சேர்ந்த கிரா மங்களில் தமிழர்கள் அதிகமாக இருக்கலாம். எனக்கு கிராம புள்ளி விவரம் தெரியாது என்று முதலிலேயே கூறினேன். ஆகவே, எல்லைக் கோடுகளை வகுக்கும் போது, கிராமத்தை அடிப்படையாக வைத்து, கிராமத்தை துண்டுபோடாமல் அதேசமயத்தில் இங்கும் அங்கும் திட்டுப் பகுதிகள் விட்டுப் போகாமல், அதோடு மலையாளிகளுக்கும் கஷ்டம் ஏற்படாமல், நாமும் வாழக்கூடிய வகையில், எல்லைக்கோடுகளை வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லைகள் எப்படியிருந்தாலும், மொழிவாரி மாகாணங்கள் வந்தாலும், ஆந்திரர்களும், தமிழர்களும், மலையாளிகளும் எப்போதும் மனதில் வேற்றுமையில்லாமல், ஒன்றுக வாழும் முறையில் நம்முடைய நடத்தை இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொணடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

11 a.m. **Sri R. V. Swaminathan :** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிப்பது என்ற நிலைமைக்கு வந்துவிட்டோம். பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிப்பது நியாயமா, சரியா என்பதைப்பற்றி என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எந்தக் காலத்திலும் சிலர் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயங்களையே, அதுவும் காலத்தையொட்டி எழுகின்ற மக்கள் கருத்தை ஒட்டியே அது சரியோ, தப்போ—பேசுவது வழக்கம். தங்களுடைய கருத்து எதற்காவது எதிர்ப்பு இருக்கும் என்று தெரிந்தால் அதை சொல்லவேமாட்டார்கள். ஆனால் சிலர் தப்போ, சரியோ தங்கள் மனதில் படுகின்ற கருத்தைத்தான் தைரியமாக எடுத்துச் சொல்வார்கள். நானும் அப்படிதான். என் மனதில் எது சரியென்று படுகிறதோ அதையே எடுத்துச் சொல்வது வழக்கம்.

குறிப்பாக இன்றையதினம் பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிப்பது என்பது மிகவும் தவறானது என்பதே என் கருத்து. '1920-ம் வருஷத்திலேயே மகாத்மா காந்தி மொழி அடிப்படையில் ராஜ்யங்களை அமைக்கவேண்டுமென்று சொல்லிவிட்டார். ஆகவே 1955-ம் வருஷத்தில் மொழி அடிப்படையில் மாகாணங்களை அமைக்கிறோம்' என்று சொல்வது சரியல்ல. இன்றைக்கு உணர்ச்சிவசப்பட்டு மாகாணங்களை மொழி அடிப்படையில் பிரித்துவிட்டாலும்கூட நாளைக்கு தேசமக்கள் எல்லோரும் தாங்கள் ஒரு பெரிய தவறை செய்துவிட்டோம் என்பதை நிச்சயமாக உணர்ந்து கொள்ளத்தான் போகிறார்கள் என்று சொல்ல விருப்புகிறேன். 1920-ம் வருஷத்தில் பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்களை அமைக்கவேண்டுமென்று மகாத்மா காந்தி சொன்னபொழுதே, அது மிகவும் தவறான கருத்து என்று தான் சொன்னதாக ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள் சொன்னார்கள். அதுஉண்மை. இருப்பினும் 1920-ம் வருஷத்திலேயே சொல்லிவிட்டார்களே, ஆகவே அதை இப்பொழுது நிச்சயமாகச் செய்யத்தான் வேண்டுமென்று சொல்வது கொஞ்சம்கூட சரியல்ல. 1920-ம் வருஷத்தில் அந்தக் கருத்து சற்று நியாயமானதாகக்கூட இருக்கலாம். ஆனால் 1955-ம் வருஷத்தில் அந்தப் பத்தாம் பசலிக் கருத்தை காரியத்தில் நிறைவேற்றுங்கள் என்றால் அதனால் எவ்வளவோ தீமை பின்னால் ஏற்படப் போகிறது என்பதை இன்றே எச்சரிக்க விரும்புகிறேன்.

கடந்த இருநூறு நூற்றாண்டுகளாக தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்தே சென்னை ராஜ்யத்தில் இருந்தார்கள் என்றால் அதனால் என்ன தீமை விளைந்துவிட்டது என்று கேட்கிறேன். இதுவரையில் நாம் ஒற்றுமையாக இல்லையா ? எல்லோரும் ஒன்று சேர்ந்து இருந்ததினால் அவரவர்களுடைய பாஷை வளராமல்

23rd November 1955] [Sri R. V. Swaminathan]

போய்விட்டது என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். எல்லோரும் ஒன்று சேர்ந்து இருந்ததினால் தமிழ் வளர்ச்சி குன்றி இருக்கிறதா என்று கேட்கிறேன் ? இல்லவே இல்லை. எல்லோரும் சேர்ந்து இருந்ததினால் தெலுங்கு வளர்ச்சி குன்றி இருக்கிறதா என்று கேட்கிறேன் ? இல்லவே இல்லை. ஆனால், அதனால், ஏற்பட்ட நன்மை என்ன ? தெலுங்கர்களுடைய கலாசாரம், பழக்க வழக்கம் இவற்றை தமிழர்கள் அறிந்து கொள்ளவும், தமிழர்களுடைய கலாசாரம், பழக்க வழக்கம், நாகரீகம் இவற்றை தெலுங்கர்கள் அறிந்து கொள்ளவும் முடிந்தது. இதேபோலத்தான் மலையாளிகளுடைய, கன்னடர்களுடைய நாகரீகம், பண்பாடு, கலாசாரம் இவற்றை நாம் அறிந்துகொள்ள முடிந்தது. அதேபோல அவர்களும் அறிந்து கொள்ள முடிந்தது. அதனால் நம் எல்லோருடைய அனுபவமும் வளர்ந்திருக்கிறது. ஆனால் நாட்டில் உள்ள ஒரு சில அரசியல் கட்சிகள் எப்படியாவது தங்களுடைய செல்வாக்கை தேடிக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மக்களுடைய உணர்ச்சிகளை தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். பாம்பேயில் என்ன நடந்தது ? மகாராஷ்டிர ராஜ்யம் வேண்டுமென்று மகாராஷ்டிரர்கள் கேட்டால் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கம்யூனிஸ்டுகள் பெரிய இளர்ச்சியை ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் லட்சக் கணக்கான ரூபாய்கள் சேதம். அதேபோல இன்றைக்கு ஒரு சிலர் பாஷாவாரி மாகாணங்கள் ஏற்படுத்த வேண்டுமென்ற இளர்ச்சியை ஆரம்பித்துவிட்டார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த நாட்டிற்கு எவ்வளவோ தீங்கு விளைவித்திருந்தாலும்கூட ஒரே ஒரு நன்மை செய்திருப்பதை நாம் எல்லோரும் மறந்துவிடமுடியாது. பல மொழி பேசக்கூடியவர்களையெல்லாம் கொண்டு மாகாணங்களை அவர்கள் அமைத்ததினால்தான் நாம் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகவும், ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு விளக்கவும் முடிந்தது. அதனால் தேச ஐக்கியமும் ஏற்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கமே கடைசியாக நம்முடைய ஒற்றுமையைக் குலைக்க முயன்று தோல்வி அடைந்து ஓடிவிட்டார்கள். அந்த ஒற்றுமையை என்றென்றைக்கும் குலைக்க முடியாதபடி காலஞ்சென்ற ஸ்ரீ சர்தார் வல்லபாய் படேல் செய்துவிட்டு போனார். சிறிது சிறிதாக சிதறிக் கிடந்த சமஸ்தானங்களையெல்லாம் இந்திய யூனியனுக்குள் ஸ்ரீ வல்லபாய் படேல் கொண்டுவந்துவிட்டார் என்பதை நாமும், நமது வருங்காலச் சந்ததிகளும் ஒருபோதும் மறக்கமுடியாது.

ஆனால் இன்றையதினம் ஸ்ரீ சர்தார் வல்லபாய் படேல் இல்லை. மீண்டும் ஜாதி வெறி, ஜாதி பித்து, மாகாணப் பித்து யாவும் தலைவிரித்தாட ஆரம்பித்துவிட்டது. இன்றைக்கு மட்டும் ஸ்ரீ சர்தார் வல்லபாய் படேல் இருந்திருப்பாரேல் இந்த ஜாதி வெறி, ஜாதி பித்து, மாகாணப் பித்து யாவற்றுக்கும் மண்டையில் அடித்து, நாட்டில் இவை தலைதூக்க விடாமல் அடித்திருப்பார். ஆனால் இன்றைக்கு மொழிவழி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிப்பதினால் ஏற்படும் நன்மை தீமைகளைத் தெரிந்தோ தெரியாமலோ நாம் மொழி அடிப்படையில் ராஜ்யங்களைப் பிரிப்பது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம்.

ஆனால் உங்களுக்குத் தெரியும். இப்படிப்பட்ட தவறை எப்படி காங்கிரஸ் ஸ்தாபனம் செய்தது என்று ஸ்ரீ கே. பி. மேனன் கேட்டார்கள். காங்கிரஸ் கமிட்டி எவ்வித தீர்மானம் செய்யும் என்றும் சொன்னார்கள். பெரிய தேசிய ஸ்தாபனம் நாட்டு மக்களுக்கு வழி காட்டுவது எப்படி தவறு என்று தெரியவில்லை.

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான் ஜீவானந்தம் அவர்களும் பேசினார்கள். ஸ்ரீமான் ஜீவானந்தம் அவர்களை 1927-ம் வருஷத்திலிருந்து நான் அறிவேன். அப்பொழுது அவர் காங்கிரஸில் இருந்தார். அவரும் நானும் கிராமம் கிராமமாகச் சென்று தொண்டாற்றி இருக்கிறோம். அவரோடு நான் தொடர்பு கொண்ட நாள் முதலாக அவரைப்பற்றி நான் அறிந்துகொண்டது ஒன்றுதான். அதாவது எந்தக் கருத்தையாகட்டும் அவர் "வெட்டு ஒன்று, துண்டு இரண்டு" என்கின்ற முறையில்தான் எடுத்துச் சொல்லுவார்கள். ஆனால் அப்படிப்பட்ட பழக்கம் உடையவர் நேற்றையதினம்

[Sri R. V. Swaminathan]

இந்த ராஜ்யப் பிரிவினை விஷயமான பிரச்னையின் மீது பேசும் போது 'வழவழா கொழகொழா' என்று பேசினார்கள். அவர்கள் பேசியதி லிருந்து அவருடைய கட்சி இப்பிரச்னையின்மீது தெளிவாக ஒரு முடிவுக்கு வரவில்லை என்பதுதான் புரிகிறது. எப்படியோ மக்களது உணர்ச்சியை நாட்டில் இளப்பிவிட்டு பலாத்காரத்தில் மக்களை இறங்கும்படி செய்து நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணுவது என்றுதான் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை என்று நினைக்கும்படித்தான் இருக்கிறது. பம்பாயில் நடந்த நிகழ்ச்சியும் இதைத்தான் குறிக்கிறது.

பாஷாவாரி அடிப்படையில் மாகாணத்தைப் பிரிப்பது என்றால் தமிழ் பேசக்கூடியவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அவர்கள் வசிக்கும் பிர தேசங்களை எல்லாம் தமிழ் ராஜ்யத்துடன் சேர்ப்பதே நியாயம். தமிழ் ராஜ்யத்துடன் சேர்க்கவேண்டிய பகுதிகளில் திருவாங்கூர்-கொச்சியிலுள்ள 9 தாலூகாக்களில் 5 தாலூக்காக்களை எவ்வித சச்சரவு இன்றியும் கொடுத்து விட்டார்கள். ஆனால் பீர்மேடு, தேவிகுளம் போன்ற தாலுக்காக்களை கொடுக்கத் தயங்குகிறார்கள். ஒன்று பாஷை அடிப்படையில் மாகாணங் களைப் பிரிப்பது என்று முடிவு செய்துவிட்டால் பாஷை அடிப்படையிலேயே மாகாணங்கள் பிரிக்கப்படவேண்டும். அதை விட்டு, பொருளாதாரம், நிர் வாகம் இவற்றையும் கணக்கில் கொண்டு பிரிக்கிறேம் என்று சொல்வது பொருந்தாது. பாஷை அடிப்படையில் மாகாணங்களைப் பிரித்தால் சில ராஜ்யங்கள் பொருளாதாரத் துறையில் வளம் குன்றிப் போகும் என்றால் மத்திய அரசாங்கத்தார் அந்த ராஜ்யங்களுக்கு அதிக உதவி அளித்துக் கொண்டு போகலாம். அதற்காக மற்றொரு ராஜ்ய மக்கள் பாதிக்கப்படும் படியாக சிபார்சு செய்வது சரியல்ல. இப்படிச் செய்வதால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படாதா என்று கேட்கிறேன். இன்றைக்கே திரு வாங்கூர்-கொச்சி வழியாக ஓடி அரபிக்கடலில் விழும் நதிகளை சென்னை ராஜ்யப் பக்கம் கொண்டுவரலாம் என்றால் அதன் தண்ணீர் முழுவதும் வீணாகுமே சரி, ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்கமாட்டோம் என்று அந்த ராஜ்ய முதன் மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். இத்தகைய மனப்பான்மை கொண்டவர்களோடு தமிழ் பகுதிகளை சேர்ப்பதினால் தமிழ் பகுதியிலுள்ள மக்களுக்கு எவ்வித தீமை வர்படும் என்பது நமக்குத் தெரியும்.

கனம் நிதி மந்திரி அவர்கள் பேசும்போது ஜன சங்கியில் கொடுக்கப் பட்டிருக்கும் புள்ளி விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். தேவிகுளம், பீர்மேடு முதலியவற்றில் 1931-ம் வருஷம் மூவாயிரம் பேர்கள் இருந்தார் கள், 1951-ல் அறுபதாயிரம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால் இதன் பொருள் என்ன? மலையாளிகள் பிரஜா உற்பத்தியில் சிறந்தவர்கள் என்பது நமக்குத் தெரியும். அதேபோல தமிழர்கள் பிரஜா உற்பத்தியில் மலையாளிகளுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதையும் நாம் மறக்கக் கூடாது. (சிரிப்பு.) ஆகவே மலையாளிகள்தான் பெரும்பாலும் அங்கே வந்து குடியேறி இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிகிறதே தவிர தமி ழர்கள் புதியதாக யாரும் அங்கே போய்க் குடியேறவில்லை. அங்கேயுள்ள தமிழர்கள் வந்து போகக்கூடிய கூலியாட்கள் என்று சொல்லுவது மிகவும் வருந்தவேண்டிய விஷயம். தமிழர்கள் கூலிகளாக வருகிறார்கள் என்றால் அதைப்போலவே மலையாளிகளும் கூலிகளாகத்தான் வந்து போகிறார்களே தவிர அங்கே மலையாளிகள்தான் ஜாஸ்தி இருக்கி றார்கள் என்று சொல்லுவது சரியல்ல. விட்டுக்கொடுப்பதை பரந்த மனப்பான்மை என்று சொல்லக்கூடாது. தமிழர்களுக்கு சேரவேண்டிய பகுதிகளையெல்லாம் தமிழ் ராஜ்யத்துடனேயே சேர்க்க தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அதைப்போலவே நெய்யாற்றங்கரைப் பிரதேசத்தில் மலையாளிகள் தான் ஜாஸ்தி என்று சொன்னார்கள். அதுகூட தவறான கணக்குத் தான். அங்கே தமிழர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். குறிப்பாக ஒரு பெயரைப் பாருங்கள். ஒருவர் பெயர் குஞ்சன் நாடார் என்று இருக்கிறது. குஞ்சன் என்றால் மலையாளியின் பெயர் போல் இருக்கிறது. ஆனால் நாடார் என்பது தமிழருக்குள்ள பெயர்.

23rd November 1955] [Sri R. V. Swaminathan]

அந்த எல்லை ஓரங்களில் இருக்கக்கூடியவர்கள் பெரும்பாலும் இரு மொழியும் பேசக்கூடியவர்கள். வீட்டில் தமிழ் பேசுபவர்கள் வெளியே போய் மலையாளம் பேசுகிறார்கள் என்றால் அவர்களையெல்லாம் மலை யாளிகள் என்று எப்படிச் சொல்லுவது என்று கேட்கிறேன்.

மாகாணங்களையே பாஷாவாரியாகப் பிரிப்பது என்பது மிகவும் தவ றானது. எப்படியோ அந்தப் பெரிய பாவத்தைச் செய்வது என்று முடிவு செய்து விட்டோம் என்றால் அந்தப் பெரிய பாவத்தைச் செய்கிறபோது ஓரளவுக்கு நியாயமாகவாவது அதைச் செய்வோம். ஆகவே தமிழ் பிர தேசம் யாவும் தமிழ் நாட்டுடன் சேர வேண்டு மென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI M. NARAYANAN NAMBIAR : മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, സ്റ്റേറ്റു പുനഃസംഘടനകമ്മിഷൻ കാസർഗോഡ് താലൂക്ക് മുഴുവനും കേരളത്തിൽ ഉൾപ്പെടുത്തി യിട്ടുള്ളതിനെ കാസർഗോഡ് താലൂക്കിലെ ബഹുഭൂരിപക്ഷം ജനങ്ങളും സന്തോഷത്തോടു കൂടി സ്വാഗതം ചെയ്കയാണു് ചെയ്യുന്നതു്. അങ്ങനെയിരിക്കുമ്പോൾ കാസർഗോഡ് താലൂക്കിനെ വെട്ടിമുറിക്കണമെന്നും ചന്ദ്രഗിരിപ്പുഴക്കു വടക്കുള്ള ഭാഗങ്ങളെ കർണ്ണാടക സംസ്ഥാനത്തോടു ചേർക്കണമെന്നും തെക്കുള്ള ഭാഗങ്ങൾ മാത്രമേ കേരളസംസ്ഥാനത്തിൻ ചേർക്കാവൂ എന്നും ഒരു വാദം കന്നടക്കാർ മുന്നോട്ടു കൊണ്ടുവന്നിട്ടുണ്ടു്. കാസർഗോഡ് താലൂക്കിൽ ചന്ദ്രഗിരിപ്പുഴയുടെ വടക്കുഭാഗത്തു താമസിക്കുന്ന ഒരുവനെന്ന നിലയി ലാണു് ഞാൻ ഇപ്പോൾ സംസാരിക്കുന്നതു്. മലയാളികൾ അധികമായും ആധിപ ത്യപ്പെട്ടുമായ കേരളത്തിന്റെ അതിർത്തി വടക്കു നേത്രാവതി നദിയായിരുന്നു. പക്ഷെ, അങ്ങനെ തന്നെ കേരളസംസ്ഥാനത്തിനു് ഉണ്ടാകാൻ പോകുന്നതു്. കാസർഗോഡ് താലൂക്ക് മാത്രമേ കേരളത്തോടു ചേർക്കാൻ കമ്മീഷൻ ശിപാർശ ചെയ്തിട്ടുള്ളു. ഭാഷയും ഭൂമിശാസ്ത്ര പരമായ ബന്ധവും സാമീപ്യവും ഭരണസൌകര്യവുമെല്ലാം നോക്കിയിട്ടാണു് കമ്മീഷൻ ഇങ്ങനെ തീരുമാനിച്ചതു്. ഇതു് ഡാർ കമ്മീഷനേറ്റിലും അംഗീകരിച്ചിട്ടുള്ള ഒരു വസ്തുതയാണു്. എന്നാൽ ഇപ്പോൾ കാസർഗോഡ് താലൂക്കിനെ കേരളത്തോടു ചേർക്കണമെന്നു കമ്മീഷൻ തീരുമാനിച്ചതു് ഭരണസൌകര്യത്തെ മാത്രം നോക്കിയിട്ടാ ണെന്നും ഭാഷയേയോ മറ്റു പരിതഃസ്ഥിതികളെയോ പരിഗണിച്ചിട്ടില്ലെന്നുമാണു് കാസർഗോഡ് താലൂക്ക് മുഴുവനോ അല്ലെങ്കിൽ ചന്ദ്രഗിരിപ്പുഴയ്ക്കു വടക്കുള്ള ഭാഗമെങ്കി ലുമോ കർണ്ണാടകത്തിൽ ചേർക്കണമെന്നു ആവശ്യപ്പെടുന്നവർ ഉന്നയിച്ചിരിക്കുന്ന വാദം. ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി ഇവിടെ ഹാജരാക്കിയ കണക്കെടുപ്പനുസരിച്ചു കാസർഗോഡ് താലൂക്കിൽ ഞാനടക്കം എട്ടരലക്ഷം മലയാളികളുടെ സംഖ്യ 295,707 ആണു്. ബാക്കിയു ള്ളവർ, കന്നടം, തുളു, മറ്റു ഭാഷകൾ സംസാരിക്കുന്നവർ, എല്ലാംകൂടെ ചേർന്നാലും, 116,057 മാത്രമെയുള്ളു. കർണ്ണാടകം മാതൃഭാഷ സംസാരിക്കുന്നവരുടെ സംഖ്യ കണക്കു കിയാൽ ആകെ ജനസംഖ്യയുടെ 5 ശതമാനമേയുള്ളു. ഇനി ചന്ദ്രഗിരിപ്പുഴയ്ക്കു വട ക്കുള്ള ഭാഗം മാത്രം എടുത്തുനോക്കിയാലും 111,237 പേർ മലയാളം സംസാരിക്കുന്നവ രാണു്. കർണ്ണാടകം സംസാരിക്കുന്നവരുടെ സംഖ്യ വെറും 18,419 ആണു്. ഇതായതു്, മലയാളം സംസാരിക്കുന്നവർ 51.74 ശതമാനവും കന്നടം സംസാരിക്കുന്നവർ 9.05 ശതമാനവും. തുളുഭാഷയ്ക്കു് കർണ്ണാടകത്തോടാണു് ബന്ധമെന്നും അതുകൊണ്ടു് തുളു സംസാരിക്കുന്ന ആളുകളുടെ കർണ്ണാടകക്കാരുടെ കൂട്ടത്തിൽ ചേർക്കണമെന്നും വാദി ക്കുന്നുണ്ടു്. ആ വാദത്തിനു തരിമ്പുപോലും പുറകിലല്ല. വാദത്തിനുവേണ്ടി അതു സമ്മതി ച്ചാലും കന്നടം സംസാരിക്കുന്നവരും തുളു സംസാരിക്കുന്നവരും ചേർന്നാൽ 35 ശതമാനമേ വരുന്നുള്ളു. തുളുവിനു കർണ്ണാടകത്തോടാണു് ബന്ധമെന്ന വാദം ശരിയല്ല. തുളു മലയാ ളത്തിന്റെതന്നെ ഒരു ദേശ്യരൂപമാണു്. Languages of India Series ൽ എല്ലിസ് പറഞ്ഞിട്ടുള്ളതു് "Tulu is a dialect of Malayalam" എന്നാണു്. പതിനാലാം നൂറ്റാണ്ടിന്റെ അവസാനംവരെ മലയാളലിപിയിലായിരുന്ന തുളുപുസ്തകങ്ങൾ ഞങ്ങൾക്കിടയിലുണ്ടു്. പുതുതായി കേരളലയനാന്തരകാലത്തു കണ്ടുപിടിച്ചതല്ല തുളു.

സർ, ചന്ദ്രഗിരിപ്പുഴയ്ക്കു വടക്കുള്ള തുരിപക്ഷം വരുന്ന മലയാളികളുടെ അഭിപ്രാ യത്തെക്കുറിച്ചായിട്ടുള്ളതും അവരുടെ താല്പര്യങ്ങളെ അവഗണിച്ചുകൊണ്ടുള്ളതുമായ ഒരു വാദമാണു് നമ്മുടെ കർണ്ണാടകസുഹൃത്തുക്കൾ ഇവിടെ കൊണ്ടുവന്നിട്ടുള്ളതു്. അവ രുടെ വാദത്തിനു് പിന്തുണയായി കുറെ വിചിത്രമായ കണക്കുകളും ഹാജരാക്കിയി ട്ടുണ്ടു്. അവിടെയുള്ള 166 സ്കൂളുകളിൽ 144 സ്കൂളുകളിലും അദ്ധ്യയനമാധ്യമം കന്നട

മഞ്ചേശ്വരം 20 സ്ഥലങ്ങളിൽ മാത്രമേ മലയാളം അദ്ധ്യയനഭാഷയായിട്ടുള്ളുവെന്നും അതു പ്രദേശം കർണ്ണാടകത്തിന്റെ ഭാഗമാക്കണമെന്നതിനു തെളിവാണെന്നുമാണു് പറയുന്നതു്. ഒരു ലക്ഷത്തിപ്പതിനോരായിരത്തിനു മേൽ വരുന്ന മലയാളികൾക്കു് കേവലം 20 സ്ഥലങ്ങളും പതിനെണ്ണായിരം വരുന്ന കണ്ണടകക്കാർക്കു്, ഇരുവംകൂടെ ചേർത്തും എഴുപതിനായിരം മാത്രം വരുന്ന ആളുകൾക്കു്, 146 സ്ഥലങ്ങളാണു് അവിടെയുള്ളതെന്നു പറഞ്ഞാൽ മലയാളികൾക്കു് വിദ്യാഭ്യാസ സൌകര്യങ്ങൾ ഉണ്ടാക്കിക്കൊടുക്കാൻ ചുമതലപ്പെട്ട കണ്ണാടകക്കാരും ഭരണാധികാരികൾക്കാണു് അതിന്റെ ഉത്തരവാദിത്വം. മലയാളികൾക്കു് വിദ്യാഭ്യാസ സൌകര്യങ്ങൾ ഉണ്ടാക്കിക്കൊടുക്കുന്നതിൽ തെക്കൻ കണ്ണാടകത്തിലെ ഭരണാധികാരികൾ കാണിക്കുന്ന ഉദാസീനതയും നിരുത്തരവാദിത്വവുമാണു് ഇതു് വിളിച്ചറിയിക്കുന്നതു്. കാസർഗോഡു് താലൂക്കു മുഴുവൻ കേരളസംസ്ഥാനത്തോടു ചേർക്കണമെന്നു പറയുന്നതിന്റെ മുഖ്യകാരണങ്ങളിലൊന്നു് ഇതുതന്നെയാണു്. ഇന്നലെ കൌൺസിലിൽ ശ്രീ എം. പി. ഗോവിന്ദ മേനോൻ ചന്ദ്രഗിരിപ്പുഴയ്ക്കു വടക്കുള്ള ഏകാശവമേണ്ടു് ഹൈസ്കൂളിൽ മലയാളമാണു് അദ്ധ്യയനഭാഷയെന്നു പറഞ്ഞപ്പോൾ ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ശ്രീ നരസപ്പയ്യ അവിടെ അങ്ങനെയൊരു സ്കൂളേ ഇല്ലെന്നു് ഖണ്ഡിച്ചു പറഞ്ഞതായി ഞാൻ മനസ്സിലാക്കുന്നു. വാസ്തവത്തിനു് നേരെ വിരുദ്ധമായ ഇത്തരം പ്രസ്താവനകൾ കണ്ണാടക നേതാക്കന്മാരിൽനിന്നും വരുന്നതു് വളരെ ഖേദകരമാണെന്നു് പറയാതെ നിവൃത്തിയില്ല. ഈ ഒരു സ്കൂളുതന്നെ ഉണ്ടായതെങ്ങനെയാണെന്നു പറയുവാൻ ഞാനാഗ്രഹിക്കുന്നു. കാസർഗോഡു് ഒരു ഹൈസ്കൂളിൽ പാരലൽ ക്ലാസ്സു് വേണമെന്നു് 1937 മുതലേ തുടർച്ചയായി അദ്ധ്യർത്ഥനകൾ നടത്തിക്കൊണ്ടിരുന്നിട്ടും അവിടത്തെ ഹൈസ്കൂളിൽ പാരലൽ ക്ലാസ്സു് ആരംഭിക്കുവാനുള്ള ഒരുദ്യോഗും തെക്കൻ കണ്ണടകത്തിലെ ഡീസ്ട്രിക്ടു് ബോർഡു് പ്രദർശിപ്പിച്ചിരുന്നില്ല. ഒടുവിൽ മുഴു അസംബ്ലിയിൽ മെമ്പറായിരുന്ന പരേതനായ മുഹമ്മദു ശേമ്മനാടു് സാഹിബു് ഗവമേണ്ടിനെ സമീപിച്ചു് പരിശ്രമങ്ങൾ നടത്തിയതിന്റെ ഫലമായിട്ടാണു് ഇങ്ങനെ ഒരു ഹൈസ്കൂളെങ്കിലും അവിടെ സ്ഥാപിക്കാൻ ഇടയായിട്ടുള്ളതു്. അവിടത്തെ ആളുകൾ ഭൂരിപക്ഷം മലയാളം സംസാരിക്കുന്നവരാണു്. അവർക്കു് വിദ്യാഭ്യാസ സൌകര്യങ്ങൾ ഉണ്ടാക്കിക്കൊടുക്കുന്ന കാര്യത്തിൽ ജില്ലാ ബോർഡു് എന്നുമാത്രം അനാസ്ഥയും അവഗണനയുമാണു് കാണിച്ചിട്ടുള്ളതെന്നു ഇതുകൊണ്ടു് തെളിയുന്നുണ്ടു്.

സർ, മറെറാരു ന്യായം ഇവിടെ ഉന്നയിച്ചിരിക്കുന്നതു് അവിടെയുള്ള 34 പഞ്ചായത്തു ബോഡുകളിൽ 33-ം കണ്ണാടകത്തിൽ ലയിക്കുന്നതിനു അനുകൂലമായി പ്രമേയങ്ങൾ പാസ്സാക്കിയിട്ടുണ്ടെന്നും ഒരു പഞ്ചായത്തു മാത്രം, അതായതു്, എന്റെ താലൂസ്ഥലമായ മൂളിയാർ പഞ്ചായത്തു മാത്രം ആണു് വ്യത്യസ്തമായ ഒരു നിലപാടു് സ്വീകരിച്ചിട്ടുള്ളതെന്നുമാണു്. പാർട്ടി അടിസ്ഥാനത്തിലാണു് പഞ്ചായത്തു തിരഞ്ഞെടുപ്പുകളിൽ സ്ഥാനാർത്ഥികൾ മത്സരിച്ചതും തിരഞ്ഞെടുക്കപ്പെട്ടിട്ടുള്ളതും. പഞ്ചായത്തു തിരഞ്ഞെടുപ്പിൽ ഭാഷ ഒരു പ്രശ്നമായിരുന്നില്ല. ഭാഷയുടെ അടിസ്ഥാനത്തിലല്ല തിരഞ്ഞെടുപ്പു നടന്നിട്ടുള്ളതു്. ഇന്നത്തെ പഞ്ചായത്തു ബോഡംഗങ്ങളെല്ലാം രാജിവെച്ചിട്ടു് ഭാഷയുടെ അടിസ്ഥാനത്തിൽ ഭാഷയെ ഒരു തിരഞ്ഞെടുപ്പു പ്രശ്നമാക്കിക്കൊണ്ടു് വീണ്ടും തിരഞ്ഞെടുപ്പിനു നില്ക്കുവാൻ തയ്യാറാണോ എന്നു ഞാൻ ചോദിക്കുന്നു. കണ്ണാടകലയനവാദികളിൽ ഒരൊറ്റയാൾക്കും ആ തിരഞ്ഞെടുപ്പിൽ വിജയിക്കുവാൻ സാദ്ധ്യമല്ലെന്നു് ഞാൻ തീർത്തു പറയുന്നു. ഈ വെല്ലുവിളി സ്വീകരിക്കുവാൻ അവർ തയ്യാറുണ്ടോ? സർ, ചന്ദ്രഗിരിപ്പുഴയുടെ വടക്കു് മലയാളികൾക്കാണു് ഭൂരിപക്ഷമെങ്കിലും കൂടുതൽ വിദ്യാസമ്പന്നരും കച്ചവടം ഉടമ്പടിയവയിലും സാമ്പത്തികസ്ഥിതിയിലും മുന്നിട്ടു നില്ക്കുന്നവരുമായ കന്നടക്കാരിലാണു് സ്വാധീനശക്തിയും പ്രാബല്യവും നിലകൊള്ളുന്നതു്. അതുകൊണ്ടാണു് പഞ്ചായത്തുകളിലും ഇരുഭാഗത്തും കന്നടക്കാർ കടന്നുകൂടിയിട്ടുള്ളതു്. അതിന്റെ അടിസ്ഥാനത്തിൽ നോക്കുമ്പോൾ പഞ്ചായത്തു ബോഡുകൾ പ്രമേയം പാസ്സാക്കിയിട്ടുണ്ടെന്ന വാദത്തിന്റെ പൊള്ളത്തരം വ്യക്തമാകുന്നതാണു്. കാസർഗോഡു് മേജർ പഞ്ചായത്തു ബോഡിലെ അംഗങ്ങളെല്ലാം രാജിവെച്ചു ഭാഷയുടെ അടിസ്ഥാനത്തിൽ കേരളത്തിൽ ലയിക്കണമോ കണ്ണാടകത്തോടു ചേരണമോ എന്ന പ്രശ്നം ജനങ്ങളുടെ മുമ്പിൽവച്ചുകൊണ്ടു് ഒരു പുതിയ തിരഞ്ഞെടുപ്പിനു അവർ തയ്യാറാണോ എന്നു് ഞാൻ ചോദിക്കുന്നു. തയ്യാറാണെങ്കിൽ ആ തിരഞ്ഞെടുപ്പിൽ കണ്ണാടക ലയനവാദികൾക്കു കേരളത്തിൽ സ്ഥാനംപോലും കിട്ടുകയില്ലെന്നു ധൈര്യസമേതം ഞാൻ പ്രഖ്യാപിക്കുന്നു.

സർ, എന്റെ ബഹുമാന്യ സ്നേഹിതൻ ശ്രീ എം. എസ്സ്. മേഗ്രാൽ, അദ്ദേഹം ഒരു മലയാളിയാണെങ്കിലും, കാസർഗോഡു് താലൂക്കു് കണ്ണാടകത്തോടു ചേർക്കേണമെന്ന ഇവിടെ വാദിക്കുകയുണ്ടായി. ഒരു മലയാളിക്കുടെയായ അദ്ദേഹം ഇതു മാതൃഭൂമിൽ സംസാരിച്ചതിൽ എനിക്കു വളരെ ഖേദമുണ്ടു്. മലയാളഭാഷയ അവഹേളിച്ചുകൊണ്ടുള്ള അദ്ദേഹത്തിന്റെ പ്രസംഗം ഖേദകരവും നിർഭാഗ്യകരവുമാണെന്നു പറയാതെ തരമില്ല. ഈ സന്ദർഭത്തിലും ഞാൻ അദ്ദേഹത്തെ വെല്ലുവിളിക്കുന്നു. രാജിവെച്ചിട്ടു് ഭാഷയുടെ അടിസ്ഥാനത്തിൽ അദ്ദേഹത്തിന്റെ നിയോജകമണ്ഡലത്തിൽ ഒരു പുതിയ തിരഞ്ഞെടുപ്പിനു നില്ക്കുവാൻ അദ്ദേഹവും അദ്ദേഹത്തിന്റെ കൂട്ടാളികളും തയ്യാറുണ്ടോ എന്നാണു് എന്റെ ചോദ്യം.

സർ, കണ്ണാടകലയനത്തിനു് അനുകൂലമായി ഉന്നയിച്ചിരിക്കുന്ന വാദങ്ങളിൽ മറെറന്നു രജിസ്റാക്കിയ ആധാരങ്ങളുടെ ഭാഷാതിരിച്ചുള്ള കണക്കിന്റെ അടിസ്ഥാനത്തിലാണു്. നാലായിരം ആധാരം രജിസ്റാക്കിയിട്ടുള്ളതിൽ പത്തു ശതമാനം മാത്രമേ മലയാളത്തിലുള്ളുവെന്നും ബാക്കി മുഴുവൻ കന്നടത്തിലാണെന്നും അതു ആ പ്രദേശത്തെ ഇടപാടുകളും വ്യവഹാരങ്ങളുമെല്ലാം കന്നടത്തിലാണെന്നുള്ളതിനു് തെളിവാണെന്നുമാണു് പറയുന്നതു്. ആധാരങ്ങൾ അധികവും കന്നടത്തിലാണു് എഴുതുന്നതെന്നുള്ളതു് വാസ്തവം തന്നെ. പക്ഷെ എന്താണു് അതിന്റെ കാരണം? അവിടെ ആധാരം എഴുതാൻ അറിയുന്നവരിലധികം അളുകളും കന്നടക്കാരാണു്. മലയാളത്തിൽ ആധാരമെഴുതുന്നവർ അവിടെയില്ല. മലയാളത്തിലെഴുതണമെങ്കിൽ 25 മൈലകലെയുള്ള കാഞ്ഞങ്ങാടു പോകേണം. അതിനുള്ള ബുദ്ധിമുട്ടും ചെലവും കാത്തിട്ടാണു് അളുകൾ കന്നടത്തിൽ എഴുതിച്ചതു്. കഴിഞ്ഞ മാസത്തിൽ ആൻതന്നെ ഒരാധാരം അന്നു എഴുതിയതിൽ മതിയെന്നുവയ്ക്കുന്നതു്. കഴിഞ്ഞ മാസത്തിൽ ആൻതന്നെ ഒരാധാരം എഴുതിച്ചതു് കന്നടത്തിലാണു്. ആധാരത്തിന്റെ ഭാഷാനോക്കി അളുകളുടെ ഭാഷ നിശ്ചയിക്കുന്നതുപോലെ അസംബന്ധം മറെറാന്നില്ല. നാലായിരം ആധാരങ്ങളിൽ 90 ശതമാനവും കന്നടത്തിലെഴുതിയതാണെങ്കിലും. ശരി സമ്മതിച്ചു. ഈ ആധാരങ്ങളെ എഴുതിച്ചവരാരാണു്? അതു പരിശോധിച്ചാൽ 75 ശതമാനത്തിലധികവും മലയാളികളാണെന്നു ബോദ്ധ്യപ്പെടും. മലയാളത്തിൽ എഴുതിക്കിട്ടാൻ സൌകര്യമില്ലാത്തതുകൊണ്ടു് കണ്ണാടകഭാഷ ഉപയോഗിക്കുന്നുവെന്നല്ലാതെ ഈ അളുകളെല്ലാം കന്നടക്കാരാണെന്നോ കണ്ണാടകത്തോടു് കൂറുള്ളവരാണെന്നോ അതുകൊണ്ടു വരുന്നില്ല.

Several of us have gone back to study the history of Karnataka, the history of Tamilnad and Malabar to find out where exactly were our boundaries once upon a time. Just as I was hearing one member from Malabar claiming land right up to Gokarnam to be incorporated into Kerala, I asked him whether Parasurama was also claimed as a Malayalee. If history mattered, I could tell you Sir, that there was a great King in Karnataka, Pulikeshi by name who defeated Harsha. Does it mean that we could lay claim to Northern India for that reason? Or should we think of the boundaries of the Vijayanagar Empire to be our boundaries or think of the conquests of Tippu? We have to stop somewhere, otherwise these problems will never be solved.

In regard to the formation of the Karnataka State the States Reorganization Commission Report has left two problems mainly for us to solve, viz., those relating to Bellary and Kasaragod. First of all I do not wish the Bellary question to be reopened because that has been settled after so much of agitation and reopening of this issue will create a dangerous precedent. If you just say that a question that has been once for all decided could be reopened by agitation, the boundaries are not going to be safe and the people would be going on agitating for something or other and even the boundaries of the new States that are going to be created may not be the final word on the subject. For this reason more than anything else I do hope, if the people of Bellary do wish that they should be part of Karnataka as they are now, nothing should stand in their way and readjustment of boundaries should not be called for. If the agitation for border adjustments goes on like this, I do not know where exactly the problem is going to land us. Do you wish to create a condition in this country where a person of one State is to be an alien in other parts of the country? Personally, I feel that we cannot be having States over-crowded with population on the one hand and leaving vast areas in the country on the other which will be left undeveloped for want of men to develop the same. But that means that the problem of many States like Kerala can be solved only by migration and there should be no obstruction even psychological to this migration. That is exactly the reason why I have asked for the entire Kasaragod taluk to remain with South Kanara. When I said that, many of my Malayalee friends were laughing at me. It appeared to them it was ridiculous for me to have claimed the entire Kasaragod taluk. But, at the same time they did not consider whether it was logical on their part to claim the entire Kasaragod taluk themselves. That is because they have been looking at this problem purely as Malayalees. The commission itself has considered that aspect and has stated that though Kannadiga opinion in South Kanara concedes the claim of Kerala up to the Chandragiri river, administratively

23rd November 1955] [Sri T. Ananta Pai]

it will be more expedient to join the whole taluk to Kerala than to break it up purely on linguistic grounds. Even though according to the Commission the area that is beyond the north of the Chandragiri river should not legitimately go to Kerala, yet for administrative reasons they thought it was undesirable to break up the Kasaragod taluk. So they recommended that the entire taluk might go to Kerala. For the same reasons I say let the whole taluk be with South Kanara as it has been for centuries. I do not want to argue with facts and figures because in any border area, it is impossible to conceive a basis where any single language group could be in a majority unless we decided here and now that in future we shall not allow any more migration. Even if the entire Kasaragod taluk goes away to Kerala, we shall have over one lakh of Malayalees among the remaining 13 lakhs of South Kanarites. Why should not the Malayalees of Kasaragod remain with us even in future as they have been for centuries?

I am particularly happy that the future Karnataka State is going to be a multi-lingual State, that is, it will consist of people talking Kannada, Tamil, Malayalam, Telugu, Thulu, Marathi and Konkani. The solution of the problem of population for Malayalees would be not to ask for a larger area because they will be creating a dangerous precedent. The point is that in case they are to migrate they should have opportunities to peacefully settle down in any part of the country without trying to claim a part of it as Mr. Vaikunta Baliga put it correctly. They should not create a condition which will prevent this solution. Therefore, Sir, I feel that the entire Kasaragod taluk should remain with us. I do not want that the Kasaragod taluk should be disintegrated and that it should be a bone of contention between Malayalees and Kannadigas. Sir, the four lakhs of Malayalees have lived with us in South Kanara. I do not think there is any difference of opinion between us all along and this States Reorganization Commission Report should not create any difference of opinion amongst us now. But I do agree if they want to go away, if the people living in the South of Chandragiri river want to go to Malabar, we should not stand in the way. But the representatives of the people of Kasaragod in this House Mr. Mogral and Mr. Baliga say that they should be in South Kanara. On the other hand, when I find that Mr. Narayanan Nambiar, who happens to belong to Hosdrug taluk, says that the entire taluk must go to Kerala, it reminds me of an antedote which was current during war time. It appears that Hitler, Mussolini and Franco were having a dinner and Franco said God had promised him half the world, Mussolini said that God had promised him the other half and Hitler said that he had not promised them anything. Therefore, Sir, if they (the people living in that area) want to go to Malabar, let them have the option to go. But let not the people of Kasaragod be taken away from South Kanara against their wish. Thank you, Sir.

*SRI P. M. MUNUSWAMY GOUNDER : கனம் உதவி சபா நாயகர், சார், கடந்த மூன்று தினங்களாக, ராஜ்ய புனர்வினை கமிஷன் p.m தயாரித்த ரிப்போர்டினைப் பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

[Sri P. M. Munuswamy Gounder] [23rd November 1955

முதலில் இந்த ரிப்போர்ட்டை தயாரித்த மெம்பர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. இங்கு இருக்கும் ஒவ்வொரு மெம்பரும், இந்த ரிப்போர்ட்டின் மீது பேசும்போது, ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் பரிசீலனைக்கு கொண்டு வருவதைப் பார்த்தால், கமிஷனின் மெம்பர்கள், எவ்வளவு சிரமப்பட்டு இந்த ரிப்போர்ட்டை தயாரித்திருக்க வேண்டுமென்பது நன்றாக விளங்கு கிறது. ஆகவே அப்படி சிரமப்பட்டு ரிப்போர்ட்டை தயாரித்த கமிஷனின் மெம்பர்களை முதலில் பாராட்ட வேண்டும். மேலும், இந்த ரிப்போர்ட்டை ஊன்றிக் கவனித்தால், கமிஷனது ராஜ்ஜியங்களுடைய பெரும்பான்மை அபிப்பிராயத்தை மனதில் முக்கியமாகக்கொண்டே சிபாரிசுகளை செய்திருக்கிறதென்றுதான் சொல்ல வேண்டும். மனிதனைப் பிறந்த ஒவ்வொருவனும் எதாவது, எந்தக் காரியத்திலாவது தவறு செய்துதான் இருப்பான். தவறு செய்யாத ஒரு மனிதனும் உலகில் இருக்க முடியாதென்றுதான் சொல்லவேண்டும். இந்த நோக்குடன், ரிப்போர்ட்டைப் பார்க்கும்போது, அந்தக் கமிஷன், அங்குமிங்குமாக இரண்டொரு சிறு தவறு தல்களைத் அபிப்பிராய பேதமூட்டும் காரியங்களையோ அதனுடைய சிபார்சு களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், கமிஷனது ரொம்ப சிரமப்பட்டு, இந்த ரிப்போர்ட்டை தயார் செய்திருக்கிறது என்ற நல்லெண்ணத்துடன், இங்கு கூடி இருக்கும் அனைவரும், அதற்கான பரிகார யோசனைகளைக் கூறி எந்த விதமான தொந்திரவோ, அபிப்பிராய பேதமோ இல்லாமல் எகோபித்த ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

தற்போது, இங்கு ஒவ்வொருவரும் எடுத்துச் சொல்லுவதெல்லாம், பீர்மேடு, தேவிகுளம், சித்தூர், இவைகள் கேரள ராஜ்ஜியத்தில் சேர்க்கக் கூடாது, அவைகள் தமிழ் ராஜ்ஜியத்துடன் இருக்க வேண்டுமென்றுதான். இப்படி சொல்லுவதை பார்க்கும்போது, நமக்கு உண்மையில் வருத்தம் தான் ஏற்படுகிறது. இந்திய நாட்டு மக்கள் எல்லாம் ஒன்று என்பதை மறந்துவிட்டு, இவ்வாறு கேட்கவேண்டி வந்ததற்காக வருத்தப்படவேண்டிய தாகத்தானிருக்கிறது. இருந்தாலும், பாஷாவாரியாக பிரிந்து போகவேண்டு மென்ற ஒரு முடிவுக்கு வரும்போது சில தவறுகளை நீக்கும் அளவுக்காவது, இவ்விஷயங்களைப்பற்றி பேச வேண்டியதாகத்தான் இருக்கிறது. காரணம் இதைப்பற்றி பேசுவதற்கும் சிபார்சு செய்வதற்கும் இதுதான் சந்தர்ப் பம், அடிக்கடி மாகாணங்களை, புனரமைப்பு செய்து கொண்டிருக்க முடியாது. தற்போது அநேக அங்கத்தினர்கள், இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டின் மேல் நடைபெற்ற விவாதத்தில் பங்குகொண்டு, முக்கியமாக, பீர்மேடு, தேவிகுளம், கோயம்புத்தூர் ஜில்லாவுடன் இணைக்கப்பட வேண்டுமென்று, எவராலும் மறுக்க முடியாத காரணங்களையும், ஆதாரங்களையும் எடுத்துப் பேசினார்கள். பாஷை அடிப்படையில் மாத்திரம் இந்த இரண்டு பகுதிகளை யும் சென்னை ராஜ்ஜியத்திற்கு கேட்கப்படவில்லை. இன்று அவ்விடங்களி லுள்ள வாழ்க்கை வசதி, பொருளாதார நிலைமை, அவைகள் தமிழ் நாட்டுடன் தொடர்ச்சியாகவுள்ள நிலைமை, இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்லித்தான், அப்பகுதிகளை சென்னை ராஜ்ஜியத்திற்கு கேட்டிருக்கிறோம். அப்படி ஆணித்தரமாக காரணங்களை எடுத்துச் சொன்ன பிறகும், சில நண்பர்கள் அது கேரள பகுதியுடன் இருக்கவேண்டுமென்று வாதாடு கிறார்கள். இருந்தபோதிலும் மெஜாரிடி அங்கத்தினர்கள், அவைகள் சென்னை ராஜ்ஜியத்துடன் சேர்க்க வேண்டுமென்று ஒத்துக்கொண்டிருப் பதால், அப்பகுதிகளை தமிழ் நாட்டுடன்தான் சேர்க்க வேண்டும். அப்படி சென்னை ராஜ்ஜியத்துடன் தேவிகுளம், பீர்மேடு இப்பகுதிகளை சேர்த்தால் தான் அங்கிருக்கும் மக்கள் சுபீட்சமாக வாழ முடியுமென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய area விலுள்ள தாலுக்காக்களான கிருஷ்ணகிரி, ஒசூரைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முன்பு எல்லாம், இந்த ஒசூர் தாலுக்காவைப்பற்றி கனம் M. முனி ரெட்டியார், M.L.A. அவர்கள்தான் பேசுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது, கனம் மெம்பர் கொல்லபெல்ல அவர்களும், கனம் பாலிதா அவர்களும் ஒசூர் ஜனத்தொகையைப்பற்றி விரிவாகப் பேசி ஒசூர் தாலுக்கா, கர்நாடகத்தில் சேர்க்க வேண்டுமென்று வாதாடினதைப் உற்று

23rd November 1955] [Sri P. M. Munuswamy Gounder]

கவனித்ததில் ஸ்ரீ கொல்லபெல்ல என்ன சொன்னார்கள் என்றால் ஒசூர் தாலுக்காவில் 90 சதவீதம் கன்னடம் பேசுபவர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் கணக்கு முற்றிலும் தவறுகும். 1931-ம் வருஷத்திய சென்சஸ் கணக்கை எடுத்துப் பார்த்தால், ஒசூர் தாலுக்காவில் ஒசூர் மாத்திரம் 13 சத வீதம்தான் கன்னடம் பேசுபவர்கள் இருக்கிறார்கள் என்பது புலப்படும். ஆகவே, கன்னடம் பேசுபவர்கள் 90 சத விகிதம் அங்கு இருக்கிறார்கள் என்ற கணக்கு தவறானது என்பதை அவரை உணர வேண்டுகிறேன். ஆதலால், இந்த ஒசூர், தற்போது கர்நாடகத்தில் சேருவதா, அல்லது ஆந்திர ராஜ்ஜியத்துடன் சேருவதா என்ற பிரச்சினையே எழவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் அங்குள்ள கிராமங் களுக்குச் சென்று, கிராம ஜனங்களை சந்தித்து பேசி இருக்கிறேன். அவர் களுடைய அபிலாஷைகள் பூராவும் தெரிந்தவன் என்ற முறையிலே இங்கு பேசுகிறேன். அம்மக்களுக்கு மைசூருடன் சேரவோ, ஆந்திரத்துடன் சேரவோ ஆசை இடையாது. அவர்கள், தற்போது சென்னை மாகாணத் துடன் இணைந்து இருப்பதினாலே, எல்லா சலுகைகளையும் வசதிகளையும் அநுப விக்க வருவதால், எப்போதும்போல் சென்னை ராஜ்ஜிய தமிழ் நாட்டுட னேயே இருந்துவிடுவோம் என்று நினைக்கிறார்கள். அங்கு இருப்பவர்கள் சில சமயங்களில் வியாபார சம்பந்தமாக ஆந்திராவுக்குப் போகலாம். ஆனால் இது ஆந்திரர்களுக்கு ஒரு பெரிய சாதகமான விஷயமல்ல.

கடந்த மாதம், ஆந்திர, சென்னை ராஜ்ஜிய எல்லை discussion-இல் இந்த ஒசூர் பிரச்சினையை எழுப்பி எல்லைத் தகராறு பேச்சு வார்த்தைகளையே ஒத்திப்போடும்படியான நிலைமை உண்டானதைக் குறித்து வருந்த வேண்டியதாகத்தான் இருக்கிறது.

DEPUTY SPEAKER : Hon. Member's time is up.

Sri P. M. MUNUSWAMY GOUNDER : This is regarding my area, Sir, this is very important subject. Kindly allow me 2 more minutes. ஒசூர், கிருஷ்ணகிரி, மைசூருக்கு சேர்ந்தாற்போல் இருந்தாலும், மைசூருக்கும் இத் தாலுக்காக்களுக்கும் அதிக மைல் தூரம் இருக்கிறது. அத்தாலுக்காவில் இருக்கும் ஜனங்களுக்கு மைசூருடனே, ஆந்திராவுடனே சேரும் அபிலாஷையே கிடையாது. அத் தாலுக்காக்களில் தென் பெண்ணை, மார்கண்டேய ஆறுகள் ஓடுகின்றன. அந் நதிகளின் தண்ணீரை கிருஷ்ணகிரி தாலுக்காவில் **Krishnagiri** என்ற நீர் தேக்கம் செய்து அங்கிருக்கும் ஜனங்களுக்கு நல்ல நீர்பாசன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந் நதிகள் மைசூரில் ஆரம்பித்து சென்னை ராஜ்ஜியத்தின் வழியாக சென்று கடலில் விழுகின்றன. ஆகவே, அந்த மக்களை ஆந்திர ராஜ்ஜியத்தில் சேர்த்தால், மிகவும் கஷ்டப்படத்தான் நேரிடும். எந்த விதமான நன்மையும் அவர்களுக்கு ஏற்படாது. ஆகவே, அரசியல் கட்சிக்காரர்கள், தங்கள் முன்னேற்றம், பதவி ஆசையை மனதில்கொண்டு சொல்லும் படியான வாதங்களைக் கேளாமல், அப்பகுதி ஜனங்களுடைய அபிலாஷைகள், அபிப்பிராயங்கள், முடிவுகள், இவைகளை ஆதாரமாகக்கொண்டு, ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி தாலுக்கா, இவைகளின் எந்த ஒரு பாகத்தையும், வேறு எந்த ராஜ்ஜியத்துடனும் இணைக்காமல் சென்னை ராஜ்ஜியத்துடனேயே, அவ்விரு தாலுக்காக்களையும் தற்போது இருந்துவருவதுபோல் நீடித்திருக்க வைக்கும்படி கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளு கிறேன்.

Sri D. K. RAJU : களம் உதவி சபாநாயகர் அவர்களே, இப் பொழுது நாம் ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டியிருக்கிறது. அதாவது புராணத்தில் நாம் கேட்டிருக்கிறோம். அந்தக் காலத்தில் பாற்கடலை மகா விஷ்ணு கடைந்த பொழுது அநேக நல்ல சமாசாரங்களோடு, கெட்ட சமா சாரங்களும் வந்ததாக கேட்டிருக்கிறோம். அதேமாதிரி இப்பொழுது இந்த ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் ரிப்போர்ட்டில் நம்முடைய தேசத்திற்கு அநேக நல்ல சமாசாரங்களும் கிடைத்திருக்கின்றன. அதோடு இந்த பாஷாவாரிச் சண்டையும் சேர்ந்து வந்திருக்கிறது. இந்தச் சண்டை சச்சரவு போடுகிறவர்கள் எல்லாம் நாம் எல்லோரும் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மையை மறந்து சண்டை போடுகிறார்கள். இது மிகவும் அதிசயப்படும்

[Sri D. K. Raju] [23rd November 1955

சந்தர்ப்பம் வந்திருக்கிறது. இதில் நம்முடைய தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு விதமாக சமாதானப்படுத்தினால்தான் நல்லது. இல்லாவிட்டால் சண்டை முற்றும் போலிருக்கிறது.

முக்கியமாக நான் இப்பொழுது நம்முடைய சென்னை ராஜ்யத்திற்கும், கேரள ராஜ்யத்திற்கும் இருக்கிற இரண்டொரு மனோபாவங்கள் பற்றி சொல்ல விரும்புகிறேன். தேவிகுளம், பீர்மேடு எரியாவோடு, நாஞ்சில் நாட்டில் சில தாலுக்காக்களும் தமிழ் நாட்டோடு சேரவேண்டும் என்பதில் பிரச்னையே இடையாது. நாஞ்சில் நாட்டில் எப்பொழுதும் தமிழர்கள்தான் மிக அதிகம். முன் காலத்தில் கேரள ராஜாக்கள் தமிழ் ராஜ்ஜியத்தின் மீது படையெடுத்து வந்து அந்தப் பகுதிகளை கேரளத்துடன் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர ஆதியில் அது தமிழ் நாட்டுடன் தான் இருந்தது. ஆகையால் அவற்றை இப்பொழுது தமிழர்கள் வேண்டுமென்று கேட்பதில் ஒரு விதமான நியாயக் குறைவும் இல்லை. தேவிகுளத்தை எடுத்துக்கொண்டால் சுமார் 50 வருஷங்களுக்கு முன்னால் அங்கே இவ்வளவு அதிகமாக ஏல விவசாயம் நடந்தது இல்லை. அந்தப் பிராந்தியம் தமிழ் நாட்டுக்கு ரொம்பப் பக்கத்தில் இருக்கிறது. மலையாளிகள் "ஹை ரேஞ்ஜ்" என்று சொல்லக் கூடிய அந்த இடத்திற்கு வரவேண்டுமென்றால், மிகவும் அடர்ந்த வனத்திற்குள் நுழைந்து வரவேண்டும். ஆகையால் அவர்களால் மிகச் சுலபமாக வரமுடியவில்லை. ஆனால் மதுரை ஜில்லா, நான் வசிக்கக் கூடிய ராமநாதபுரம் ஜில்லா ஆகிய ஓரங்களில் அதப் பக்கம் ஏல விவசாயம் ரொம்ப காலத்திற்கு முன்னாலிருந்தே செய்யப்பட்டு வந்திருக்கிறது. சுமார் 40 வருஷங்களுக்கு முன்னால் அந்த எரியாவுக்கு இனாமாகப் பட்டா பண்ணிக் கொடுக்கப்பட்டது. அப்போது முதல் இந்த பீர்மேடு, தேவிகுளம் பகுதியில் இருக்கும் விவசாயிகள் கொடுத்துக் கொண்டிருக்கும் பணத்தை செலவு பண்ணி இந்த தேவிகுளம் முதலிய இடங்களை மிகவும் அபிவிருத்தி பண்ணினார்கள். இப்போது இந்த எல்லைப் பிரச்னை வந்தவுடன் அந்த இடம் கேரளத்தைச் சேரவேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். நியாயமாகப் பார்க்கப் போனால் இந்தத் தேவிகுளம், பீர்மேடு தாலூகாக்கள் தமிழர்கள் மிகவும் அரும்பாடுபட்டு சம்பாதித்த இடம். அதில் கேரள மக்களுடைய சொத்து ஒன்றும் கிடையாது. ஆகையினால் இந்தப் பிரச்னை எப்படியிருந்தாலும் நம்முடைய தமிழர்கள் அரும்பாடுபட்டு சம்பாதித்த அந்த "எரியா"வை அபிவிருத்தி பண்ணவேண்டிய காரணத்தை உத்தேசித்தும், வேறு எந்தக் காரணத்தை உத்தேசித்தும் கூட அது கேரளத்தில் சேர்க்கப்பட நாம் சம்மதிக்கக்கூடாதென்பது என்னுடைய அபிப்பிராயம். மேலும் இதற்கு முன்னால் இந்த பீர்மேடு, தேவிகுளம் "எரியா" திருவாங்கூர் ராஜ்யத்திற்குச் சென்றால் கூட அவர்களுக்கு அந்தப் பக்கம் வருவதற்கு இடைஞ்சலாக இருக்கும். அவர்கள் மதுரை முதலிய இடங்களுக்கு வந்துதான் இருந்துகொண்டிருந்தார்கள். ஆகையினால் இந்த தேவிகுளம், பீர்மேடு "எரியா" நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்ததேயொழிய கேரளத்தைச் சேர்ந்ததென்று இப்போது நாம் சொல்வதற்கு ஒருவித நியாயமும் இல்லை. இப்போது கணக்கெடுத்துப் பார்த்தாலும் கூட அங்கே மலையாளிகளுடைய எஸ்டேட்டுகள் மிகவும் குறைவாகவும் தமிழர்களுடைய எஸ்டேட்டுகள் ஜாஸ்தியாகவும் இருக்கின்றன. இவர்களை "ப்லோடிங் பாபுலேஷன்" என்று சொல்லுவது தப்பு. தமிழர்கள் "ப்லோடிங் பாபுலேஷன்"-இல் ஜாஸ்தியாக இல்லை, குறைவாகத்தான் இருக்கிறார்கள். அதேபோல் மலையாளிகளும் "ப்லோடிங் பாபுலேஷன்"-இல் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உத்தேசித்து இந்த "எரியா" சென்னை ராஜ்யத்துடன் சேரவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

Sri M. S. SELVARAJAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, லக்ஷத்தீவுகள், அமின் தீவுகள், மினிகாய் தீவுகள் ஆகிய கடல் சூழ்ந்த பகுதிகளை உத்தேச கேரள ராஜ்யத்திலிருந்து பிரித்து மத்திய சர்க்கார் நேரடியான கண்காணிப்பில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய பிரேரணை. அந்தமான், நிகோபார் தீவுகள் சென்னை கடற்கரையை அடுத்திருந்தாலும் கூட, இலங்கை, மலேயா, தென் ஆப்பிரிக்கா முதலிய பிரதேசங்களில் 4-26 p.m.

23rd November 1955] [Sri M. S. Selvarajan]

உள்ள தமிழர்கள் தாயகத்திற்குப் போகக்கூடாதென்று அவர்கள் சொல்லக்கூடிய தருணத்தில்கூட அவர்கள் இன்னல்களைப் போக்கும் மத்திய சர்க்கார் மற்ற இடங்களுக்குப் போக முடியாதபடி மக்கள் இருக்கும் இந்த அந்தமான், நிக்கோபர் தீவுகள் தங்கள் கண் காணிப்பில் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்தத் தீவுகளைப் பற்றிச் சொல்வது மேற்கத்தியத் தீவுகளுக்குப் பொருந்தும். தவிரவும் பக்கத்தில் இருக்கக்கூடிய குட்டி இலங்கை கொக்கரித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் லக்ஷத் தீவுகள், அமின் தீவுகள், மினிக்காய் தீவுகள் ஆகிய பகுதிகளைப் பற்றி மத்திய சர்க்கார் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். குடும்பத்தில் குழந்தைகள் விசேஷ கவனத்திற்காக பாட்டி வீட்டில் விட்டு வைக்கப்படுவது போல் இந்தத் தீவுகளை மத்திய சர்க்கார் கண்காணிப்பில் விட்டுவைத்தல் மிகவும் அவசியம். அப்படிச் செய்தால் இந்தத் தீவுகள் சுதந்திர உணர்ச்சி பெற்று நல்ல முறையில் வளர்ச்சி பெறமுடியும். இவைகளையெல்லாம் கவனிப்பது மத்திய சர்க்காரின் கடமை. சமீபத்தில் மேற்கத்தியத் தீவுகளுக்கு விஜயம் செய்திருந்த நமது ராஜ்ய கவர்னர் அந்தத் தீவுகளின் எளிய, மெல்லிய தன்மையைப் பற்றிக் கூறி அவைகளைப் பற்றி மத்திய சர்க்கார் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று விசேஷக்குறிப்பு எழுதியிருக்கிறார். இவைகளையெல்லாம் கவனிக்கும்போது அந்தத் தீவுகள் மத்திய சர்க்காரின் கண்காணிப்பில் இருக்கவேண்டியது எவ்வளவு அவசியம் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய விஷயம். ராஜ்ய புனரமைப்பு கமிஷன் ஒரு பாஷை பேசும் மக்கள், பொருளாதாரம், முதலிய பல அம்சங்களை கருத்தில் கொண்டிருந்தாலும் கூட அவர்கள் விசேஷமாக பாஷையைத்தான் கவனித்து பிரிவினையைச் செய்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த நிலையில் யார் எங்கு இருந்தாலும், எத்தனை பேர்கள் எந்த பாஷைக்காரர்கள் வசித்தாலும், சென்னை சென்னைக்குத்தான் என்று முடிவுசெய்தது ஒரு நல்ல அம்சம். அதேபோல் இங்கு எல்லைப் பிரச்னைகளை விவாதிப்பதற்கு வந்து போன ஆந்திர பகுதித் தலைவர்கள் எல்லாம் கூட ஆந்திரப் பகுதியிலிருந்து ஒருசில தமிழ் பேசும் பிரதேசங்களை நாம் எடுத்துக் கொள்ளலாம் என்று உணர்ந்திருப்பதில் மத்திய சர்க்காரின் நோக்கத்தைப் புரிந்து கொண்டிருப்பது தெரிகிறது. ஆகவே ஆந்திர ராஜ்யத்தில் இப்போது இருக்கும் தமிழ் பகுதிகளைப்பற்றிக் கவலையில்லை. பக்கத்தில் கர்னடகப்பகுதியில் இருக்கும் தமிழ் பகுதிகளைப்பற்றிக்கூட அதிக விவகாரம் இல்லை. அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய கர்னடகப் பிரதேசங்களைப் பற்றிக்கூட விவகாரம் இல்லை என்று தெரிகிறது. ஆனால் பக்கத்திலிருக்கக்கூடிய கேரள சகோதரர்களுக்கும் நமக்கும் உத்தேச சென்னை ராஜ்ய விஷயமாக சில விவகாரங்கள் இருக்கின்றன. திருவாங்கூரில் தமிழர்கள் இருக்கக்கூடிய பகுதிகளான 9 தாலூகாக்களைப்பற்றி விவகாரம் இருக்கிறது. நமது கண்ணின் மணி போன்று கருதப்படவேண்டிய தலைவர் முதல் மந்திரி அவர்கள் அங்கே தேர்தல் பிரசாரம் செய்த காலத்திலும்கூட திருவாங்கூரிலிருக்கும் தமிழ் மக்கள் வாழும் 9 தாலூகாக்களும் உத்தேச சென்னை ராஜ்யத்தில் சேரவேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். அங்கே நாஞ்சில் நாட்டில் கூட அங்குள்ள குஞ்சன் நாடார் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார் என்பது எல்லோருக்கும் தெரியும். இதுபோன்று தமிழ் நாட்டுடன் சேரவேண்டிய மற்ற பகுதிகளில்கூட தமிழர்கள் நின்று நல்ல வெற்றிபெற்றிருக்கிறார்கள். எவ்வளவோ கௌரவமான கேரள சகோதார்கள் இங்கே இருக்கிறார்கள். சென்னை ராஜ்யத்தில் நிர்வாகப் பொறுப்பு அதிகாரிகளிலும், காரியதரிசிகளிலும் மலையாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஆதரவு கொடுத்து நாம் பெருந்தன்மையாக இருக்கிறோம். இருந்தாலும் மற்றவர்கள் அந்த அளவுக்கு இல்லை. ஸ்ரீ பொட்டி ஸ்ரீராமுலு இறந்த காரணத்தால் ஆந்திர ராஜ்யம் சீக்கிரத்தில் பிரிந்துவிட்டது. இப்போது மலையாளிகளுக்கு அனுகூலமாக இருப்பதைப் பார்க்கும்போது மத்திய சர்க்காரில் மலையாள சர்க்காரின் பிடிமானம் இருக்கிறதென்று தோன்றுகிறது. ஏதோ நடந்துபோன காரியங்கள்! அணுகுண்டு சகாப்தம் வேகமாக முன்னேறி வருகிறது. அதற்காக இவர்கள் பூலோகத்திற்கெல்லாம் தலைவர்களாக வந்து விடமுடியாது.

[Sri M. S. Selvarajan] [23rd November 1955

அடுத்தபடியாக பிரிட்டிஷார் காலத்தில் நாட்டைப் பிரித்தார்கள் என்றால் சுதந்திர உணர்ச்சியை அமுக்கி வைப்பதற்காகப் பிரித்தார்கள். ஆனால் இப்போது சுதந்திர உணர்ச்சி மலர்ந்து ஜனநாயகம் மிளிர வேண்டுமென்பதற்காக அதற்கான அடிப்படையில் பிரிக்கப்படுகிறது. ஆகவே பிரிவினை செய்வதைப்பற்றி "டிஸ்ப்யூட்" செய்வதற்கோ குற்றம் சொல்வதற்கோ இல்லை.

இப்போது திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய முன் முதன் மந்திரி ஸ்ரீ பட்டம் தாணுப்பிள்ளையும் இன்றையப் பிரதமர் ஸ்ரீ கோவிந்த மேனனும் கூட அங்குலநிலமோ, அவுன்ஸ் தண்ணீரோ கொடுக்கமுடியாதென்று பிடிவாதம் செய்கிறார்கள். ஆனால் டில்லியில் இருக்கக்கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி ஸ்ரீ மாதவன் நாயர் சொல்லியிருக்கக்கூடியது பெருந்தன்மையாக இருக்கிறது. ஆகவே அவர்களுடைய ராஜ்யத்தைக் கடந்து வெளியே உள்ளவர்களுக்கு இந்த பெருந்தன்மை ஏற்படுகிறது. ஆதலால் வெளியில் உள்ளவர்களுக்குத் தான் நியாயம் தெரியும்.

4-48 p.m. **Sri D. KRISHNAMURTHY GOUNDER :** உயர் திருவாளர் உதவித் தலைவர் அவர்களே, ராஜ்ய சீரமைப்புக் குழுவின் தீர்மான அறிக்கையை நாம் இப்பொழுது கவனிக்க வேண்டியதாக இருந்தாலும் அதன் முடிவு என்னவாகும் என்பது நமக்கு முன்னதாகவே தெரிந்து விட்டது. ஏனென்றால் மத்திய அரசாங்கம், மற்றும் காங்கிரஸ் ஹை கமாண்ட் அவர்களும் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். அப்படி இருக்கும்போது நாம் வீணாக அதைப்பற்றி விவாதித்து கால தாமதம் செய்து கொண்டிருக்கிறோம். அப்படி விவாதிக்கும்போது அனுவசியமாக மக்களுடைய வரிப் பணத்தையும் செலவு செய்து கொண்டு விவாதித்து வருகிறோம். நாம் அப்படி செலவு செய்து விவாதித்தாலும் நாம் சொல்வதை அவர்கள் கேட்கப்போவதில்லை. அதனால் நான் அதிகமாகப் பேச வேண்டியதில்லை. எனக்குக் கொடுத்திருக்கும் ஐந்து நிமிஷ நேரத்தில் அதிகமாக ஒன்றும் கூற முடியாது. எங்கள் ஜில்லா ஹொகூர் பகுதியைப் பற்றியும், சித்தூர், குப்பம் முதலிய பகுதிகளைப் பற்றியும் இரண்டொரு வார்த்தைகள் மட்டும் சொல்லலாம் என்றிருக்கிறேன்.

வழக்கம்போல் அரசாங்கம் அங்குள்ள நிலைமைகளை பரிசீலனை செய்வதற்கு குழுக்களை நியமிப்பது போல் இப்பொழுதும் ஒரு குழுவை நியமித்து அந்தக் குழுவும் தன்னுடைய அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அதனால் அங்கங்கே குழப்பங்களையும் உண்டாக்கி விட்டார்கள். நமக்குள்ள ஒற்றுமையை அவர்கள் குலைத்து விட்டார்கள். ஹொகூர் பகுதி ஆந்திராவுக்குச் சேரவேண்டும் என்று இப்பொழுது வேகமாக முயற்சி செய்கிறார்கள். அதற்காக ஆந்திர சர்க்காரும் ஹொகூர் பகுதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக பணத்தையும் பெருவாரியான பிரசாரத்திற்கு செலவு செய்து கொண்டும் வருகிறார்கள் என்பது தெரியவருகிறது. அவர்கள் உண்மையைச் சொல்லுவதாகவே இல்லை. அவ்விதம் அப்படிச் சொல்வதில் கொஞ்சம்கூட நியாயம் இல்லை. கன்னட சாம்ராஜ்யத்தில் மைசூர் இருந்தது. சேலம் ஜில்லாவில் ஒரு பகுதியும் கோயமுத்தூரில் ஒரு பகுதியும் கன்னடாவுடன் சேர வேண்டும் என்று சொல்வது நியாயம் அல்ல. அங்குள்ளவர்கள் செய்யும் தொழில் எல்லாம் தமிழர்கள் செய்யும் தொழில்கள்தான். தமிழர்கள் கொள்கையை அவர்கள் அனுசரித்து வருகிறார்கள். தமிழ் பண்பு தான் அங்கே இருக்கிறது. அங்குள்ளவர்கள் அநேகமாக எந்த ராஜ்யத்திலும் சேருவதாக இல்லை. அப்படி இருந்த போதிலும் அவர்களுடைய மனதைக் கலைக்க அவர்கள் நிரந்தரமாக முயற்சி செய்து வருகிறார்கள். இது விஷயத்தில் நமது சர்க்கார் ரொம்ப பிடியாக இருந்து அந்தப் பகுதி ஆந்திராவுக்கோ அல்லது மற்ற ராஜ்யத்திற்கோ போகாமல் பாதுகாக்க வேண்டும். சித்தூரைப் போல் பல தமிழ் பகுதிகளை ஆந்திரர்கள் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். ராஜ்ய சீரமைப்பு குழுவினர் நியாயமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும், மற்றும் சிலர் அவர்களுடைய அறிக்கையைப்பற்றி பாராட்டினாலும் தமிழர்களைப் பொறுத்த வரையில் கமிஷன் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்றுதான் நான் கூற விரும்புகிறேன்.

23rd November 1955] [Sri Dr. Krishnamurthy Gounder]

மற்ற ராஜ்யங்களை அமைக்கும்போது அவர்கள் அந்தந்த ராஜ்யங்களை மொழிவாரியாகப் பிரித்து அந்த மொழியின் பெயரால் அந்த ராஜ்யங்களின் பெயரை அமைத்து விட்டார்கள். ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அவர்கள் சரியாக நடந்து கொண்டதாகச் சொல்ல முடியாது. பெயர் வைப்பதில் கூட அவர்கள் தமிழர்களை அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற கருத்தோடு இருந்து விட்டார்கள் என்று தோன்றுகிறது. மற்ற ராஜ்யங்களை அந்தந்த ராஜ்ய மொழியின் பெயரில் ராஜ்ய பெயரை அமைத்திருக்கும்போது என் நம் தமிழ் ராஜ்யத்திற்கு "தமிழ் ராஜ்யம்" என்று பெயரைக் கொடுக்காமல் "மதராஸ் ராஜ்யம்" என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதில் அவர்கள் நேர்மையில் தவறி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

மற்றும் திருவாங்கூரிலுள்ள இரண்டு தமிழ் பகுதிகளை நம் ராஜ்யத்துடன் சேர்க்கவிட்டு விட்டார்கள். அதிலும் அவர்கள் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை. இந்த ராஜ்ய புனரமைப்பினால் நாம் ஒன்றும் நன்மையை அடையப்போவதில்லை. நம்முடைய ஒற்றுமையைத்தான் அவர்கள் குலைத்து விட்டார்கள். நாம் மற்றவர்களுடன் சகோதரர்கள் போல் வாழ வேண்டும். அத்துடன் இல்லாமல் நம் தென்னாட்டிற்குரிய தமிழ் மொழியிலிருந்துதான் மற்ற மொழிகள் வந்தன. அது சரித்திர வாயிலாக இருக்கிறது. அதிலிருந்து தான் மற்ற மொழிகள் வந்திருக்கின்றன. அதனால் நாம் மீண்டும் ஒன்றுபட்டு வட நாட்டு ஆதிக்கம் நமக்கு வராமல் இருக்க வேண்டும். அதை ஒழிக்க வேண்டும். அதன் பிறகு தென் தேசம் தனி சுதந்திர தேசமாக இருக்க முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் சிற்றுரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri P. CHELLATHURAI : கனம் துணைத் தலைவர் அவர்களே, கன்னட ராஜ்யமும் கேரள ராஜ்யமும் பிரிந்த பிறகு எஞ்சிய இந்த ராஜ்யத்திற்கு சீரமைப்புக்குழுவினர் கொடுத்திருக்கும் "மதராஸ் மாகாணம்" என்ற பெயர் இல்லாமல் அதற்கு "தமிழகம்" என்று பெயரிடவேண்டும் என்பது என் கருத்து. ஏனென்றால் கல்கத்தா மாகாணத்திற்கு வங்காள மாகாணம் என்றும், லாகூர் மாகாணத்திற்கு பஞ்சாப் மாகாணம் என்றும் இது போன்று அந்தந்த மாகாண மொழிப் பெயரில் பெயரைக் கொடுத்திருக்கும்போது இங்கும் மொழியை அடிப்படையாகக் கொண்டு இதனை தமிழகம் என்று பெயரிட வேண்டும். அதனால் எந்த விதத்திலும் நிர்வாகத்தில் பங்கம் வந்து விடப் போவதில்லை. புயலோ அல்லது பூகம்பமோ வந்து விடப்போவதில்லை. கனம் நிதி மந்திரி அவர்கள் கடைசியில் பதில் சொல்லும்போது இதற்கு விளக்கம் சொல்ல வேண்டும். அவர் தனது அறிக்கையில் இதைப் பற்றி பின்னால் பார்த்துக் கொள்ளுவோம் என்று சொல்லியிருக்கிறார். அப்படிச்சொல்லுவதற்கு ஆதாரமான காரணம் என்ன என்பதையும் அவர்கள் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன்.

மற்றும் தேவிகுளம், பீர்மேடு இந்த இரண்டு பிரதேசத்தையும் பற்றி சிறிது தெரிந்தவன் நான். 1942-ல் புரட்சி நடத்திய காரணத்தால் என் மீது அரசாங்கம் வாரண்டு போட்டிருந்தது. அதற்கு தலை மறைவாக அங்கு சென்றிருந்தேன். அப்பொழுது எனக்கு தஞ்சம் கொடுத்த நாடுகள் அவைகள். நாஞ்சில் நாடு என்று சொல்லும் அந்தப் பிரதேசத்தைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். தேவிகுளம், பீர்மேடு முதலிய பிரதேசங்கள் எந்த அடிப்படையில் பார்த்தாலும் அது தமிழ் நாட்டுடன் சேருவதற்கு ஆதாரம் இருக்கிறது. கேரள நாட்டுடன் சேருவதற்கு எந்த விதமான அடிப்படையும் இல்லை. அந்தப் பிரதேசங்களில் கேரள ராஜ்யத்தின் பக்கம் மலைகள் செங்குத்தாக இருக்கிறது. தமிழ் நாட்டின் பக்கம் மலை சரிவாக இருக்கிறது. அங்குள்ள மக்களின் கலை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் எல்லாம் தமிழ் சார்பாகத்தான் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் எல்லோரும் தமிழ் பரம்பரையிலிருந்து வந்தவர்கள். அப்படி வந்தவர்கள்தான் அங்கு அதிகமாக இருக்கின்றார்கள். அத்துடன் இப்பொழுது சீரமைப்புக் கமிஷன் கொடுத்திருக்கும் அறிக்கையின் 83-ஆவது பக்கத்தில் ஒன்றை குறித்திருக்கிறார்கள். கடந்த 1954-ம் ஆண்டு நடந்த பொது தேர்தலில் இந்த இரண்டு தாலுக்காக்களும் தமிழ் நாட்டுடன் சேர

[Sri P. Chellathurai] [23rd November 1955

வேண்டும் என்ற பிரச்னையில் மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறது. இந்தப் பிரச்னையை அடிப்படையாக வைத்து அங்குள்ளவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று அந்தக் குழுவினர் எழுதியிருக்கிறார்கள். அப்படி யிருப்பினும் கூட இன்னொரு வாக்கியத்தையும் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். திருவாங்கூர் காங்கிரஸ் கமிட்டியினர் தேவிகுளம், பீர்மேடு பகுதியில் இருக்கிற பள்ளிவாசல், பெருவந்தநாடு பகுதி இந்த இரண்டும் வேண்டுமானாலும் பொருள்தார நிலையை அனுசரித்து கேரள நாட்டிற்குக் கொடுத்து விடலாம் என்று சொல்லுவதாகவும் குறித்திருக்கின்றார்கள். தேவிகுளம், பீர்மேடு இந்த இரண்டு பிரதேசங்களும் கேரளாவிற்கு சேர வேண்டும் என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். பரம்பரையாக அங்கு தமிழர்கள் வாழ்ந்து வந்திருப்பதை அவர்கள் கவனிக்கவே இல்லை. பொது ஜனங்கள் தேர்தலில் தீர்ப்புக் கொடுத்திருக்கும்போது—அதை அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதை விட்டு விட்டு, தகாத முறையில் காரணம் காட்டி இருக்கிறதை அதன் மூலம் பெரிய சிக்கல்களையும் உண்டாக்கியிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் தோழர்கள் சொன்னது போல் தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் சம்பந்தமாக முடிவு செய்ய பார்லிமெண்டுக்குத்தான் அதிகாரம் உண்டு. எந்தப் பகுதியுடன் அவர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று ஒரு முடிவு கட்டிய பிறகு பல சிக்கல்கள் அங்கு ஏற்படலாம். அதற்கு அங்கு வேண்டிய கண்காணிப்பு செய்ய அவசியம் ஏற்படலாம் என்று சொல்லுகிறார்கள். அதைச் சமாளிக்கத்தான் வேண்டும். சமீபத்தில் நடந்த குறுகிய கால ஆட்சியில் அதாவது பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி அரசாட்சியில் பட்டம் தாணுப்பிள்ளை அவர்களைத் தலைவராக கொண்ட கட்சி பல தமிழர்களை சுட்டுத்தள்ளியிருக்கிறார்கள். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகவும் பலமாக இந்த தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் இரண்டும் கேரள ராஜ்யத்துடன் சேர வேண்டும் என்பதை மறுப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை.

Sri P. RAMAMURTHI : அவர் சொல்லுவது போல் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி மந்திரி சபை மட்டும் அல்ல காங்கிரஸ் மந்திரி சபையும் அப்படித்தான் சொல்லுகிறது. அதாவது பனம்பள்ளி கோவிந்த மேனன் தலைமையில் நடக்கும் காங்கிரஸ் மந்திரி சபை கூட இந்த இரண்டு பகுதிகளும் வேண்டும் என்று தீவிரமாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

Sri P. CHELLATHURAI : தலைவர் அவர்களே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காலம் குறைவாக இருக்கிறது. (டிபுடி ஸ்பீகர் : உங்களுடைய நேரம் முடிந்து விட்டது.) ஆகவே எந்தக் காரணத்தினாலும் தேவிகுளம், பீர்மேடு தாலூகாக்கள் தமிழ் நாட்டுடன் சேர்க்கப்படவேண்டும். இந்த ராஜ்யத்திற்கு தமிழகம் என்ற பெயரை வைக்க வேண்டும். இப்பொழுது மதராஸ் மாகாணம் என்று இருக்கிறதே அதிலுள்ள மதராஸ் என்ற வார்த்தை எந்த வார்த்தையிலிருந்து வந்தது என்பது தெரியவில்லை. அந்த வார்த்தைகள் அப்படியே இருத்தலின் அவசியம் என்ன? இது எனக்கு புலப்படவில்லை. விருப்பப்படி வோட்டுப் போடும் உரிமையை எனக்குக் கொடுக்கப்பட்டால் இது பற்றி எந்த கட்சியிலிருந்து திருத்தம் கொண்டு வந்தாலும் அதற்குச் சாதகமாகத்தான் நான் வோட்டுப்போடுவேன். தமிழ் அகம் என்ற பெயரை வைப்பதற்குத்தான் வோட்டுப் போடுவேன்.

கடைசியில் ஒரு வார்த்தை. கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களும் இந்த விதமான உரிமையை அவர்களுடைய தோழர்களுக்குக் கொடுத்தால் நல்லது. தேவிகுளம், பீர்மேடு சம்பந்தமாக அங்கத்தினர்கள் தங்கள் இஷ்டம் போல் வோட்டுப் போட வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட சுதந்தரம் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன் சார் பெரியவரே.

23rd November 1955]

Sri T. GANAPATHI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நாஞ்சில் நாட்டுப் பக்கத்தில் உள்ள தொகுதியிலிருந்து நான் வருவதால், அங்குள்ள சில உண்மைகளை எடுத்துரைக்கலாம் என்று நினைக்கிறேன். எனது 2 p.m. மொழி இருக்கிறது. அதற்கு மூன்று மைல்கள் அந்தப் பக்கத்தில்—கம்யூனிஸ்டு தோழர்களுக்கு இது தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன்—தோவாளை கால்வாய் ஓடுகிறது. இந்த கால்வாய் வழியாக கடலில் போய் வீணாக வடியும் தண்ணீரை பக்கத்தில் உள்ள ஆரல்வாய் மொழிக்கு எனக்குத் தெரிந்த மட்டில் 40 வருடங்களுக்கு மேலாக உபயோகப்படுத்த, அங்கு தமிழர்கள் இருக்கிறார்கள் என்கிற ஒரே காரணத்திற்காக, மலையாள சர்க்கார் யாதொரு எற்பாடும் செய்ய முன் வரவில்லை. இது ஒரு விஷயம்.

இரண்டாவதாக, ஸர் சி. பி. ராமசாமி அய்யர் திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவானாக இருக்கும்போது பெருவந்த நாடு அணை என்று ஒன்றை பெரிய அளவில் கட்டவேண்டும் என்று அஸ்திவாரம் போட்டார்கள். அவர் மாறிய பிறகு, அதை குறுகிய விஸ்தீரணத்தில் மலையாள சர்க்கார் நிறைவேற்றியதால், நூற்றுக்கணக்கான எக்கர்களுக்கு அதிகப்படியாக தண்ணீர் பாயமுடியாமல் இருக்கிறது. இதற்குப் பிறகு பட்டம் தாணுப் பிள்ளை—சர்க்கார் தமிழர்களை சுட்டுக் கொன்றார்கள். இப்போது இந்த ராஜ்ய சீரமைப்பு கமிஷனின் அறிக்கை வெளி வந்தவுடன் பல விடங்களில், விரல்விட்டு எண்ணக்கூடிய மலையாளிகள் கூச்சல் போடுகிறார்கள். இப்படியிருக்கும்போது நாம் தேவிகுளம், பீர்மேடு பிரதேசங்களை அவர்கள் கையில் விட்டால், அங்குள்ள தமிழர்களின் கதி என்ன வாகும் ? இலங்கையிலிருந்து லட்சக்கணக்கான தமிழர்கள் விரட்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நமது சர்க்காரோ அல்லது மத்திய சர்க்காரோ எதும் உதவி செய்வதற்கு தயாராயில்லை. எற்கனவேயே திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் வேலையில்லா திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது, தேவிகுளம், பீர்மேட்டில் உள்ள தமிழர்களை கண்டிப்பாக விரட்டித்தான் தீருவார்கள்.

பூர்வீக சரித்திரத்தைப் பார்த்தாலும், பூர்வீகமாக அங்கு குடியிருந்தவர்கள் மண்ணடியார்கள். அவர்கள் தமிழ் பேசும் சாதியார் என்பதற்கு அந்தப் பிரதேச தமிழர்கள் கையில் ஆதாரங்கள் இருக்கின்றன. இரண்டாவதாக தமிழர்கள் குடியேறினார்கள். பின்னால் பிழைக்க கூலிகளாக வந்தவர்களே மலையாளிகள். பட்டம்தாணுப் பிள்ளை பதவிக்கு வந்த பிறகு 1946-க்குப் பின்னால் எகப்பட்ட மலையாளிகளை சட்ட பூர்வமாக உள்ளே புகுத்தியிருக்கிறார்கள். இந்த வகையில் தவருன முறையில் மலையாளிகள் உள்ளே புகுத்தப்பட்டிருக்கிறார்கள். 1920-லிருந்து மொழியடிப்படையில் மகாணங்கள் அமையவேண்டுமென்று தேசிய காங்கிரஸ் விரும்பியதால், மொழியடிப்படையில் கண்டிப்பாக தேவிகுளம், பீர்மேடு இந்தப் பிரதேசங்களை கேட்டு விடுவார்களென்று, ஸ்ரீ செல்லத்துரை குறிப்பிட்டது போல், பள்ளிவாசல் பகுதியையும், பெருவந்தனாடு பகுதியையும் பிரித்து இரண்டும் இரண்டு தாலுக்காக்களில் இருந்தன. அப்படியிருந்தும் பிரித்து இரண்டு சட்டசபை தொகுதிகளை உண்டாக்கினார்கள். எவ்வளவு கெட்டித்காரத்தனமாக செய்திருக்கிறார்கள் பாருங்கள். தமிழ் பேசும் பகுதிகள் நம் கையை விட்டுப் போய்விடும் என்று விஷயத்தை முன் எச்சரிக்கையாக புரிந்துகொண்டு, பெருவந்தநாடு பகுதியும், பள்ளிவாசல் பகுதியும் நம்மிடமிருக்கட்டும். எல்லாவற்றையும் சேர்த்து கொண்டுபோய் விடுவார்கள் என்று முன் ஜாக்கிரதையாக அவற்றை பிரித்து இரண்டையும் இரண்டு சட்டசபை தொகுதிகளாக்கினார்கள். அந்த முறையிலும்கூட, இந்த இரண்டு தொகுதியிலிருந்தும் தமிழர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தங்களுடைய உழைப்பால் இந்த பிரதேசங்களை வளப்படுத்திய தமிழர்கள், பெருந்தன்மையாக மலையாளிகள் இருக்கிற இந்த இரண்டு பகுதிகளும் அவர்களிடமே இருக்கட்டும், மற்ற தமிழ்பேசும் பகுதிகள் சட்டசபை தொகுதிகள் இருந்த மாதிரி பிரித்து விட்டால் கிராமம் கிராமமாக பிரிக்கவேண்டி வராது என்ற முறையை சொல்லியிருக்கும்போது, இந்த எஸ்.ஆர். Commission ஆனது தவருன முறையில் interpretation கொடுத்து, பிரிவினை செய்திருக்கிறார்கள்.

[Sri T. Ganapathi] [23rd November 1955

இன்னொரு விஷயம். பொருளாதார சுயதேவையை முன்னிட்டு தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் கேரள ராஜ்யத்தில் இருக்கவேண்டுமென்று குமிஷன் வாதித்திருக்கிறது. எல்லா ராஜ்யங்களிலும் பொருளாதாரத்தில் இன்னும் முன்னேற்றமடையவில்லை. எல்லாம் மத்திய சர்க்காரை எதிர்பார்த்துதான் இருக்கின்றன. ஆகவே, பொருளாதார அடிப்படையில் அவர்கள் பீர்மேடு, தேவிகுளம் விஷயத்தை அணுகியிருப்பது கண்டிக்கவேண்டிய விஷயம். பொருளாதார நெருக்கடியை உத்தேசித்து எந்த ராஜ்யத்தையும் புனரமைப்பதுபற்றி அவர்கள் வருத்தப்படவேண்டாம். மத்திய சர்க்கார் பொருளாதார விஷயங்களை கவனித்துக்கொள்ளுவார்கள்.

நெய்யாற்றங்கரை பகுதியை எடுத்துக்கொண்டால், நாகர்கோவில் போன்ற பிரதேசங்களில் கோர்ட்டுகள், இதர ஆபீஸ்கள் இவற்றிற்கு போனால், எல்லாம் மலையாளத்தில் எழுதவேண்டுமென்று instructions. அந்த மாதிரி அவர்கள் எழுத கஷ்டப்படுகிறார்கள். நெய்யாற்றங்கரை பிரதேசத்தில் எராளமான மலையாளிகளை புகுத்தி விட்டார்கள் என்ற போதிலும், குஞ்சன் நாடார், எம்.எல்.ஏ.-ஆக நெய்யாற்றங்கரை பகுதியிலிருந்துதான் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியானால் நெய்யாற்றங்கரை பகுதியில் எத்தனை பேர்கள் தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது தெரிந்து, அந்த பகுதியில் உள்ள தமிழ் பிரதேசங்களை தமிழ் நாட்டுடன் சேர்க்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, நெய்யாற்றில் இப்போது ஒரு அணை கட்டி வருகிறார்கள். அதன் இடது பக்கத்தில், ஒரு கரையிலிருந்து தமிழ்நாட்டுக்கு ஒரு புது கால்வாய் கட்டி வருகிறார்கள். ராஜ்யங்கள் சீரமைந்தவுடன், இதை அவர்கள் நிறுத்தி விடக்கூடாது என்பதில் நிதி அமைச்சர் அவர்களும், நமது முதன் மந்திரி அவர்களும் முக்கிய ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த கால்வாய் பூர்த்தி செய்வதில் அக்கரைகொண்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றவேண்டுமென்பதையும் மனதில் கொண்டு, மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again to-morrow morning at 9 a.m.

The House then adjourned.

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, 24th November 1955.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at nine of the clock, Mr. Speaker (THE HON. SRI N. GOPALA MENON) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Reorganization of States

* 2798 Q.—SRI K. C. GOPALAN UNNI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether this Government have suggested to the States Reorganization Commission that Gudalur taluk and Attapady valley should be included in Tamil Nad; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) This Government have written to the States Reorganization Commission urging that the Gudalur taluk of the Nilgiris district should be retained in the Madras State in any scheme of reorganization of States in South India. They have not, however, made any suggestion regarding Attapady valley.

(*b*) The important reasons for making the above recommendation are—

(i) the Nilgiris district is of vital importance to this State from the economic and financial points of view as it contains the main sources of hydro-electric power available for this State, and it is one of the few areas where there are good forests and plantations in this State. The Pykara and Moyar Hydro-electric Projects are already functioning, while the Kunda Project will be taken up for execution shortly. The Moyar river is important not only from the point of view of electric power in this State but also as a very important tributary of the Bhavani river, and it runs along the eastern boundary of Gudalur taluk receiving the drainage of a good portion of that taluk. From the point of view of irrigation and supply of electric power, it is necessary that this State should retain complete control over the whole length of the Moyar river. For stabilizing and extending irrigation from the Bhavani river, this Government have recently completed the Bhavanisagar Project at considerable expense;

(ii) if, as may happen sooner or later, the Malabar and South Kanara districts are taken out of this State, Gudalur taluk will be one of the very few forest areas left for supply of teak;

(iii) the Mudumalai Reserved Forest in Gudalur taluk is not only an important catchment area for the Moyar river, but is also the only Game Sanctuary in this State; and

[24th November 1955

(iv) Nilgiris is a convenient administrative unit in this State, with distinctive features, and, for the reasons mentioned above, its integrity should not be disturbed.

Sir, I am sure, I will be dealing with this aspect again when I reply to the debate. I do not think we need spend time on supplementaries.

SRI K. C. GOPALAN UNNI : Is it the view of this Government that areas where sources of power and irrigation facilities are situated in the State should be allowed to remain in the new Tamil State even though the people in those areas are Malayalees?

THE HON. SRI C. SUBRAMANIAM : With regard to population figures I will be dealing with them in my reply to the debate. That is why I do not want to include them in the reply which was given up till now. I am sure I will be able to satisfy hon. Members that even with regard to the population, the Gudalur taluk has to remain with the Madras State rather than with Malabar.

SRI K. KUNHI MOHAMED SHAFEE : Sir, as a Government functioning for the whole of Madras State as it is composed at present, had the Government in view the welfare of the district of Malabar when they made such recommendations to the States Reorganization Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : We are fully aware of the interests of Malabar and I may tell the hon. Member that we are trying our best to the best of our ability to look after the interests of Malabar also. But simply because we happen to be functioning along with Malabar and South Kanara districts we cannot afford to abdicate our responsibility to the other portions of the State also.

SRI V. R. KRISHNA AYYAR : May I know whether, before the Government was moved by strategic as against linguistic considerations in the matter of Gudalur, the Government consulted any public organizations or popular representatives other than inspired ones which have recently come up?

THE HON. SRI C. SUBRAMANIAM : I know the hon. Member is a leading criminal lawyer and is an expert in putting leading questions. It is not a question of strategic considerations as against linguistic considerations. As I already said, even on linguistic considerations we have got a case for retaining Gudalur in Madras State.

SRI M. NARAYANA KURUP : Apart from the memorandum that was submitted by this Government to the States Reorganization Commission, may I know whether subsequently also this Government submitted any memorandum to the Central Government on this issue?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. Even subsequent to the publication of the report we have made further

representations to the Government of India and the authorities concerned. We have dealt with these various aspects arising out of the S.R.C's Report and incidentally we have mentioned about Gudalur also.

SRI D. KRISHNAMURTHI GOUNDER : இந்த அத்திப்பட்டு பள்ளத்தாக்கு எந்த ஜில்லாவில் எந்த தாலூகாவில் இருக்கிறதென்று தெரிவிப்பாகளா? இதைத் தவிர வேறு எதாவது அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அத்திப்பட்டு 'வாலி' மலபார் ஜில்லாவில் இருக்கிறது.

SRI P. K. GOPALAKRISHNAN : May I know what is the source of linguistic information that the Government have got? As far as we know, we have got only the Census Handbook. Regarding Nilgiris district this gives information with regard to language groups for the whole district only and not taluk-war whereas the information taluk-war has been given with regard to other districts. With regard to the Nilgiris district what is the source of information?

THE HON. SRI C. SUBRAMANIAM : In 1951 Census Book only the language picture with reference to each district is given. But in the statistics taken with reference to each individual the language also has been entered in the census slips. That is why with reference to all these disputed areas or areas in which the disputes are likely to arise research has been done with regard to each individual slip. Therefore we have figures available with regard to each village and these figures have been compiled by the Government of India. It is only with reference to these figures, these linguistic statistics are being furnished.

SRI M. NARAYANAN NAMBIAR : May I know whether any mention has been made in the report submitted to the Government of India with regard to Kasaragod taluk also?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. We have made representations with reference to Kasaragod taluk.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் முன்னொரு சமயம் கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்து கூடலூர் தாலூக்காவில் ஒரு பகுதியில்கூட தமிழர்கள் பெரும்பாலோராக இல்லையென்று சொல்லியிருக்கிறார். இந்தத் தாலூக்காவை சென்னை ராஜ்யத்துடன் இணைக்க வேண்டுமென்பதற்காகக் கடைப்பிடிக்கும் கொள்கையையே மற்ற எல்லைத் தகராறு உள்ள பிரதேசங்களுக்கும் கடைப்பிடிக்க மற்ற ராஜ்யங்கள் அனுமதிக்கப்படுமா என்று கேட்கிறேன். 2-1 a.m

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, as far as I am concerned and the Government are concerned, we want a uniform principle to be adopted in all cases and that is our anxiety. But, unfortunately, one principle is adopted in one case which upsets at one point and another principle is adopted in another case which upsets at another point. If as a result of the application of any uniform principle, any territory or any portion of territory has to be handed over to any other State, certainly this Government won't stand in the way. But we want the adoption of a uniform principle.

[24th November 1955

Labour disputes

* 2799 Q.—SRI K. MOIDU : Will the Hon. the Minister for Agriculture be pleased to state with reference to the answer to a supplementary question put on 5th May 1954 in connection with question No. 503, what steps the Government have taken to find employment for the workers of Pappinisseri Spinning and Weaving Mills who have been thrown out of employment for the last several months?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The assets of the Aaron Spinning and Weaving Mills were brought to auction by the Debenture Trustees. The purchasers at the auction have started the working of the mill as a new company under the name of the Western India Cottons, Limited, Pappinisseri, from 6th June 1955. The Government have been able to persuade the new company to re-employ as many ex-workers of the Aaron Mills as possible in the interest of smooth relationship, though the new company are not legally under any obligation to do so. Out of 414 workers entertained in the company so far, 359 are ex-workers of Aaron Spinning and Weaving Mills. Out of about 12,000 spindles taken over 5,000 are now working and the remainder can be worked only when the machinery spares at present on order are received. Out of 407 looms, 150 are now working. The rest of the looms are being re-conditioned and, as this work progresses, further looms will be worked as early as possible.

SRI T. C. NARAYANAN NAMBIAR : Sir, in view of the fact that the figures given by the Hon. Minister are not exactly correct—this fact has been discussed previously with the new management of the Western India Cottons, Limited—and as there is unrest among the mill workers since the management did not adopt any principle with regard to the re-employment of the old workers of the Aaron Mills Workers' Union and the Government also wanted to provide the old workers as far as possible, will the Government see that a responsible officer from the Government side is sent there to discuss the matter and settle the question and see that the ex-workers of the Aaron Mills are employed with due consideration to the past service of the workers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the figures I have given may not certainly be up to date and correct because the management might have, since my collecting the figures, employed some more ex-workers of the Aaron Mills, but, as I have said in my answer, the Government have examined the position. It is considered to be a new mill and Government cannot legally compel the management to take particular workers or the old workers. But still the management have given an assurance and the Government are satisfied that the present management are taking mostly the ex-workers of the Aaron Mills.

SRI K. P. GOPALAN : Sir, are the Government aware that there was a judgment by the High Court in respect of a case in Salem in which it was held that even if a factory is closed

24th November 1955]

and when a new management comes in, the service conditions of the old workers must be taken into account and that the old workers must be taken according to their service? Are the Government also aware of the fact that the Industrial Disputes (Amendment) Act passed by the Central Government emphatically says that even if a factory is closed either temporarily or permanently, the service conditions of the old workers must be taken into account? May I know from the Hon. Minister whether it is not an illegal thing that the management have done and if so, will the Government issue directions to the management to take in the old workers? May I also know whether it is not a fact that the new management has taken up the stand that whenever the workers want to come to the factory (even the old workers) must take a written permit from the Union which they have sponsored recently? Will the Government take into consideration all these things and see that all the old workers are taken back and issue directions to the management to follow that principle very strictly?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member referred to this judgment on a previous occasion and the Government have thoroughly examined the legal position with reference to that judgment. They have also examined the position with reference to the Industrial Disputes (Amendment) Act which was mentioned by the hon. Member. The Government have been definitely advised that these considerations would not apply in this case and that Government cannot compel the management to take back particular workers. Perhaps the workers who have been taken back—most of them are the ex-workers of the Aaron Mills—do not affiliate themselves with the Union in which the hon. Member is interested and probably that causes a lot of grievance.

SRI T. C. NARAYANAN NAMBIAR : Sir, on a point of personal explanation.

MR. SPEAKER : I would request the hon. Member to put short supplementary questions.

SRI T. C. NARAYANAN NAMBIAR : Sir, I am bound to inform the Hon. Minister that as the President of the Union I can assure him we are more interested in the amelioration of the conditions of the workers and in maintaining the unity of the working classes and we stand by the principle of one union for one industry. It is not as if we want to disrupt the unity of the working classes. May I request the Hon. Minister to see that the management does not exploit the poverty of the workers and the disunity among them which was caused by the management itself and that the concessions already granted to the workers by the State Regulations and Acts are not taken away?

SRI K. VINAYAKAM : Sir, on a point of order. I believe that my hon. Friend rose up to offer a personal explanation and the Chair has allowed him to explain. But he has utilized the opportunity and has put it in the form of a question. Is it in order for the Hon. Minister to get up and answer that question?

[24th November 1955

MR. SPEAKER : It is perfectly in order if the Hon. Minister gets up to answer that question. But it may not be in order to put a long supplementary question, advancing arguments.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I can only say this much in answer to the supplementary question, namely, that Government will see that no exploitation of the workers by the management is resorted to, to the extent possible.

SRI V. R. KRISHNA AYYAR : Sir, may I know whether the Government have issued any clear, unambiguous and unmistakable instructions to the management concerned that to whichever Union the worker may belong, seniority in past service should be taken into account when making fresh appointments in the new mills?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As I have already explained, the Government cannot issue any mandatory instructions, but in the presence of the hon. Member who is the President of the previous Union and in the presence of one of the representatives of the management, we had a thorough discussion and an understanding was arrived at that the management will take mostly the ex-workers of the Union, perhaps with the exception of a few individuals.

SRI K. P. GOPALAN : Sir, are the Government aware that when new workers are taken, workers with more service are taken as temporary workers and apprentices and are the Government also aware that the workers are not paid according to the Venkataramanayya Award and in accordance with the scales of pay paid in other mills not only in Malabar but also in Tamil Nad? Will the Government be pleased to set right these matters immediately?

of the present discussion is what portion should be taken away from Travancore-Cochin State and from Malabar before it is separated from Madras State and integrated with Travancore-Cochin State. It may not be possible for us from Malabar to make our voice heard in proper quarters because we are so poorly represented in this House and in Parliament. This feeble position of Malabar is taken advantage of by our Tamil and Kannadiga friends and they claim portions which naturally and justly belong to Malabar. According to the recommendations of the States Reorganization Commission, the whole taluk of Kasaragod should go with Malabar and be integrated with the proposed Kerala State. But the Kannadigas are claiming half of it. The proposed Karnataka
1-20 p.m. State will be one of the biggest States in the country and Kerala State will be the smallest and poorest but the most densely populated State in the Indian Union. The Kannadigas admit that that portion of Kasaragod taluk lying south of Chandragiri river can be integrated with Malabar as the language of the majority is Malayalam. They also admit the language of the majority of the people of that portion of this taluk lying north of the Chandragiri river is Malayalam. But they contend that as the medium of instruction in schools in this area is Kannada and that in the matter of land tenures and in some other respects the people are more akin to South Kanara than to Malabar, it should go to Karnataka State. The total population of this portion of Kasaragod taluk lying north of Chandragiri river is 207,518 as stated by the Leader of the House. Out of this 111,000 are Malayalees and only about 18,000 are Kannadigas. But the language taught in schools is Kannada. Is this one fact alone sufficient to separate this area from South Kanara and integrate it with Malabar? It cannot be denied that a great injustice was being done to the majority people of this part by imposing another language for their mother-tongue. For the sake of 18,000 people the language of 189,000 people has been sacrificed. It is neither fair nor just that this huge Malayalee population of this area should be denied the right of getting their education through their own mother-tongue. It is said that ninety per cent of the elementary schools in this portion of Kasaragod taluk is Kannada schools. I ask: is it fair or just that Malayalam-speaking majority of this area should be compelled for ever to educate their children in a language other than their own mother-tongue, when everybody else is given the facility to educate his children in his mother-tongue? On the other hand, for this one reason alone this part of Kasaragod taluk also should go with Malabar.

It is also said that the land tenure system in the northern portion is different from that in the southern portion. If this argument is accepted as a reason for not integrating this part with Malabar, then for the same reason Malabar district should not be integrated with Travancore-Cochin State. The land tenure system and revenue system in that State are different from those in Malabar. But Malabar is going to be integrated with Travancore-Cochin State. We are not fair to the States Reorganization Commission when we say that they unreasonably recommended the inclusion of the

24th November 1955] [Sri K. Uppi]

entire Kasaragod taluk in Kerala State. They must have had sufficient material for their conclusions. They had gone to the spot and made enquiries. The Members of States Reorganization Commission have no partciular interest in Karnataka or Kerala. Therefore, I submit the entire taluk must be integrated with Malabar and go into Kerala State.

Another point that I want to bring to the notice of this House is about the attempt to mutilate Malabar. All our brethren, with whom we have been in close association during the last two hundred years and who should treat us with sympathy and brotherly feeling, are trying to grab as much portion of it as possible before it is separated. For instance, Gudalur taluk was part of Malabar. Because of its distance from Kozhikode and transport and conveyance difficulties in those days, for administrative convenience, the Britisher attached it to the Nilgiris district in 1877. But on more than one occasion after that, the Madras Government attempted to give it back to Malabar. But the heads of the Malabar district stood in the way with the plea that they were already having very heavy work in administering the district of Malabar without Gudalur. As regards the population statistics I could not get the census figures. But I have analysed the voters' list published by this Government. There are 45,598 voters in Gudalur taluk out of which 25,717 are Malayalees and 12,085 are Chettis who also are more or less Malayalees, in their habits, customs and ways of life. All the members who have been elected from that area to the local boards till recently are Malayalees. The people there have got marital relations with the people of Malabar. Gudalur is on the western slope of the Western Ghats and is an integral part of the Wynaad taluk of Malabar district socially, economically linguistically and in every other respect. It is not at all fair or just to detach it from Malabar. Malabar is a part and parcel of this State at present. The Madras Government are the administrative head of Malabar and they should take care of the interests of that district as well until it is integrated with Kerala. I say the Government have a duty to perform by Malabar. They must see that Malabar gets its due share when separated. We should not be sent away without sufficient resources to maintain ourselves like the widow of a karnavan of a tarwad when the karnavan dies. Malabar must be given the assets that are due to it. Though the Hon. Leader of the House was fair in his speech in moving the motion, yet when he dealt with the question of Tamil-speaking areas, he adopted an attitude of grabbing. He asked for inclusion in Tamilnad of 14 villages of Chittur taluk in which it is said there is a Tamil-speaking majority and also he claimed a portion of Palghat taluk. This also is not fair. The Government should be not only just but also generous. After all, only the one district of Malabar is going to be affiliated to the smallest State and that district must be given sufficient resources to maintain itself.

With these words I commend my amendment to the House.

[24th November 1955

11-30 a.m.

SRI A. RATNAM : Mr. Deputy Speaker, Sir, I would like to know whether I will be given a chance to speak. I asked the Hon. Speaker and he allotted me 15 minutes yesterday.

DEPUTY SPEAKER : The understanding is that only the Party Leaders will be given a chance to speak to-day. So, I call the hon. the Leader of the Opposition to speak now.

SRI P. RAMAMURTHI : உதவி சபாநாயகர் அவர்களே, நான்கு நாட்களாக ராஜ்ய புனரமைப்பு கமிஷனுடைய சிபாரிசுகள் சம்பந்தமாக விவாதங்கள் நடந்து அவை முடிவடையும்படியான தருவாயில் நாம் இன்றைக்கு இருக்கிறோம். இந்த சபையில் நடந்த விவாதங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக எடுத்து கூர்ந்து கவனித்தால் வருத்தப்படவேண்டிய விஷயம் தான் ரொம்ப அதிகமாக தொனிக்கிறது. ஆனால் உண்மை என்ன ? எங்கள் கம்யூனிஸ்டு கட்சி சம்பந்தப்பட்டவரையில் மட்டுமில்லை, இந்த நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் சம்பந்தப்பட்டமட்டில் இன்று நாம் சந்தோஷிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் இருக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எனென்றால், இந்த நாட்டில் நீண்டகாலமாக, சுமார் 1905-ம் வருஷம் முதற்கொண்டே மொழியை அடிப்படையாகக்கொண்டு மாகாணங்கள் அமைக்கப்படவேண்டுமென்று மக்கள் இளர்ச்சி செய்திருக்கிறார்கள். சுமார் 50 வருஷங்களாக இந்த நாட்டில் இருக்கும்படியான சகல மக்களும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய காலத்தில் இருந்த மாதிரி மாகாணங்கள் இல்லாமல் அவைகள் மொழியை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்படவேண்டுமென்று செய்த இளர்ச்சிகள், போராட்டங்கள் இரண்டும் சேர்ந்து இன்றைக்கு மிகப் பெரிய அளவுக்கு ஒரு வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு மகத்தான சம்பவம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிட்டு ஒரு சோகக் குரலே மட்டும் எழுப்பிக் கொண்டிருந்தால், நாம் உண்மையிலேயே பெருமைப்படவேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை இழந்துவிடுகிறோம் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த ராஜ்ய புனரமைப்பு கமிஷன் செய்திருக்கக்கூடிய சிபாரிசுகள் விஷயமாக—நிச்சயமாக அதன் விஷயமாக—சில இடங்களில் தகராறு ஏற்பட்டிருப்பது உண்மை. ஆகவே நாம் இன்றைக்கு இருக்கக் கூடிய விஷயங்களை கொஞ்சம் நன்றாக ஆலோசனை செய்துபார்க்கவேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கிறோம். இன்றைக்கு இந்த நாட்டில் ஒற்றுமை மிகவும் அவசியம் என்று ராஜ்ய புனரமைப்பு கமிஷன் வற்புறுத்தியிருக்கிறது. இந்த நாட்டில் ஒற்றுமை மிகவும் முக்கியமானது என்று காங்கிரஸ் தலைவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். கனம் ஸ்ரீ சி. சுப்ரமணியம் நான்கு நாட்களுக்கு முன்பு இந்த சபையில் பேசக்கூடிய காலத்தில் முதல் பீடிகையாக அதைத்தான் போட்டுக்கொண்டார். ஆகவே விவாதத்தில் இருக்கக் கூடிய விஷயம் இந்த நாட்டில் ஒற்றுமையை எப்படி ஏற்படுத்துவது என்பதைப்பற்றியது. இந்த நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு வழி என்ன என்பது இன்றைக்கு இந்த நாட்டு மக்களின் முன்பு இருக்கும்படியான மிகவும் முக்கியமான விஷயம்.

கம்யூனிஸ்டுகள் சம்பந்தப்பட்டமட்டில் இந்தப் பிரச்னையை சரித்திரபூர்வமாக ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தோன்றியிருக்கின்ற பிரச்னையாக பார்க்கிறோம். இந்த நாடு தொன்றுதொட்டு ஒற்றுமைப்பட்டிருந்த நாடாக இருந்தது இடையாது. தமிழ்நாடு கூட சேர, சோழ, பாண்டியர்கள் ஆண்டுவந்த காலத்தில் ஒற்றுமையாக இருந்தது இடையாது. இதற்குப் பிறகு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஏற்பட்ட காலத்திலும் இந்த நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டது இடையாது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் வெளியேறிய பிறகுதான் இந்த நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டது. என் அப்போது ஒற்றுமை ஏற்பட்டது ? ஒற்றுமை என்று சொன்னால் மானசிகமான விஷயம் அல்ல. ஜனங்கள் ஒன்றுசேருகிறார்கள் என்றால் அவர்கள் ஒரு மானசிகமான லக்ஷியத்திற்காக ஒன்றுசேருவது இடையாது. அவர்களுடைய தினசரி வாழ்க்கையில் அவர்களுடைய லக்ஷியங்களை நிறைவேற்றுவதற்கு ஜனங்கள்

24th November 1955] [Sri P. Ramamurthi]

ஒன்றுசேர்ந்து வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டால், அவர்கள் நிச்சயமாக ஒன்றுசேருவார்கள். அந்த அடிப்படையில் சென்ற காலத்தில் இருந்திருக்கக்கூடிய சமுதாய அமைப்பில் ஒன்றுசேரவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் உலகத்தில் இருக்கக்கூடிய சமுதாயத்தின் வளர்ச்சியைப்போல இந்த நாட்டில் இருக்கக்கூடிய சமுதாயம் மேலும் மேலும் வளர்ந்துபோகக்கூடிய காலத்தில், இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் மேலும் வளரக்கூடிய காலத்தில் ஜனங்கள் ஒன்றுசேரவேண்டிய சந்தர்ப்பம் இடைகிறது. அந்த சமுதாயம் மேலும் மேலும் வளரும்போது பிற்காலத்தில் என்ன ஏற்படுகிறது ? பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இந்த நாட்டில் ஏற்பட்ட காலத்தில் பெரு முதலாளித்துவம் ஏற்பட்டது. ஆகவே முதலாளிகள் என்ற ஒரு தனி இனம் ஏற்பட்டது. அவர்கள் ஒரு தேசீய இனம் என்ற எண்ணம் ஏற்பட்டது. நிச்சயமாக முதலாளிகள் சமுதாய அமைப்பின் வளர்ச்சிப்போக்கில், ஒரே பிரதேசத்தில் வசிக்கக் கூடிய மக்களிடத்திலும், ஒரே பாஷை பேசக்கூடிய மக்களிடத்திலும் பழக்கவழக்கங்கள், கலாசாரங்கள் ஆகியவை ஒன்றுக இருக்கக்கூடிய காலத்தில், தேசீய இனம் என்பது ஏற்படத்தான் செய்கிறது. தமிழர்கள் இதை மறுத்தாலும்கூட தமிழ் கவிகளை எடுத்துக் கொண்டால் சமீபத்தில் தான் தேசீயக் கவியாக அரசாங்கத்தாரால் போற்றப்படும் ஸ்ரீ நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள்

" தமிழன் என்றொரு இனமுண்டு,
தனியே அவனுக்கோர் குணமுண்டு."

என்று பாடக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு அம்மாதிரி பாடக்கூடிய கவிகளை நாம் பார்த்திருக்க முடியாது. ஆகவே, தேசீய இனப் பிரச்னை என்பது சரித்திரபூர்வமாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஏற்படுகிறது என்ற மார்க்ஸின் கண்ணோட்டத்துடன் தான் கம்யூனிஸ்ட் கட்சி இந்த பிரச்னையை எந்தக் காலத்திலும் அணுகி வந்திருக்கிறது.

SRI S. SWAYAMPRAKASAM : ஸ்ரீ பி. ராமமூர்த்தி அவர்கள் இப்போதுதான் " தமிழன் என்று ஒரு இனம் உண்டு " என்று ஸ்ரீ நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பாடியிருப்பதாகச் சொன்னார்கள். பாக்கித் தமிழ் இலக்கியங்களில் அந்த மாதிரி எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னார். சங்க காலத்திலிருந்தே தமிழ் இலக்கியங்களைப் பார்த்தால் எங்கெங்கு எல்லாமோ சென்று கப்பல் ஓட்டிய தமிழர்களைப்பற்றியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அவர் தெரியாததைப் பற்றி பேச வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI P. RAMAMURTHI : இன உணர்ச்சி என்று நான் பேசுகிறேனே ஒழிய தமிழ் என்பது வேறு. தமிழ் பேசக்கூடிய ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே அரசியலின் கீழ் வாழவேண்டுமென்ற உணர்ச்சி சங்க காலத்திலிருந்தே ஏற்படவில்லை என்றுதான் நான் சொல்கிறேன். சங்க காலத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்றும், அதே மாதிரி கொங்கு நாடு என்றும் பல ராஜ்யங்களாகப் பிரிந்து இருந்திருக்கிறார்கள். ஆனால் தமிழர்கள் என்ற ஒரு தேசீய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே சமுதாயத்திலும், ஒரே அரசியலின் கீழும் வாழ வேண்டும் என்ற எண்ணம் தேசீய இயக்கத்தின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தான் தோன்றி வளர்ந்தது. அந்த உண்மையை இப்போது நாம் உணருகிறோம். ஆகவே இந்த நாட்டில் இருக்கும் தேசீய இனங்கள், தேசீய இயக்கத்தின் பாரம்பரியத்தில், ஒன்றுசேர்ந்து நேசமாக வாழவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டு வளர்ந்தது. இந்த அடிப்படையைக் கொண்டுதான் நாங்கள் இந்தப் பிரச்னையைப் பார்க்கிறோம். ஆகவே அப்படிப் பார்க்கும்போது " எப்படி இந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு ஏகாதிபத்தியப் போராட்டத்தில் ஒற்றுமை வளர்ந்ததோ, அதே மாதிரி சுதந்திரம் கிடைத்த பிறகு அந்த ஒற்றுமையை மேலும் பலப்படுத்துவதற்காக இன்றைக்கிருக்கக்கூடிய சமுதாய அமைப்பைத் தகர்த்தெறிந்து ஒரு புதிய சமுதாய அமைப்பை ஏற்படுத்த வேண்டியது அவசியம் " என்று கூறுகிறோம். ஆகவே அப்படி நாட்டைச் சீரமைப்பதற்

காக தேசிய இனங்களையெல்லாம் ஒன்றுசேர்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது ஏற்கெனவே இடைத்திருக்கும் ஒற்றுமையை மேலும் மேலும் கெட்டிப்படுத்தி பலப்படுத்தினால் தான் இந்தியாவில் மிகப் பெரிய ஒற்றுமை ஏற்படுவது சாத்தியம். இந்த அடிப்படை உண்மையை மறந்துவிட்டால் ஒற்றுமை ஏற்படுவது சாத்தியம் அல்ல. ராஜ்ய சீரமைப்புக் கமிஷன் சொல்லியிருக்கிறது "**It was the determination of the Indian people to rid themselves of foreign domination and to build up a life for themselves as a free people, that created the present unity of India, sweeping away not merely the alien rule, but also the hereditary rulers who had divided up India and thus stood in the way of that unity**" என்று அதாவது, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்திருக்கக்கூடிய காலகட்டத்தில் தோன்றி வளர்ந்த ஒற்றுமைதான் இன்றைக்கு இருக்கக்கூடிய ஒற்றுமை. அந்த ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும், வளர்க்க வேண்டும். எப்படி வளர்ப்பது? பல்வேறு தேசிய இனங்களைக் கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு அவர்களுடைய தேசிய இனங்களுக்கு ஏற்ப அவர்கள் தங்கள் மொழிகளை வளர்ப்பதற்கு சந்தர்ப்பம் இடைத்து, அதே நேரத்தில் ஏற்றத் தாழ்வுகளோடு வளர்ச்சியடைந்திருக்கக்கூடிய பல்வேறு தேசிய இனங்கள் சீக்கிரத்தில் நல்ல வளர்ச்சி பெறுவதற்கு வேண்டிய சகோதர மனோபாவத்தோடு, இந்த நாட்டில் ஒரு அரசியலும், பொருளாதாரமும் அமையுமானால், நிச்சயமாக இப்படி ஒரு பிரிவினை மனோபாவம் ஏற்படாது.

11-40 a.m. அதுதான் இந்நாட்டின் ஒற்றுமைக்கு அஸ்திவாரம் என்று நாங்கள் அடிக்கடி கூறிக்கொண்டு வருகிறோம். அந்தக் கண்ணோட்டத்துடன் இந்தப் பிரச்னையைப் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்போது நீண்ட காலமாக நம் நாடு மொழிவாரி அடிப்படையில் பிரிக்கப்படவேண்டும் என்று நாங்கள் சொல்லிக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் நாடுகளில் ராஜ்யங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று இளர்ச்சி செய்து கொண்டும் வந்தார்கள். கடைசியில் இந்தக் இளர்ச்சியினால் ஜனங்களிடையே ஒற்றுமை ஏற்பட்டது. அதன் பிறகு அது சீரழிய ஆரம்பமாயிற்று. காங்கிரஸ் ஸ்தாபனம் சம்பந்தப்பட்ட மட்டில், அதன் கமிட்டிகள் சம்பந்தப்பட்ட மட்டில் காங்கிரஸ் ஸ்தாபனம் மேலிடம் சம்பந்தப்பட்ட மட்டில் இதை ஒரு பிரச்னையாக வைத்து அதாவது மொழிவாரி அடிப்படையில் ராஜ்யங்களைப் பிரிக்க வேண்டும் என்ற பிரச்னையை அடிப்படையாகக் கொண்டு தேர்தலுக்கு நின்றார்கள். 1946-ம் வருஷம் தேர்தலுக்கு நின்ற காலம் வரையில், இந்நாட்டு அதிகாரம் அவர்களுடைய கைக்கு மாறிய காலம் வரையில், அவர்கள் இந்தக் கொள்கையையே கடைப்பிடித்து வந்தார்கள். இது ஒரு நியாயமான கோரிக்கை என்றும் கருதி வந்தார்கள். இது ஜனநாயக அடிப்படையில் எழுந்திருக்கும் கோரிக்கை என்று நினைத்து வந்தார்கள். அதன் பிறகு 1946-ம் வருஷம் தேர்தலுக்கு நின்ற பிறகு, 1947-ம் வருஷம் அதிகாரம் மாறுதல் அடைந்த பிறகு அவர்களுடைய நிலைமை மாறிவிட்டது. இன்றைக்கு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? மொழியை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது, வேறு பல விஷயங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும், ஒற்றுமையை இந்நாட்டில் பாதுகாக்க அதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பல காரணங்களைச் சொல்லுகிறார்கள். அப்படி பல காரணங்களைக் காட்டி இந்தப் பிரச்னையை ஒத்திப் போட முயற்சி செய்தார்கள். அப்படி எட்டு வருஷங்கள் முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனால் இந்நாட்டில் என்ன நடந்தது? அதனால் இந்நாட்டில் ஒற்றுமை வளர்ந்ததா என்று பார்க்க வேண்டும். ஒற்றுமை வளர்ச்சி அடைவதற்கு பதிலாக ஒற்றுமை சீரழிந்து தான் வந்தது. இதுதான் இப்பொழுதுள்ள யதார்த்த பிரச்னை. இதைத் தான் நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே ஒற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை. அங்கேயும் ஏற்கெனவே இருந்த ஒற்றுமை இப்பொழுது சீரழிந்து வருகிறது. மலையாள காங்கிரஸ்காரர்களுக்கும் தமிழ் காங்கிரஸ்காரர்களுக்கும்

சண்டை, வங்காள காங்கிரஸ்காரர்களுக்கும் பீகார் காங்கிரஸ்காரர்களுக்கும் சண்டை, மகராஷ்டிர காங்கிரஸ்காரர்களுக்கும் குஜராத்தி காங்கிரஸ்காரர்களுக்கும் சண்டை. அதனால் என்ன தெரிகிறது? காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே ஒற்றுமை இல்லை என்பது நன்றாகத் தெரிகிறது. கட்சியில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாதபோது பண்டித நேரு அவர்கள் நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்த முயலுகிறார். நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முயலுகிறவர்களுக்கு கட்சியில் ஒற்றுமையைக் கொண்டுவருவதற்கு முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. அதன் காரணத்தைத்தான் நாம் பார்க்க வேண்டும். அது தான் கம்யூனிஸ்ட் கட்சி கூறக்கூடிய விஷயம். இதுதான் யதார்த்த விஷயம்.

காங்கிரஸ் மேலிடத்தில் இந்தப் பிரச்னையை ஒத்திப்போட முற்பட்டார்கள். எஸ்.ஆர்.சி. கமிஷனும் தன்னுடைய தீர்ப்பை ஒத்திப் போட முயற்சி செய்தது. ஆனால் ஆந்திர மாகாணப் பிரிவினை ஏற்பட்டதன் காரணமாக ஜனங்களுடைய போராட்டம் மேலும் மேலும் வளர்ந்து வந்தது. ஆகவே இந்தப் பிரச்னையை மேலும் ஒத்திப் போட முடியாது என்ற ஒரு முடிவிற்கு அவர்கள் வந்தாகள். அன்றைக்கு அவர்கள் என்ன சொன்னார்கள்? ஆந்திர பிரிவினை ஏற்பட்ட பிறகு அதாவது சென்னை ராஜ்யத்தைப் பிரித்த காலத்தில் அவர்கள் என்ன சொன்னார்கள். "**It is a matter for rejoicing not only for the Andhra people but for the entire democratic people of this country**".

அன்று ஆந்திர ராஜ்யப் பிரிவினை ஏற்பட்ட பிறகு அது ஆந்திர மக்களுடைய விஷயம் மட்டும் அல்ல, அது இந்நாட்டிலுள்ள ஜனநாயக எண்ணம் படைத்திருக்கும் சகல மக்களுடைய பிரச்னையுமாகி விட்டது. ஆந்திரப் பிரிவினையினால் இந்நாட்டில் மொழிவாரி அடிப்படையில் எல்லா ராஜ்யங்களையும் பிரிக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதற்கு வேண்டிய ஊக்கத்தையும், வேகத்தையும் ஜனங்களிடத்தில் இளப்பி விட்டது. அதன் பிறகுதான் மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற இளர்ச்சி வலுவடைந்து வந்தது. அப்பொழுதுதான் எஸ்.ஆர்.சி. கமிஷன் இந்தப் பிரச்னையை ஒத்திப்போட முடியாது என்ற முடிவிற்கு வந்தது. இந்தக் கோரிக்கை பெரிய கோரிக்கை என்று உணர்ந்தார்கள். இந்தக் கோரிக்கையை பெரிய அளவிற்கு ஒத்துக் கொள்ளக்கூடிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. அதற்கு ஆதாரமாக அவர்கள் தங்களுடைய ரிப்போர்ட்டில் 50 பக்கங்கள் வரையில் அதைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். மொழி அடிப்படையில் ராஜ்யங்களை பிரிக்கக் கூடாது என்பதற்காக அவர்கள் பெரிய "ஆர்குயுமெண்ட்" கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவையும் கொடுத்த பிறகு கடைசியில் அவர்கள் சொன்னது என்ன? 16 மாகாணங்களில் 14 மாகாணங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என்று தங்களுடைய சிபாரிசில் சொல்லி விட்டு இரண்டு மாகாணங்கள் தனியாக இருக்க வேண்டும், அவைகள் மொழி அடிப்படையில் பிரிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டு மாகாணங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இந்த இரண்டு மாகாணங்களும் ஏற்கெனவே அவர்கள் சொன்ன மாதிரி மொழி அடிப்படையில் பிரிக்கப்படக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் வேறு காரணத்தைக் காட்டியிருக்கிறார்கள். அவைகளை பிரித்தால் நாட்டில் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மகாராஷ்டிரர்களையும், குஜராத்திகளையும் கொண்ட பம்பாய் ராஜ்யம் இரட்டை மொழி ராஜ்யமாக இருக்க வேண்டும் என்றும், அதற்கு வேண்டிய காரணங்களையும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமையில் பார்க்கும்போது நாட்டில் என்ன நிலைமை ஏற்படுகிறது? அந்தக் கண்ணோட்டத்துடன் இதை பார்க்க வேண்டும். இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்நாட்டில் இருக்கும் பெரும் முதலாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பது காங்கிரஸ் மேலிடத்தின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது. பெரும் முதலாளிகளுக்கு ஏற்படக்கூடிய மனோபாவம் மற்ற இடங்களுக்கும் பிரதிபலிக்கிறது. அதற்கு வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. "**The city of Bombay stands in special relation to**

[Sri P. Ramamurthi] [24th Nov

Maharashtra, Gujarat, and to India as a whole . . . i and commercially, it is the hub of India's financial and industrial activity . . Some expert evidence was also let before us to show how the commercial and financial interests of the Bombay City and of India as a whole would be affected by a sudden change in the form of the Government in Bombay."

பம்பாய் நகரத்தின் உருவம் மாறிவிடப் போவதில்லை. ஆனால் பெரும் முதலாளிகளுக்கு பெரிய பாதகம் ஏற்பட்டு விடும் என்பதைப் பற்றி சாட்சியம் கூறியிருக்கிறார்கள். பம்பாய் நகர அரசாங்கத்தின் உருவம் மாறி விடப்போவதில்லை. அங்குள்ள ஆள்கள் தான் மாறலாம். அங்கு மகாராஷ்டிரார்கள் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள், குஜராத்திகள் கொஞ்சமாக இருக்கிறார்கள். அதனால் பாதகம் ஏற்படும் என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். மொழி அடிப்படையில் ராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று சொல்லும்போது அவர்கள் இதைச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு ஒரு கொள்கை கிடையாது. ஒரே கொள்கையின் அடிப்படையில் இந்த ரிப்போர்ட்டை தயாரித்திருந்தால் ராஜ்யங்கள் ஜனநாயக அடிப்படையில் அமைந்திருக்கும். தகராறான கொள்கைகளை வைத்துக்கொண்டு பிரிவினை செய்திருக்கிறார்கள். அதனால் தான் அதை சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கடைசியாக மாகாணங்களைப் பிரிக்க ஒரு கொள்கையை வகுத்திருக்கிறார்கள். எல்லை சம்பந்தமாக ஒரு கொள்கையையும் அவர்கள் கடைப் பிடிக்கவில்லை. (Balances and checks) என்ற கொள்கையை அவர்கள் கடைப்பிடித்திருக்கிறார்கள். எங்கும் அதை சரியாக கடைப்பிடிக்கவில்லை. எதோ கொஞ்சம் தாலூகாக்களை எடுத்து இங்கே போடுவதும், சிலவற்றை எடுத்து அங்கே போடுவதுமாகத் தான் செய்திருக்கிறார்கள். இப்படி இங்கிருப்பதை அங்கு போட்டு, அங்கிருப்பதை இங்கு போட்டு எல்லோரையும் திருப்தி செய்திருக்கிறார்கள். இந்த விதத்தில் அவர்கள் பிரிவினை செய்து ரிபோர்ட் தயாரித்திருக்கிறார்கள்.

The Hon. Sri K. KAMARAJ : அது காங்கிரஸ் ரிபோர்ட் அல்ல.

Sri P. RAMAMURTHI : காங்கிரஸ் ரிபோர்ட் இல்லா விட்டாலும் காங்கிரஸ் சம்பந்தப்பட்ட ரிபோர்ட். 1947-ம் வருஷம் வரையிலும் இந்த ரிபோர்ட்டை காங்கிரஸ் காரிய கமிட்டி ஒத்துக் கொண்டிருக்கிறது. சிறிய மாறுதல்களைக் கூட ஒத்துக் கொண்டிருக்கிறது. எந்த அடிப்படைக் கொள்கையில் இதை தயார் செய்திருக்கிறது? இன்றைக்கு இருக்கும் நிலைமையில் பாலன்செஸ் அண்டு செக்ஸ் (Balances and checks) என்ற முறையில் இதை அமைத்திருக்கிறார்கள். இந்தக் கண்ணோட்டத்துடன் இதைப் பார்க்கும் போது எல்லை சம்பந்தமாக இந்நாட்டில் எங்கும் தகராறுகள் இளம்பி இருக்கின்றன. எல்லைத் தகராறுகள் சம்பந்தமாக ஏற்கெனவே தகராறுகள் ஏற்பட்டு நாட்டின் ஒற்றுமை சீரழிந்து விட்டது. அந்த நிலைமையிலேயே இன்றைக்கும் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே இதில் ஒரு பெரிய வெற்றி ஏற்பட்டு விட்டது என்று சொல்ல முடியாது. வெற்றி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லும் காலத்தில் மேலும் மேலும் தகராறுகள் தான் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. எவ்வளவோ தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. எந்த விதத்தில் தகராறுகள் ஏற்பட்டன என்பதைப் பார்க்க வேண்டும். இதில் காங்கிரஸ் கொள்கை என்ன?

இது சம்பந்தப்பட்ட வரையில் கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் கொள்கையை எடுத்துக் காட்டியிருக்கிறார் என்று நினைக்கிறேன். கனம் முதல் மந்திரி அவர்கள் சொன்ன மாதிரி இது காங்கிரஸ் கமிட்டியின் ரிபோர்ட் இல்லை என்று சொன்னாலும், காங்கிரஸ் கொள்கை சம்பந்தப்பட்ட வரை கனம் சி. சுப்பரமணியம் அவர்கள் பேசிய பேச்சு காங்கிரஸ் அரசாங்கத்தினுடைய பேச்சு என்றே நான் நினைக்கிறேன். காங்கிரஸ் அரசாங்கத்தின் பேச்சு காங்கிரஸ் காரியக் கமிட்டி, பிரதம மந்திரி சொல்லிக்கொண்டிருக்கும் கொள்கையை பிரதிபலிக்கிறது என்று கருதுகிறேன்.

24th November 1955] [Sri P. Ramamurthi]

ஆகவே இந்த பிரதிபலிப்பை எடுத்துக் கொண்டால் எஸ்.ஆர்.சி. கமிட்டி ரிபோர்ட்டுக்கும் அவர்களுடைய மனோபாவத்துக்கும் என்ன வித்யாசம் இருக்கிறது என்பது தான் எனக்குத் தெரியவில்லை. நேற்றைய தினம் கனம் சி. சுப்ரமணியம் அவர்கள் பேசிய காலத்தில் கனம் விநாயகம் உள்பட இன்னும் பலர் தேவிகுளம், பீர்மேடு சம்பந்தமாக நன்றாக எடுத்துக் காட்டி விவரித்துச் சொன்னார் என்று சொன்னார்கள்.

ஆனால் அவர் பேசியது சரியல்ல என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

எனென்று கேட்டால் இன்றைய தினம் தமிழர்கள் ஜெயிக்கிறார்களா, மலையாளிகள் ஜெயிக்கிறார்களா என்பது அல்ல பிரச்னை. இன்றைய தினம் தமிழர்கள் நன்றாக வாதாடுகிறார்களா, மலையாளிகள் நன்றாக வாதாடுகிறார்களா என்பது அல்ல பிரச்னை.

கனம் சுப்ரமணியம் அவர்கள் பேச்சை எடுத்துக் கொண்டால் ராஜ்ய சீரமைப்புக் கமிஷனுடைய யாதாஸ்தில் அடங்கியிருக்கிற பல விஷயங்களை அவர் ஒப்புக் கொள்ளுகிறார். மொழி அடிப்படையில் மாத்திரம் ராஜ்யங்களை அமைப்பது என்ற கொள்கையையும் அவர் கண்டிக்கிறார். ராஜ்யங்களை மொழி அடிப்படையில் அமைப்பது என்ற ஒரு பக்கக் கண்ணோட்டத்தோடு கூடவே, "நிர்வாக சௌகர்யத்தையொட்டியும்", இந்த தேசத்தில் இருக்கக் கூடிய இயற்கை வளங்களை சமமாக எல்லா ராஜ்யங்களும் பங்கிட்டுக் கொள்ளும்படியும் ராஜ்யங்களைப் பிரிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்.

The Hon. Sri C. SUBRAMANIAM : 'சமமாக' என்று நான் சொல்லவில்லை.

Sri P. RAMAMURTHI : "சமமாக" என்று இல்லாவிட்டாலும், "நியாயமாக" பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார். ராஜ்யங்களை அமைப்பதில் பிரதான நோக்கம் மொழியை அடிப்படையாகக் கொண்டு பிரிப்பது அல்ல. ராஜ்யத்தின் பொருளாதார, நிர்வாக சௌகர்யத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டே ராஜ்யங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறார். இதைத் தானே ராஜ்ய சீரமைப்புக் கமிஷனும் சொல்லுகிறது. யார் சொல்வது நியாயம், யார் சொல்வது தப்பு என்று நாம் எப்படி நிர்ணயிப்பது? இது விஷயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்.

கம்யூனிஸ்டுக் கட்சி சம்பந்தப்பட்ட மட்டில் ஆரம்பம் முதற்கொண்டே ஒரே கொள்கையைத் தான் அவர்கள் பின்பற்றி வருகிறார்கள். அதாவது இந்தப் பிரச்னையை கிராமங்களின் அடிப்படையில் தான் பிரிக்கவேண்டுமென்று அவர்கள் ஆதியிலிருந்தே சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

பாலக்காடு சம்பந்தப்பட்ட மட்டில் அங்கே சில கிராமங்கள் நமக்கு வந்தாக வேண்டும். அதே மாதிரி சித்தூர் தாலூக்கா சம்பந்தப்பட்ட மட்டில் சில கிராமங்கள் நமக்கு வந்தாக வேண்டும். நெய்யாற்றங்கரை சம்பந்தப்பட்டமட்டில் சில கிராமங்கள் நமக்கு வந்தாக வேண்டும். இந்தப் பிரதேசங்களுக்கு எல்லாம் நாம் வரையறுத்துக் கொள்ளுகிற கொள்கையை நாம் என் கூடலூர் தாலூக்காவுக்கும் பின்பற்றக் கூடாது? அப்படிப் பார்த்தால் கூடலூர் தாலூக்காவை தமிழர்கள் எதற்காகக் கேட்க வேண்டும்? அங்கே மெஜாரிட்டியாக மலையாளிகள் தான் இருக்கிறார்கள் என்பது தெரியும். கிராம அடிப்படையில் பார்த்தாலும் கூடலூர் தாலூக்காவில் இரண்டு கிராமங்களில் கூட மலையாளிகள் மெஜாரிட்டியாக இருக்க மாட்டார்களா? ஆனால் இந்தக் கொள்கையைக் கொண்டு அங்கே பார்க்க மாட்டார்கள்.

அதனால் தான் சொல்லுகிறேன். காங்கிரஸ் கட்சிக்கு ஒரு கொள்கை என்பதே இடையாது. (திரு கே. விநாயகம் : நன்றாக கொடுங்கள்.) அதைத் தான் நான் கண்டிக்கிறேன். எதோ யாருக்கோ கொடுப்பது, யாரிடமிருந்தோ பிடுங்குவது என்கின்ற மனோபாவத்தோடு இந்தப் பிரச்

[Sri P. Ramamurthi] [24th November 1955

னையை அணுகுவதே தப்பு. அவர்களுக்குக் கொடுப்பது, அவர்களுக்குக் கொடுக்காமலிருப்பது என்கின்ற பிரச்னையே எழக்கூடாது. ஜனங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அவர்களுடைய வாழ்வு சம்பந்தப்பட்டமட்டில், அவர்கள் எந்தப் பகுதி மக்களாக இருந்தாலும், மனித உணர்ச்சியோடு, இந்த நாட்டிலுள்ள எந்தப் பகுதி மக்களும் பாதிக்கப்படாமலிருக்கக் கூடிய முறையில் இப்பிரச்னைக்கு முடிவு காண வேண்டுமென்பது தான் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை. அதைத் தான் ஆதியிலிருந்தே அது வற்புறுத்திக் கொண்டு வருகிறது. தமிழ்நாடு சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு கொள்கை, மலையாளி சம்பந்தப்பட்ட மட்டில் மற்றொரு கொள்கை என்ற பாகுபாடு இருக்கக் கூடாது.

இந்த அடிப்படைக் கொள்கையை வைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி அணுகாததினால்தான் இன்றைக்கு நாட்டு மக்களிடையே மனக்கசப்பு அதிகப்பட்டு வருகிறது. எங்கு பார்த்தாலும் கிளர்ச்சிகள் எழுந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கிளர்ச்சிக்கு அடிகோலியவர்கள் காங்கிரஸ்காரர்கள். அந்த உண்மையை மறந்து விட்டு ஏதோ கம்யூனிஸ்டுக் கட்சி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டில் கிளர்ச்சிகளை தூண்டி விட்டு வருவதாகப் பிரசாரம் செய்து வருவது உண்மையை மறைப்பதற்காகத்தான் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

மலையாளிகள் தங்களுக்கு உணவுக் கஷ்டம் அதிகம், ஆகவே நாஞ்சில் நாடு கேரள நாட்டுடனேயே இருக்க வேண்டுமென்று சொன்னபோது, 'நமக்கு உணவுப் பஞ்சம் என்றால் "பர்மா" கூட நம் ராஜ்யத்தோடு இருக்க வேண்டுமென்று சொல்வது போலிருக்கிறது' என்று அவர்களை யார் கேட்டார்கள்? பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி கேட்கவில்லை. காங்கிரஸ் கட்சி கேட்கவில்லை. எல்லோரும் மனச்சாட்சியைத் தொட்டுக்கொண்டு சொல்லட்டும். அந்தமாதிரியாகக் கேட்டது கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்று தான் என்றால் அதை யாராவது மறுக்க முடியுமா என்று கேட்கிறேன். எந்த இடத்திலே நியாயம் இருக்கிறதோ அதை ஆதரிப்பதுதான் கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை. இனவெறி, பிரதேச வெறி கொண்டு எந்தப் பிரச்னையையும் அந்தக் கட்சி இன்று வரை அணுகியது இல்லை. அது அணுகவும் அணுகாது என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: I saw a report that a Communist Member would fast if these five taluks would go to Tamil Nad.

Sri P. RAMAMURTHI: பத்திரிகைகளில் அம்மாதிரியாகச் செய்திகள் வந்திருக்கலாம். கம்யூனிஸ்டுகளைப் பற்றி ஏதாவது தவறான செய்திகளையே பிரசுரிப்பதை சில பத்திரிகைகள் கொள்கையாகக் கொண்டிருக்கின்றன. அந்தச் செய்திக்கு மறுப்பு அனுப்பினால் அவற்றை அந்தப் பத்திரிகைகள் பிரசுரிப்பதில்லை. ஆகவே தான் அந்த மாதிரியாக எப் பொழுதாவது எங்களுடைய கட்சிப் பத்திரிகையில் வந்திருக்கிறதா என்று படித்துப் பார்க்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கொள்கைத் தெளிவு இல்லாததின் காரணமாகத் தான் இன்றைக்கு காங்கிரஸ் கட்சிக்காரர்களிடையே ஒற்றுமை கிடையாது. ஆகவே தான் இன்றைக்கு வோட்டு எடுப்பதென்றால் அவரவர்கள் இஷ்டப்படியே வோட்டுப்போடலாம் என்று சொல்லி விட்டார்கள். ஆனால் கொள்கைத் தெளிவு உடைய நாங்கள் ஒருவருக்கொருவர் அபிப்பிராயபேதம் கொள்ள இடமில்லை. ஆகவே ஆரம்ப முதலே நாங்கள் இந்தக் கொள்கையை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

12 noon. காங்கிரஸ் அகில இந்திய கட்சி; அது சுதந்திரத்திற்காக பாடு பட்டபோது, ஒரு மிகப் பெரிய கொள்கையை அநுஷ்டானத்தில் வைத்திருந்தது. அதுதான் இந்திய மக்களின் சக்தி வாய்ந்த, பலமான ஒற்றுமை. இந்திய மக்களுடைய இந்த ஒற்றுமைதான், தேசிய முக்கியத்துவமாக வைக்கப்பட்டிருந்தது. ஆனால், மக்களது பிரச்னைகளைத் தீர்க்க முன் வரும்போது, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒற்றுமையை ஏற்படுத்த முடிய வில்லை

24th November 1955] [Sri P. Ramamurthi]

என்பதைப் பார்க்கிறோம். என் இந்த நிலைமை என்பதை சிந்தனை செய்து பார்க்கவேண்டும். தற்போது இரு மக்களிடையே, இரு சாராரிடையே மிகப் பெரிய மனக் கசப்பை யார் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்? திருவாங்கூர்-கொச்சி ஸ்டேட்டில் காங்கிரஸ் மந்திரி சபைதான் இருக்கிறது. அங்கு காங்கிரஸ் தலைவரான பணம்பள்ளி கோவிந்த மேனன் தான் முதல் மந்திரியாக இருக்கிறார். அவர் ஒரு கருத்தை தெரிவிக்கிறார் என்றால், காங்கிரஸ்காரருடைய, காங்கிரசினுடைய, அங்கிருக்கும் காங்கிரஸ் மந்திரி சபையினுடைய கருத்தைத்தான் சொல்லுவதாக ஆகும். எற்கனவே, பிரஜா சோஷியலிஸ்டுகளின் மந்திரி சபை அங்கிருந்தது. அந்தக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான பட்டம் தாணுப்பிள்ளை அந்த ஸ்டேட்டில் மந்திரி சபை அமைத்து சர்க்காரை நடத்தி வந்தார். இந்த பிரஜா சோஷியலிஸ்ட் மந்திரி சபை அப்போது என்ன காரியங்களை, என்ன கருத்தை தெரிவித்ததோ, அதைத்தான் இப்போது இருக்கும் கோவிந்த மேனனை பிரதம மந்திரியாகக் கொண்ட காங்கிரஸ் மந்திரிசபையும் தெரிவிக்கிறது. ஆனால் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட மட்டில் இந்த ராஜ்ஜிய புனரமைப்பு விஷயத்தில் என்ன கொள்கையைக் கொண்டிருக்கிற தென்பது தெரியவில்லை. இங்கு அந்த கட்சித் தலைவர்களில் முக்கியஸ்தரான கனம் கே. பி. மேனன் அவர்கள் இந்த ரிப்போர்ட்டைப் பற்றி பேசும்போது என்ன சொன்னார்கள்? மொழிவாரி ராஜ்ஜியங்களே இருக்கக்கூடாது, அமைக்கக் கூடாதென்று சொன்னார்கள், அந்த ரிப்போர்ட்டை தகர்த்தெறியவேண்டும் என்றும் பேசினார்கள். அதுதான் தன்னுடைய கட்சி அபிப்பிராயமென்று கூடக் கூறினார்கள். ஆனால் அந்தக் கட்சியினுடைய அபிப்பிராயத்தைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்பும்போது, அந்தக் கட்சியினுடைய **National Executive**-னுடைய நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும். சென்ற அக்டோபர் மாதம் 18-ம் தேதி இந்த **National Executive** கூடி ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது. அது என்ன? **"The National Executive of the Praja Socialist Party which has been discussing the report of the S.R.C. for the last two days here adopted a resolution 'welcoming the recommendations' in so far as it fulfils in the case of the most of the provinces, the legitimate aspirations of the people for the reorganization of the existing States on linguistic basis".** ஜனங்களுடைய அபிலாஷையான, பாஷாவாரி ராஜ்ஜியங்களை அமைக்கும் காரியத்தை இந்த ரிப்போர்ட்டு பூர்த்தி செய்வதால், இதை வரவேற்கிறோம் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அந்த **National Executive**-ல் கனம் மெம்பர், டாக்டர், கே. பி. மேனனும் ஒரு உறுப்பினர் ஆவார்கள். இவர், தான் சொல்லுவது, கட்சியினுடைய அபிப்பிராயம், அதாவது இந்த ரிப்போர்ட்டை தகர்த்தெறிந்து, மொழி வழி ராஜ்ஜியங்கள் அமைக்கப்படாமல் செய்ய வேண்டுமென்பதுதான், கட்சியின் கருத்து என்று சொன்னால், அதை நாம் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் தற்போது இந்த சபையில் இல்லாததால் நான் அதைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை என்றே நினைக்கிறேன். அந்த அளவுக்கு அவர்கள், அந்த கட்சியின் அபிப்பிராயத்தையும், பொது மக்களுடைய அபிப்பிராயத்தையும் இங்கே பிரதிபலிக்கச் செய்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலே ஒவ்வொரு விதமாக கட்சியின் அபிப்பிராயத்தை பிரதிபலிக்கச் செய்கிறார்கள். அதுதான் அக்கட்சிக்காரர்களின் வழக்கம். பிராஜா சோஷியலிஸ்டு கட்சி அப்படித்தான் செய்யும். அக்கட்சியைப் பற்றி அத்துடன் விட்டு விட்டு, காங்கிரஸ் கட்சிக்கு வருவோம். தற்போது காங்கிரசானது ஜனங்களிடையே, குரோத மனப்பான்மையை, விரோத மனப்பான்மையை தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறது. அதன் மிகப் பெரிய தலைவர், பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள், 'அகில இந்திய ஒற்றுமை வேண்டும், எல்லா மக்களிடையேயும் ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால் மற்ற காங்கிரஸ்காரர்களெல்லாம் இந்த ஒற்றுமையைக் குலைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் கனம் -மந்திரி காமராஜ் நாடார்,

[Sri P. Ramamurthi] [24th November 1955

பணம்பள்ளி கோவிந்த மேனன், காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி கோவிந்த நாயர் ஆகிய இவர்கள் எல்லாம் அங்கத்தினர்கள். கனம் காமராஜர் அவர்கள், பணம்பள்ளி கோவிந்த மேனனையும், கோவிந்த நாயரையும் கூப்பிட்டு "நாம் இன்றைக்கு, இந்த ராஜ்ஜிய புனரமைப்பு விஷயத்திலே, ஜனங்களிடையே மனக் கசப்பு ஏற்படும்படி செய்யக் கூடாது, அப்படி செய்வதால் நாட்டின் ஒற்றுமை பாதிக்கப்படும், இந்த ராஜ்ஜிய புனரமைப்பை சுமுகமாக தீர்த்துக்கொள்வோம், ராஜ்ஜிய எல்லையை எப்படி நிர்ணயிப்பதென்பதை ஆலோசனை செய்வோம்", என்று சொல்லி நாட்டிலே என் ஒரு நல்ல சுமுகமான சூழ்நிலையை உண்டாக்கக்கூடாது ? என் அவர்களால் அப்படி சுமுகமாக எதையும் செய்ய முடியவில்லை ? அதற்குப் பதிலாக என்ன நடக்கிறது ? இந்த அசெம்பிளியில், இந்த ராஜ்ஜிய புனரமைப்பு தீர்மானத்தை நிறைவேற்றினால், அதை நாளைக்கு அமுலாக்க முடியுமா ? இங்கே தீர்மானம் நிறைவேற்றலாம். தேவிகுளம், பீர்மேடு தமிழ் நாட்டுடன் இருக்க வேண்டுமென்று பலத்த மெஜாரிடியுடன், தீர்மானம் நிறை வேற்றப்படலாம். அதே மாதிரி, கொச்சி, திருவாங்கூர் State Assembly-யிலும் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று கமிஷன், சிபார்சு செய்திருக்கும் தோவாளை, கல்குளம் முதலிய ஐந்து தாலுக்காக்களையும் கேரள ராஜ்ஜியத்துடனேயே இருக்க விட்டுவிட வேண்டுமென்று பலத்த மெஜாரிடி பலத்துடன் தீர்மானம் நிறை வேற்றலாம். தேவிகுளம் பீர்மேடு இவைகள்கூட கேரளாவுடன் இருக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறலாம். இரண்டு மந்திரி சபைகளும், காங்கிரஸ் மந்திரி சபைகள் தான். மத்திய அரசாங்கத்தைப் பற்றியோ காரியக்கமிட்டியைப் பற்றியோ நாட்டின் ஒற்றுமை பற்றியோ கவலைப் படாமல் இவ்வித தீர்மானங்கள் நிறைவேற்றினாலும் முடிவில் என்ன ஏற்படும் ? காங்கிரஸ் காரியக்கமிட்டியானது யார் பலமாக கோஷம் போடுகிறார்கள், யார் அடிக்கடி எந்த கோரிக்கைக்காகப் பலமாக, சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், யார் பக்கம் பலம் அதிகமாக இருக்கிறது என்று தெரிந்து எதையும் செய்யமாட்டார்கள். யாருடைய செல்வாக்கு காரிய கமிட்டியில் அதிகமாக இருக்கிறதோ எந்த தனிப்பட்ட தலைவர்களுடைய நல்ல செல்வாக்கு அந்த காரியக் கமிட்டியில் இருக்கிறதோ அவர்களுக்குச் சாதகமாக இப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும். இந்த அசம்பிளியில் கனம் சுப்பிரமணியம் அவர்கள் இப் பிரச்சினையின் பேரில் ஒரு நல்ல வக்கீல் வாதம் செய்வதாலோ அல்லது இப் பிரச்சினைக்கு ஆதரவாக பெரிய Advocate-General விவாதங்கள் நடத்துவதினாலோ இப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விடாது.

தற்போது இந்த ராஜ்ஜிய புனரமைப்பு விஷயமாக இத் தென் னாட்டில், இரு சாரர்களுக்கும் இடையே ஒரு பெரிய மனக் கசப்பை நடைமுறையில் பகைமை உண்டாக்கிவிட்டது. இதற்கு கம்யூனிஸ்ட் கட்சி என்ன செய்தது ? இது விஷயமாக என்ன கேட்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். (The Hon. Sri C. Subramaniam : I hope that the Communist Party will do the just thing.) இந்த ராஜ்ஜிய புனரமைப்பு விஷயமாக உங்களுக்கு நியாயமாகபடுவது மலையாளிகளுக்கு அநியாய மென்று படுகிறது. மலையாளிகளுக்கு நியாயமாகப்படுவதை நீங்கள் அநியாய மென்று நினைக்கிறீர்கள். இப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் காங்கிரஸ் கட்சி அநுஷ்டிக்கும் கொள்கைதான். இந்த பிரச்சினையை அணுகுவதற்கு அடிப்படையான அணுகுமுறை விட்டு விட்டு இந்த பிரச்சினையை சுமுகமாக தீர்க்க அஸ்திவாரமான காரியத்தை மனதில் கொண்டு செய்யாமல், நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம் அவர்களும், மற்ற காங்கிரஸ்காரர்களும் மேலும் மேலும் மனக் கசப்பை இருசாரரிடையே, அதிகரிக்கும்படியான நிலைமையைத்தான் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சுமுகமாகத் தீர்க்கும் மார்க்கத்தை அவர்கள் தேடவில்லை, அவர்களால் தேட முடியவுமில்லை.

கனம் சுப்பிரமணியம் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைப் பார்த்து இதில் ஒரு நியாயமான முடிவுக்கு வரவேண்டுமென்று சொல்லுவதை

24th November 1955] [Sri P. Ramamurthi]

வரவேற்கிறேன். இப்படிப்பட்ட விஷயத்தில் கம்யூனிஸ்ட் கட்சிதான் நியாயமான கொள்கையை கடை பிடிக்கிறதென்பதை சீக்கிரமே காங்கிரஸ் காரர்கள் அறிவார்கள் ; உணர்வார்கள். ஆந்திர மாகாணப் பிரச்னை வரும் காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றுதான் ஒன்று பட்டு இருந்தது. அந்த சமயத்தில் காங்கிரசுக்குள்ளேயே பிளவு இருந்தது. சென்னை நகர விஷயமாக கேள்வி எழுந்தபோது காங்கிரஸ் மெம்பர்களிடையேயும், பிரஜா சோஷியலிஸ்ட்டு மெம்பர்களிடையேயும் அபிப்பிராய பேதமும், பிளவும் இருந்தன. ஆனால் கம்யூனிஸ்ட்டு கட்சி அங்கத்தினர் களிடையே ஒன்றுபட்ட ஒரு நிர்ணயமான கொள்கை இருந்தது. பம்பாய் விஷயத்தில் குஜராத்தி, மகாராஷ்டிரர்களிடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டு பல தகராறுகள் நடப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இது விஷயமாக கம்யூனிஸ்ட்டுக் கட்சிதான் ஒரே கொள்கையை அனுஷ்டிக்கி றது. இது மட்டு மல்ல சிலோனிலுள்ள தமிழர்கள் பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் அங்கேயுள்ள சகல கட்சிகளும் ஒரு பக்கம் இருந்து கொண்டு பலப் பலவிதமான கருத்துக்களை தெரிவிக்கிறார்கள். ஆனால் அங்கு கம்யூனிஸ்ட்டு கட்சி ஒன்றுதான் தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமை கொடுக்கவேண்டியதுதான் நியாயம் என்று ஒன்றுபட்ட கருத்துடன் ஒற்றுமையாக சொல்லுகிறது.

ஜனங்களை ஒருவருக்கொருவர் மனக்கசப்பு ஏற்படும்படி தூண்டிவிடு வது நியாயமல்ல. நான் இங்கு வர்க்கங்களை குறிப்பிடவில்லை என்பதை ஞாபகப்படுத்துகிறேன். ஜனங்களைத்தான் குறிப்பிடுகிறேன். தொழிலாளர் களுக்கும் முதலாளிகளுக்கும் போராட்டம் ஏற்பட்டால், நிலச்சுவான்தார் களுக்கும் விவசாயிகளுக்கும் போராட்டம் நடந்தால், கனம் சுப்பிரமணியம் அவர்கள், அது விஷயமாக தொழிலாளர்களுக்கோ, விவசாயிகளுக்கோ ஒன்றுமே செய்யமாட்டார்கள். முதலாளிகளுக்கும், நிலச்சுவான்தார் களுக்கும் மனமாற்றம் ஏற்படவேண்டும் அப்போதுதான், தொழிலாளர் களுக்கும் விவசாயிகளுக்கும் சாதகமான சட்டம் செய்யமுடியு மென்று சொல்லுவார்கள். பெருமுதலாளிகள், நிலச்சுவான் தார்கள் சம்பந்தப்பட்டவரையில் அந்தக் கொள்கை. ஆனால் ஜனங்கள், ஆந்திரர்கள், மலையாளிகள், கன்னடியர்கள், தமிழர்கள் இந்நாட்டில் இருக்கிறார்கள், ராஜ்ஜிய புனரமைப்பு விஷயமாக தகராறுகள் இருக் கின்றன. இருந்தாலும், இந்த ஜனங்கள் சம்பந்தப்பட்டமட்டில் அந்தக் கொள்கை வேண்டியதில்லை, அந்தக் கொள்கையை அனுசரிக்க மாட்டார்கள். ஒருவரை யொருவர் அடித்துக் கொள்ள வேண்டு மென்பதுதான் அவர்கள் கொள்கை.

பம்பாய் நகரத்தில் நடக்கும் போராட்டமானது, ராஜ்யங்கள் அமைக்கும் விஷயமான போராட்டமானது குஜராத்தி மக்களுக்கும் மகாராஷ்டிர மக்க ளுக்கும் நடக்கும் போராட்டமல்ல. பம்பாயை பெரும் முதலாளிகள் கையில் விட்டு விடுவது என்ற காங்கிரஸின் ஒரு பிற்போக்கான கொள்கையின் காரணமாகவே பெரும் முதலாளிகளுக்கும் தொழிலாள வர்க்கத்திற் கும் நடக்கும்படியான போராட்டமாகும். அந்த கொள்கைதான் எஸ்.ஆர்.வி. ரிப்போர்ட்டின் அடிப்படை, காங்கிரஸ் கமிட்டியும் அதைத்தான் தீர்மானித்திருக்கிறது. அது அல்ல இன்று பிரச்னை. ஜனங்கள் சம்பந்தப் பட்டமட்டில் காங்கிரஸ் இம்மாதிரி ராஜ்ஜிய புனரமைப்பு விஷயத்தில் ஒருவரின் மேல் இன்னொருவரைத் தூண்டி விடுவது சரியல்ல என்பதே என்னுடைய, என் கட்சியினுடைய கருத்து. ஆகவே, நீங்கள், காங்கிரஸ்காரர்கள், சிருஷ்டித்து அனுஷ்டிக்கும் கொள்கையின் காரணமாக எழுந்திருக்கும் தகராறுகளையும் மனக்கசப்பையும், நாங்கள்—கம்யூனிஸ்டுகள்—சமாளித்து ஆகவேண்டியதாக இருக்கிறது. நீங்கள் அதை சமாளிக்க முடியாதென் பது திண்ணம். சமாளிக்கும் சக்தி இருந்திருந்தால், முன்பே நீங்கள் எல்லோரும் ஒற்றுமையாக, சமாதானமாக போய் இருப்பீர்கள். பணம் பள்ளி கோவிந்த மேனன் தற்போது பேசுவதுபோல் உங்களை எதிர்த்து பேசிக்கொண்டு இருக்கமாட்டார்கள். நீங்களும் இப்படி இங்கே பேசிக் கொண்டிருக்கமாட்டீர்கள். ஒரே குரலில் பேசி இருப்பீர்கள். அப்படி பேசுவதற்கு விருப்பம் இடையாது. அதற்கான ஒரு கொள்கையும் உங்களி டத்தில் இடையாது. உங்கள் கட்சிகாரர்களை ஒற்றுமைப்படுத்தவும் முடியவில்லை 12-10 p.m.

[Sri P. Ramamurthi] [24th November 1955

அப்படி பேசுவதற்கு வேண்டிய ஒரு திறமையும் இடையாது. அதற்கு வேண்டிய கொள்கையும் இடையாது. நீங்கள் அனுஷ்டிக்கும்படியான கொள்கையின் விளைவால் நாட்டில் மேலும் சீர்குலைவு ஏற்படுமேயல்லாது ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது. உங்களால் கட்சிக்குள்ளேயே ஒற்றுமையை ஏற்படுத்தமுடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் எங்களை நியாயம் பேசச் சொல்லுகிறீர்கள். நாங்களும் நியாயம் சொல்லுகிறோம். என்ன நியாயம் சொல்லுகிறோம்? முதன் முதலில் ஜனங்களிடத்தில் இப்போது, இருக்கும்படியான மனக் கசப்பை போக்க உதவி செய்யவேண்டுமென்று சொல்லுகிறோம். எப்படிப் போக்குவது? இந்தப் பிரசினையை தீர்ப்பதில் காங்கிரஸ் மேலிடம் கடைசியில் எந்தப் பக்கத்தில் செல்வாக்கு அதிகமாக இருக்கிறது என்பதைப்பொருத்து நிர்ணயிக்கும்படி விட்டு விடுவதற்கு பதிலாக, மலையாள மக்களும் தமிழ்நாட்டு மக்களும் சேர்ந்து, மக்களுடைய ஒற்றுமையின் விளைவாக பிரசினைக்கு முடிவு காண வேண்டும். இது சாத்தியமில்லை என்று மற்ற கட்சிகள் அபிப்பிராயப் படலாம். தமிழ் மக்களும் மலையாள மக்களும் வேறுனவர்கள். ஒருவருக்கொருவர் சண்டை போடுபவர்கள் என்ற மனோபாவம் மற்ற கட்சிகளுக்கு இருக்கலாம். ஆனால் கம்யூனிஸ்டு கட்சிக்கு அப்படிப்பட்ட அபிப்பிராயம் இடையாது. நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு மொழிகளை பேசக்கூடிய மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது சாத்தியம் என்று நாங்கள் கருதுகிறோம். அதை ஏற்படுத்துவது எப்படி? இன்றைக்கு மக்களிடையே இருக்கும்படியான மனக்கசப்பை தீர்த்துவிட்டு, இந்தப் பிரசினையை இப்போது அவர்கள் அணுகும் முறைக்கு பதிலாக, வேறு முறையில் அணுகவேண்டிய மனோபாவத்தை சிருஷ்டிக்க வேண்டுமென்று கூறுகிறோம். அதை சிருஷ்டிக்கத்தான் வழியும் சொல்லுகிறோம். தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய மக்களைப் பொறுத்த வரையில், நாம் இந்தப் பிரசினையை எப்படித் தீர்ப்பது? கிராம வாரியாக இருக்கும் படியான தமிழ் மக்களின் கணக்கை எடுத்துக் கொள்ளுவது அதே சமயத்தில் இன்றைக்கு ஜனங்களிடத்தில் ஏற்படக்கூடிய பீதிகள் இருக்கின்றனவே, அதாவது நம் ராஜ்யத்தின் பொருளாதாரம் என்ன ஆகிவிடுமோ, மற்ற விஷயங்கள் என்ன ஆகிவிடுமோ என்பது சம்பந்தமாக ஏற்பட்டிருக்கக்கூடிய பீதிகள் அவை நியாயமானது, மேலும் அவற்றைக் களைப்பியது காங்கிரஸ் தான் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அவற்றையும் கணக்கில் எடுத்துகொண்டு இந்தப் பிரசினையை தீர்ப்பது சாத்தியம். அந்த முறையில் ஜனங்களை அணுகவேண்டும். இந்தக் கண்ணோட்டத்துடன் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது நம் கடமை. அதே மாதிரி மலையாள மக்களிடத்திலும் economic life line, என்பது போன்ற பேச்சுக்களால் பிரயோஜனம் ஏற்படாது. தமிழர்கள் மெஜாரிட்டியாக வசிக்கும் பிரதேசம் அடங்கியிருக்கிறதா என்பதை கவனிக்கவேண்டும், அதே சமயத்தில் நமக்கு பொருளாதார வசதி இருக்கின்றனவே அவைகளும் கைவிட்டு போகாமல் அதற்கு வேண்டிய வசதிகளை எப்படி தேடுவது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பிரசினையை அணுகவேண்டும். இந்த முறையில் பிரசினையை அணுகி மலையாள மக்களிடையே இப்போது இருக்கும்படியான மனோபாவத்தை மாற்றவேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். காங்கிரஸ்காரர்களை கேட்டுக்கொள்ளுகிறோம், இந்த பிரசினையை தீர்க்கவேண்டுமென்றால், இந்த இரண்டு விஷயத்தையும் கவனத்தில் வைத்துக்கொண்டு, மலையாள மக்களிடமும், தமிழ் மக்களிடமும் ஒற்றுமை மனோபாவத்தை உண்டாக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒற்றுமையை உண்டாக்க இங்கே இருக்கக்கூடிய சகல கட்சிகளும் உடன்படவேண்டுமென்று கூறுகிறோம். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியும், மலையாள பிரதேச காங்கிரஸ் கமிட்டியும் இரண்டுமாக சேர்ந்து இப்படிப்பட்ட மனோபாவத்தை உண்டாக்க முயற்சி செய்யட்டும். அப்படி அவர்கள் முயற்சி செய்யாமல் போனாலும், தமிழ் நாடு கம்யூனிஸ்டு கட்சியும், மலையாள கம்யூனிஸ்டுக் கட்சியும் இந்த மனோபாவத்தை உண்டாக்கச் செய்யும் முயற்சிகளுக்கு இடைஞ்சல்களாவது செய்யாதீர்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். இன்றைக்கு நீங்கள் செய்யும் பிரசாரம் மக்களிடையே மனக்கசப்பை உண்டாக்கியிருக்கிறது. இருதரப்பு மக்களுக்கும் மனக்கசப்பு ஏற்படாமல் இருக்கக்கூடிய வகையில் இந்தப்

24th November 1955] [Sri P. Ramamurthi]

பிரசினையைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டும். இரு தரப்பினருக்கும் நியாயம் பிறக்கக்கூடிய வகையில் தீர்க்கவேண்டுமென்பதில் அக்கறை இருக்குமேயானால், இப்படிப்பட்ட ஒற்றுமை மனோபாவத்தை உண்டாக்க நாட்டில் இருக்கக்கூடிய கட்சிகள் ஒன்றுகச் சேரவேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம். அப்படிச் செய்தால் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் மனோபாவம் ஏற்படும். அந்த காலக் கட்டத்தில் "எனக்கு," "உனக்கு" என்ற எண்ணம் போய் அதற்கு பதிலாக தமிழ் மக்கள் வாழவேண்டும், தமிழ் மக்கள் வளரவேண்டும். கேரள மக்கள் வாழவேண்டும், கேரள மக்கள் வளரவேண்டும், இன்னும் எல்லோரும் வளர்ந்து இந்த நாடு வளர வேண்டும், எல்லோரும் ஒட்டிக்கொண்டிருக்கிற இந்த தேசம் வளர வேண்டுமென்ற புதிய மனோபாவம் வளர உதவிகரமாய் இருக்கும்.

(At this stage, the Speaker resumed the Chair.)

அப்படிப்பட்ட முறையில் இன்றைக்கு பிரசாரம் செய்வதற்கு பதிலாக, வக்கீல் வாதத்தை இளப்புவதால் இந்தப் பிரசினை தீர்க்கப்படப்போவ தில்லை, ஆகவே நான் கொடுத் திருக்கக்கூடிய திருத்தப்படி, இப்படிப் பட்ட மனோபாவத்தை உண்டாக்க சகல கட்சியும் உதவி செய்ய வேண்டும், அதே சமயத்தில் இந்த பிரிவினை பிரசினை நான் கூறிய அடிப்படையில் தீர்க்கப்படவேண்டுமென்பதுதான். கடைசியில் எந்த machinery ஏற்படுத்தப்பட்டாலும் சரி Boundary Commission ஏற்படுத்தப்படுகிறதா, அல்லது அரசாங்க ராஜ்யங்களே தங்களுக்குள் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கப் போகிறதா என்பதைப்பற்றி அல்ல நம் கவலை, அது அல்ல நம் பிரசினை, ஆனால் அவற்றின் அடிப்படை என்ன என்பதுதான் பிரசினை. இந்த அடிப்படையில் தீர்த்தாகவேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். காங்கிரஸ்காரர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இஷ்டப்படி நீங்கள் வோட்டுப் போடலாம் என்று சொல்லி யிருப்பது, ஜனங்களிடத்தில் நாங்கள் இப்படி வோட்டுப்போட்டோம் என்று சொல்லுவதை தவிர, அதன் விளைவாக இந்தப் பிரசினை தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை உண்டா? இங்கிருக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கோ, அல்லது அங்கத்தினர்களுக்கோ நிச்சயமாக அந்த நம்பிக்கை இடையாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தப் பிரசினை தீர்க்கப்படவேண்டு மென்றால், எப்படி அணுகுவது என்று புதிய முறையை வகுத்துக் கொள்ள நீங்கள் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு வதுடன், நான் கொடுத்திருக்கும் திருத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதை ஏற்றுக்கொள்ளாமற் போனால், கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட மட்டில் எங்களது நிலை என்ன என்பதையும் சொல்லிவிடுகிறேன். நாங்கள் எங்கள் திருத்தத்தை வற் புறுத்துகிறோம். அது ஏற்றுக்கொள்ளப்படாத காலத்தில், ஸ்ரீ கருத்தி திருமன் கொடுத்திருக்கும் திருத்தத்தை, அதாவது பொதுவாக கேரள, கர்னாடக தமிழ் ராஜ்யங்கள் ஏற்படுத்தவேண்டும், அவசியமானால் இவற் றின் எல்லையில் சில மாறுதல்கள் செய்து ஏற்படுத்தவேண்டும் என்று கூறும் திருத்தத்தை, நாங்கள் நியாயமான திருத்தம் என்று கருது கிறோம். அதற்கு நாங்கள் ஆதரவு கொடுக்கிறோம். சென்னை ராஜ்யம் என்ற பெயரை தமிழகம் என்று மாற்றவேண்டும் என்ற திருத்தமும் நியாயமானது. அதில் யார்க்கும் ஆட்சேபனை இருக்கமுடியாது. அப்படி மாற்றுவதிலும் கஷ்டம் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே அந்த திருத்தத்திற்கும் நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். பாக்கியிருக்கக் கூடிய திருத்தங்களில் மொழி வழி அம்சமே இல்லை. அவைகள் விவகா ரத்தை வளர்க்கும்படியான திருத்தங்களே தவிர, விவகாரத்தை தீர்க்கப்போவதில்லை. ஆகவே அந்தத் திருத்தங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் கம்யூனிஸ்டுக் கட்சி வோட்டுப் போடப் போவதில்லை, சும்மா இருக்கப்போகி றோம். எங்களுடைய திருத்ததை வற்புறுத்துகிறோம். அதை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக காங்கிரஸ் கட்சி தலைவர்களுக்கு நான் கூற விரும்புகிறேன். காங்கிரஸ் காரிய கமிட்டி அங்கத்தினரான ஸ்ரீ காமராஜ நாடார் இங்கே யிருக்கிறார். அவரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். விவகாரத்தை தீர்க்க

[Sri P. Ramamurthi] [24th November 1955

இதைத் தவிர வேறு வழியில்லை என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியும், காங்கிரஸ் காரிய கமிட்டிக்கும் தெரியும். ஆகவே அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, இந்தப் பிரச்னையில் "நமக்கு" "அவர்களுக்கு" என்ற மனோபாவத்தை விட்டுவிட்டு, விவகாரத்தை தீர்க்க நாங்கள் சொல்லும் நியாயமான யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்ற விஷயங்களில் நாங்கள் சொன்னது நியாயமான யோசனை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் கூட ஸ்ரீ வி. கே. பழனிசாமி கவுண்டர், ஆரம்ப முதற்கொண்டே கம்யூனிஸ்டு கட்சி எல்லைகள் சம்பந்தமாக அனுஷ்டிக்கும் கொள்கை நியாயமான கொள்கை என்று ஒப்புக்கொண்டிருக்கிறார், ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. இன்னும் பல காங்கிரஸ்காரர்களும் இதயத்தில் ஒப்புக்கொள்ளுகிறார்கள். நேர்மையுள்ளம் படைத்தவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையில் வீண்கட்சி வீம்பு வேண்டாம், விதண்டவாதம் வேண்டாம், இது மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை. இந்த பிரச்னையில் எங்கள் நியாயமான கொள்கையை ஏற்றுக்கொண்டு, திருத்தத்தை நிறைவேற்றுங்கள். பாக்கி திருத்தங்களை வற்புறுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கத்தை சேர்ந்தவர்களும் இதற்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பம்.

12-20 p.m. SRI A. RATNAM : On a point of order, Sir. I have not been given an opportunity to speak. As explained to you in person in your Chamber, I request that I may be given time. As a mark of protest, I am walking out. (The hon. Member then walked out of the House.)

* SRI O. KORAN: മിസ്റ്റർ സ്പീക്കർ, സർ, ബഹുമാനപ്പെട്ട പ്രതിപക്ഷനേതാവു് പല കാര്യങ്ങളെപ്പറ്റിയും പറഞ്ഞു. എന്നാൽ അതിപ്രധാനമായ ഒരു കാര്യത്തെപ്പറ്റി അദ്ദേഹത്തിന്റെ പ്രതിപ്രായമെന്തെന്നറിഞ്ഞാൽ കൊള്ളാം. സംസ്ഥാനപുനസ്സംഘടനാകമ്മീഷന്റെ നിർദ്ദേശത്തിനെക്കുറിച്ചു ഇന്ത്യയിലെങ്ങും വളരെയധികം പ്രക്ഷോഭണങ്ങളും വാഗ്വാദങ്ങളും നടന്നുകൊണ്ടിരിക്കുമ്പോൾ അവസാനതീരുമാനത്തെപ്പറ്റുകുന്നതിനു് പണ്ഡിറ്റു നെഹ്രു അടുത്തിയ ഒരു കമ്മറിയെ മാത്രമാണു് ചുമതലപ്പെടുത്തിയിട്ടുള്ളു. ആ നടപടിയെപ്പറ്റി ബഹുമാനപ്പെട്ട പ്രതിപക്ഷനേതാവിന്റെ അഭിപ്രായമെന്തെന്നറിഞ്ഞാൽ കൊള്ളാം.

MR. SPEAKER : He wants the Leader of the Opposition to say whether he has got any opinion regarding the Committee that is formed by the Central Government.

SRI P. RAMAMURTHI : The Central Government has not formed any Committee. Only a sub-committee has been formed by the Congress High Command.

SRI V. BALAKRISHNAN: கனம் அங்கத்தினருக்கு புதுக்கோட்டை சமஸதானத்தல், எபபடி அட்டகாசம் செய்யும் கிராம உத்தியோகஸ்தர்களின் மேல் நடவடிக்கை எடுககப்பட்டது என்பதைத் தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அங்கத்தினர் தெரிவிப்பது point of order அல்ல. புதுக்கோட்டை சமஸதானத்தில நிறைய அயோகிய கிராம உத்தியோகஸ்தர்களின்மேல நடவடிககை எடுககப்பட்டிருக்கிறது. கிராம உத்தியோகஸ்தர்களின்மேல் குற்றஙகூறி புகார் மனு வந்தால், உடனே அந்த உத்தியோகஸ்தர்களை 20 மைலுக்கு அப்பாலுள்ள இடத்திற்கு மாற்றுகிறோம். பிறகு தான் அவர்பேரில் நடவடிக்கை எடுப்போம். இப்படிச் செய்ததினால் கிராம ஜனங்களுக்கு, இவ்வுத்தியோகஸ்தர்களால் ஒரு தீங்கும் இல்லாமலிருந்தது. குடியானவர்கள், இந்த கிராம உத்தியோகஸ்தர்களைத்தான் எல்லா காரியங்களுக்கும் எதிர்பார்கக்கூறார்கள். கிராமவாசிகள் தினமும், இவர்களைத்தான் பார்கக்கூறார்கள். இப்பேர்பட்ட உதயோகஸ்தர்கள், அகரமம செய்யும்போது அவர்களை வேறு இடத்திற்கு மாற்றுமல் இருந்தால், மக்கள் எப்படி பாதுகாக்கப்படுவார்கள், எப்படி இந்த ராஜ்யத்தை ராம ராஜ்யம் என்று

சொல்லமுடியுமென்று கேட்கிறேன். மந்திரிகள் அதிகாரதத்தில் இருக்கிறார்கள, பிறகு கொஞ்சநாள் கழித்து, அவாகளை அந்த அதிகாரத்திலிருந்து மாற்றவிடுகிறார்கள். பெரிய பெரிய அதிகாரிகள்கூட மாற்றப்படுகிறார்கள். East India Company காலத்தில் ஏறபடுத்தபபட்ட இந்த கிராம உத்தியோகஸ்தாகளை, எந்த அக்கிரமம் செய்தாலும் மாற்றுவது இல்லை என்றால், அவர்கள் இஷ்டம்போல் நடககவிடுவதென்றால, எபபடி இந்த ராஜ்யம் ராம ராஜ்யம் எனறு அழைப்பதற்கு ஏற்றதாக உளளதென்று கேட்கிறேன. எனக்கு கிராம உதயோகஸ்தர்களின்பேரில் எந்த விதமான வெறுப்பும் இலலையது. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பரம்பரையாக நாங்கள் அனுஷ்டித்து வந்த கொள்கையைத்தான சொல்லுகிறேன். கிராம ஜனங்கள் புகார்செய்து மனுப் போட்டால், உடனே தன்னை மாற்றி விடுவார்கள் எனற பயம் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இருக்குமானால், அவர் எந்தவிதமான அயோக்கியத்தனமும் செய்யமாட்டார், ஜனங்களும் நம்பிக்கையுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவார்கள் ரெவினியு மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இவர்களுக்கு எல்லாம் சமபளம் குறைவு. ஒரு ஊரிலிருந்து இன்னொரு கிராமத்துற்கு மாற்றினால் அவர்களுக்கு ரொம்ப அசௌகரியங்கள ஏற்படும் என்று. அப்படி இருக்கும்போது என் இவர்களை ஒழுங்காக நடக்கசகூடாது ? ஒழுங்காக நடந்து கொணடால் அவர்களை மாறறவே மாட்டார்கள். இப்போதுதான் இங்கு தமிழில் நிர்வாகம் நடத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். புதுக்கோட்டை சமஸ்தானத்தில 60 வருஷங்களுக்கு முனபே தமிழில் நிர்வாகம் நடத்தப்பட்டது. அந்த காலத்தில, குடியானவர்கள், புகார் மனு கொடுத்ததின்பேரில் ஒரு கிராம உத்தியோகஸ்தர் நீக்கப்பட்டார். ஆனால் அந்த கிராம உத்தியோகஸ்தருக்கு சொந்தக்காரர்களும் வேண்டியவர்களும் அவரை மறுபடியும் உத்தியோகத்தில் அமர்த்தவேண்டுமென்று, ராமாயணம் மாதிரி ஒரு காவியம் எழுதிக்கொண்டு திவானிடம் வந்தார்கள் உடனே, திவான், அவாக்கு திருமப உத்தியோகம் கொடுக்க மறுத்து, "வருத்த கொள்ளு மூளைக்குமா பர்த்திரப்பு வேலை கிடைக்குமா" என்று காவிய ரூபமாகவே பதில் சொல்லி இருக்கிறாகள். இந்த சமஸதானத்தைப்பற்றி பெருமையாக சொல்லவேண்டுமென்று சொல்லவில்லை. சின்ன ராஜ்யமாக இருந்தாலும் மக்களுக்கு எந்தெந்த விதத்தில் சௌகர்யங்கள் செய்திருக்கிறார்கள் என்பதைக் காடடவே சொன்னேன. கனம் மந்திரி அவர்கள், இவ்விதமான நடவடிக்கைகளுக்கு ஏறபாடுகள் செய்து, மக்களுக்கு நல்ல சௌகர்யங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றொரு முக்கிய விஷயம் இக்கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இவர்களுக்கு எழுதுவதற்கும், சர்க்காருடைய கடிதப்போக்குவரத்திற்கு அவ்வப்போது பதில்கள் எழுதுவதற்கு போதுமான காகித சப்ளை சர்க்காரிடமிருந்து கிடையாது. அவர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றி சர்க்காருக்கும் மேல் உத்தியோகஸ்தர்களுக்கும் எழுதி தெரியப்படுத்த சொந்த பணம் போட்டு காகிதம் வாங்குகிறார்கள். கனம் மந்திரி வர்கள், இதை கவனித்து, அவர்களுக்கு வேண்டிய காகித சப்ளை செய்ய வேண்டுமெனறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member's time is up.

SRI V. BALAKRISHNAN: I have got to say a lot. I may be allowed at least five more minutes. 10-40 a.m.

DEPUTY SPEAKER: The hon. Member is repeating the same view point.

SRI V. BALAKRISHNAN: I am repeating because the defects I point out are not remedied.

DEPUTY SPEAKER: The hon. Member should finish his speech in two minutes.

[25th November 1955

SRI V. BALAKRISHNAN : முன்புகூட சொல்லி இருக்கிறேன். மேலே இருந்து அனுப்பப்படும், சில கடிதப் போக்குவரத்து ரிக்கார்டுகளைக் கிழித்து எறிந்து விடுகிறார்கள், மேலே இருக்கும் உத்தரவுகள் தான். அவ்வித ரிக்கார்டுகளை நான் பார்க்க நேர்ந்த போது சில விசித்திரமான ஆங்கில வார்த்தைகளைப் பார்த்தேன். Corrugated iron sheets are required for windows என்பதற்குப் பதிலாக, corrugated iron sheets are required for windows என்று எழுதப்பட்டிருந்தது. இன்னும் purchase என்பதற்கு பதிலாக purpose என்றும் buy என்பதற்குப் பதிலாக by என்ற வார்த்தையும் கண்டிருந்தது. ஆனால் நல்ல வேளையாக இந்த தப்புகளை கண்டுபிடித்து திருத்தி விட்டார்கள். இவ்வித ஆபாசங்களை நடக்காமல் கனம் மந்திரி அவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தென்னாட்டவர்களுக்கு இங்கு நல்ல தொழிற்சாலைகளை கட்டி நடத்துவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறதென்று சர்க்காரும் மற்றவர்களும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் தென்னாட்டில் ஒரு சிறு தொழிற்சாலை ஏற்படுத்த வாய்ப்பு வந்தபோது, அந்த வாய்ப்பை தென்னாட்டினருக்கு மறுத்துவிட்டிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்று உங்களுக்குச் சொல்லுகிறேன். Soda ash செய்வதற்காக, தென்னாட்டில் ஒரு தொழிற்சாலையை திருநெல்வேலி ஜில்லாவில் கட்ட சர்க்கார் முடிவு செய்தது. அந்த ஜில்லாவில் அதற்கு வேண்டிய மூலப் பொருள்களும் இருக்கின்றன. அந்த factory-யைக் கட்டுவதற்காக இங்கே இருக்கும் நண்பர்கள், தங்களுக்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்றும், அதற்கான சௌகரியங்கள் செய்துகொடுக்கவேண்டுமென்றும், சர்க்காருக்கு ஒரு மனுக் கொடுத்தார்கள். அதே நேரத்தில் சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த படே படே பணக்காரர், தாரங்கதரர் என்பவரும் மனு கொடுத்தார். இந்த இரண்டு நபர்களில் இங்கே இயங்கக்கூடிய திருநெல்வேலிக்காரர், தென்னாட்டுக்காரர், மனு புறக்கணிக்கப்பட்டு, அந்த சௌராஷ்டிரக்காருடைய மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மேலும், அந்த நபருக்கு சர்க்காரால் 20 லட்ச ரூபாய் பண உதவி செய்யப்பட்டிருப்பதோடுமட்டுமில்லாமல், அவருக்கு வேண்டிய எல்லாவித உதவிகளையும் உடனடியாக செய்துகொடுக்க, ஜில்லா கலெக்டருக்கு தந்திக்கம்பி தட்டப்பட்டிருக்கிறது. நான் அந்த சௌராஷ்டிரக்காரர் பேரில் யாதொரு துவேஷமும் கொண்டு சொல்லவில்லை. நம் நாட்டுக்காரர், தென்னாட்டவர் எவராலும் அந்த தொழிலை ஏற்று நடத்த முடியாமற் போனால், சௌராஷ்டிரக்காருக்கு தொழில் நடத்த அனுமதியளிப்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், நமது நாட்டவர், அதுவும் பழைய காலத்திலிருந்தே தொழில் நடத்திக்கொண்டிருப்பவர், அனுபவம் பெற்றவர், அவர் அந்த தொழிலை நடத்துவதற்கு அனுமதி கோரியிருக்கும் மனு புறக்கணிக்கப்படுகிறது என்றால், அதற்கு தகுந்த காரணங்களை ஜனங்களுக்குச் சொல்லியாக வேண்டும். அவர் மனுக் கொடுத்ததோடுமட்டுமல்ல, இங்கே இந்த சபையிலுள்ள 20, 25 M.L.A.-க்கள் அவருக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று சர்க்காரிடம் ஒரு மனுக்கொடுத்தார்கள். இந்த மனுவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. நமது கனம் நிதி மந்திரி அவர்கள் இருக்க இந்நிலையில், இப்படிப்பட்ட அநீதி ஏற்பட்டுக்கொண்டிருப்பதை அவர் அனுமதிக்கக்கூடாது. அப்படி ஏற்படாமலிருக்க அவர் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மத்திய சர்க்காரின் அனுமதியின் பேரில், சௌராஷ்டிரக்காரர் தொழில் நடத்துகிறார், இங்கேயுள்ள மந்திரிகள் ஒன்றும் செய்யமுடியாது என்ற நிலைமை ஏற்பட்டதென்றால் அதை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தி, மந்திரிகள்பேரில் யாதொரு குற்றமும் இல்லை என்பதை நிரூபித்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, வாலிபர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்கும்படியான நேரத்தில் சம நீதி வடிவ சமுதாயத்தை (socialistic pattern of society) அமைக்கும் கொள்கையை அனுஷ்டிக்கவேண்டும். சாதாரணமாக, உத்தியோகங்களுக்கு மனுக்கொடுக்கும் வாலிபர்கள் இரு வகைகளாக இருக்கின்றனர். வாழ்க்கையில் எந்த விதமான வசதியும் இல்லாத வாலிபர்கள் ஒரு வகை. மற்றொரு வகை, மனுக் கொடுக்கும் வாலிபர்கள் தகப்பனார் பெரிய உத்தியோகத்தில் இருப்பார், அத்துடன் பணக்காரர்

25th November 1955] [Sri V. Balakrishnan]

களாகவும் இருப்பார்கள். இந்த இரண்டு வகையான வாலிபர்களும் உத்தியோகங்களுக்கு போட்டியிடும்போது, என்ன நடக்கிறதென்றால், உண்மையாக வாழ்க்கையில் எந்த விதமான வசதியுமில்லாத வாலிபர்களுக்கு உத்தியோகம் கிடைப்பதில்லை. பணக்காரர் பிள்ளை, தகப்பனார் எந்த தொழிலிலாவது மாதம் ரூ. 300, ரூ. 400 சம்பாதித்து கொண்டிருப்பார், அந்த மாதிரியான வாலிபர்களுக்குதான உத்தியோகம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. வாலிபர்களின் மார்க்குகளுக்குத் தகுந்தபடி உத்தியோகம் அளிக்கப்படுகிறது என்று கூறப்படலாம். அந்த முறையில் பணக்காரப் பிள்ளைகள் உத்தியோகங்கள் பெற உரிமையுண்டு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் நான் கூற விரும்புவதெல்லாம், பணக்காரப் பிள்ளைகள் உண்மையாகவே 80 சத விகித மார்க்குகள் வாங்கியிருந்தாலும், அவர்களுக்கு பண வசதி இருப்பதால், அல்லது தகப்பனார்கள் சம்பாதிப்பதால், உடனடியாக அந்த பிள்ளைகள் உத்தியோகத்திற்கு போகவேண்டிய அவசியமில்லை. கொஞ்ச காலத்திற்கு அவர்கள் காத்திருக்கலாம். ஆகவே, இந்த மாதிரியான பிள்ளைகளுக்கு உடனடியாக உத்தியோகங்களை கொடுப்பதைவிட, தாய் தந்தையற்ற பிள்ளைகள், வாழ்க்கையில் வேறு எந்த வசதியும் இல்லாத பிள்ளைகள், அனுதையாக இருக்கும் பிள்ளைகளுக்கு, அவர்கள 60 சத விகித மார்க்குகள் வாங்கியிருந்தாலும், சலுகை காட்டப்பட்டு உத்தியோகம் கொடுக்கப்படவேண்டும். அப்படி கொடுக்கப்படுவதில் தவறு என்ன என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு வாலிபனிடமிருந்து வந்துள்ள விண்ணப்பம் ஒன்றை வாசித்துக்காட்ட விரும்புகிறேன். இதைப்போன்று, எல்லா மெம்பர்களுக்கும் விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. நேற்று எனக்கு வந்த அந்த விண்ணப்பத்தை வாசிக்கிறேன் :—

> "என்னுடைய தந்தை என்னை மிகவும் கஷ்டப்பட்டு B. A. படிக்க வைத்தார். படிப்பு முடிவதற்குள் இறந்து போனார். நானும், எனது தாயும் இரண்டு சகோதரிகளும் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். எங்கள் மீது இரக்கம் கொண்டு எங்களை காப்பாற்ற உதவி செய்யுங்கள். நான வைசிய குடும்பத்தைச் சேர்ந்தவன். எனது நிலையை கூறினேன். கையிலிருந்த பணமும் செலவழிந்து விட்டது. எனது நிலையை கவனிக்க யாருமில்லை.

என்று கூறும் மனுக்கள் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, பொருளாதார வசதியிருக்கும் வாலிபர்களின் விண்ணப்பங்களை பின்னால் தள்ளிவிட்டு, இந்த மாதிரியான வாழ்க்கையில் வசதியில்லாத வாலிபர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதுடன், அவர்களுக்கென்று ஒரு நிதி ஏற்படுத்தி உதவி செய்தால் தான் உண்மையாகவே சம நீதி வடிவ சமுதாயத்தை நிறுவ முடியும் என்று கூற ஆசைப்படுகிறேன். பணக்காரப் பிள்ளைகள் காத்திருக்கலாம், வேலையில்லாமல் 5 வருஷம் வீட்டில் திண்டிலும், மெத்தையிலும் தூங்கிக்கொண்டிருக்கலாம் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI Y. MANJAYA SHETTY : Mr. Deputy Speaker, Sir, in supporting the supplementary demands, I wish to say a few words.

My Friend Mr. Vinayakam who initiated the debate drew the attention of the Government to the desirability of, and necessity for, bringing forward a comprehensive land legislation. I also share his view. The representatives of South Kanara have been agitating for a piece of legislation, assuring security of tenure and fair rent for a pretty long time. But our efforts have not fructified. Eviction of tenants are taking place even now. Whenever the question of land legislation was raised in this House, the Hon. Minister for Land Revenue has been assuring us that it will be brought before this House ' very shortly '. I am sorry his assurances and promises

are not followed up by concrete action. I am told that some interested persons are moving the Government to exclude South Kanara from land legislation if the Government were to introduce one such in view of the impending reorganization of the States. I may inform the Government that the people of South Kanara are intensely eager for such a legislation and the members of this House coming from that district also are for it. I hope the Government will not fall a victim to the vicious move of some interested persons and will not exclude South Kanara from the scope of such a legislation.

In the matter of supply of electricity to rural areas, no appreciable progress has been made in South Kanara district. I am sorry to say that only one village in Coondapur taluk has the benefit of electric power. I am glad to say that response in that one village has been very good. There has been a demand for extension of electricity to other places like Koteswara, Basour Gangolly, Byndoor in Coondapur taluk, but no steps have been taken by the Government to meet that demand. I wish the Government take early steps to supply electric power to these places.

The Central Government have taken full responsibility for meeting the cost of the West Coast Road from 1st April 1955. The progress of work of this road is not quite satisfactory. Many of the bridges proposed under the West Coast Road scheme, namely, Halady, Wandse and Jadkal have not yet been taken up. The putting up of these bridges will provide communication facilities in the Malnad area of South Kanara. I hope the Government will see that these bridges are put up as early as possible.

10-50 a.m. A few irrigation projects have been investigated in Coondapur taluk. But it is regrettable that not a single scheme has been taken up for execution. There are schemes in that taluk like the Kattenchote and Bijur in the National Extension scheme area of Byndoor which deserve special consideration at the hands of the Government.

In the matter of opening of high schools by local bodies, the Government have issued instructions to local bodies to open high schools only if the public come forward with the necessary buildings and furniture and if they deposit the necessary recurring cost. I feel that it is not the intention of the Government to commercialise secondary education by asking the people to deposit the recurring cost. It will be well and good if the public are asked to provide buildings and the like. But it would cause great hardship if the people are asked to deposit the recurring cost. Especially, it will be a great hardship to the people in Malnad areas where they are poor and backward. In the interests of affording facilities to the people of Malnad area for secondary education, it is better that the Government exempt those people from depositing the recurring cost. Though the Government have issued instructions to local bodies and aided institutions to grant Government scales of pay to the secondary school teachers, it is regrettable that the South Kanara

District Board has not paid the Government scales of pay to its secondary school teachers. It is said that though the District Board had asked the Government for permission to pay Government scales of pay, the Government have turned down the proposal several times. The present inefficiency in the secondary education sphere is entirely due to this distinction made in the scales of pay of secondary school teachers. I hope that in the interests of efficiency in the secondary education sphere the Government would permit the South Kanara District Board also to pay their secondary school teachers Government scales of pay. No doubt, the Government have announced the scheme of pension to elementary school teachers. I am told that though sanction was given long ago, most of the teachers who have retired from service have not got their pension. Instructions may be issued to pay the pension soon after retirement.

In the matter of Local Development Works, National Extension Service and Community Projects works in South Kanara, works are being held up for want of supply of iron and cement by the department. It would be better if the concerned department looks into the matter and sees that the iron, and cement are supplied as quickly as possible so that the amounts sanctioned for these schemes may not lapse. Apart from this, work is held up in the local development area also for want of an Additional Assistant Engineer. I understand that the District Collector has requested the Government to sanction an Additional Assistant Engineer, but no steps have yet been taken for sanctioning the same. Early steps may be taken and an Assistant Engineer be sanctioned so that all the developmental schemes in the district may be completed within the specified time. With the entrustment of the work of enforcement of Prohibition to the Police Department in South Kanara I am told, the jeeps that were formerly with the Prohibition department have not been handed over to the Police Department. This has really affected the enforcement of Prohibition to a great extent. Therefore, the jeeps may be handed over to the Police Department so as to enable them to carry on effective enforcement of Prohibition.

With these few words, I support the Demand.

10-55 a.m. **SRI A. RATNAM**: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த உப மான்ய கோரிக்கையின் மீது பேசுகிறபோது, ஆட்சியாளர்கள் மொத்தம் ரூ. 79,69,200 மான்யம் கோரியிருப்பதை நான் பார்க்கிறேன். இவ்வளவு பணமும் ஏழை மக்களுக்காக செலவிடப்படப் போகிறதா என்பதை நாம் இந்த சந்தர்பத்தில் கவனிக்கவேண்டும். அரசாங்கம் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களை கொண்டு இதை பார்க்கும் போது, மக்களுக்கு அத்தியாவசியமாக கருதப்படுகிற கல்வி வசதிக்காக ரூ. 10,100-ம் வைத்திய உதவிக்காக ரூ. 2.48,300-ம் சுகாதாரத்திற்காக ரூ. 6,61,300, கூட்டுறவுக்காக ரூ. 100-ம் கடன் வகைகளுக்கு ரூ. 100-ம் தான் கோரப்பட்டிருக்கிறது. இவைகளை கணக்கெடுத்துப் பார்த்தால், மொத்த மான்ய கோரிக்கையில் 10 சத விகிதம் கூட உருப்படியாக மக்களுக்கு சேரப்போவது கிடையாது என்பது தெளிவாகிறது. ஆனால் அதே நேரத்திலே "Capital Outlay on Industrial Development" எனற இனத்தில் ரூபாய் 17 லட்சமும், "Capital Outaly on road transport schemes" என்ற வகையில்

[Sri A. Ratnam] [25th November 1955

ரூ. 4,43,000-ம் "Capital Outlay on Civil Works-ன் கீழ் ரூ. 9,18,000-ம் Civil Works—Grants in Act"-ன் கீழ் ரூ. 24,57,700-ம் கோரப்பட்டிருக்கிறது. இவற்றைப் பார்த்தாலும்கூட மக்களுக்கு அத்தியாவசியமாக கருதப்படுகிற கல்வி போன்ற இனங்களுக்கு கோரப்பட்டிருக்கும் மான்யம் மிக மிகக் குறைவு என்பது நன்கு வெளிப்படுகிறது. கடன வேண்டும், நாங்கள் முன்னுக்கு வரவேண்டுமென்று பல ஏழை மக்கள், சிறு விவசாயிகள் கேட்கிறார்கள், சிறு கைத் தொழில்களை நடத்த கடன்வேண்டும், குடிசைத் தொழில்களை நடத்த கடன் வேண்டும் என்று ஏழை மக்கள் கோருகிறார்கள். அவர்களுக்கு கடன் உதவி செய்ய லட்சக் கணக்கில் பணம் ஒதுக்கப்படுகிறது, தாராளமாக கொடுக்கப்படவேண்டும். ஆனால் இந்தக கடன் இலாகாத்திற்கு ரூ. 10ம் தான் மான்யம் கோரப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று கூறப்படும் போது, உழவர்கள் முன்னேற்றத்திற்கும், தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டியது அரசாங்கத்தின் கடமை, ஆகவே, அந்த வகையில் அதிகமான பணம் ஒதுக்கப்பட்டு, செலவழிக்கப்படவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த 3½ வருடகாலமாக இங்கு M.L.A.ஆகஇருந்தும், கனம் அங்கத்தினர் Supplementary Grant எதற்காக, ரூ. 100 கோரப்படுவது ஏன், என்பதை புரிந்து கொள்ளாமல இருப்பதைப் பற்றி நான் மிகவும் வருந்துகிறேன்.

SRI A. RATNAM: ரூ. 100 Token Supplementary grant ஆக கனம் அமைச்சர் அவர்கள் கோருவது எனக்கு புரிகிறது. ஆனால் அதே சமயத்தில் ஒரு சில அம்சங்களுக்கு மட்டும் லட்சக் கணக்கில் மானயம் கோரும் போது, முக்கியமான அம்சங்களுக்கு ரூ. 100 கோருவதும், ஹரிஜன மக்கள் முன்னேற்றத்திற்கு மான்யம் கோராமல் இருப்பதற்கும் என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் கூறமுடியுமா? நான என்னுடைய 3½ வருஷ அனுபவத்தில் விஷயங்களைப் புரிந்து கொண்டுதான் பேசுகிறேன. ஆனால் கனம் அமைச்சர் அவர்களுக்கு நான பேசுவது புரியாமல் இருக்கலாம. நான் இந்த புள்ளி விவரங்களை எடுத்து சொல்லி பேசுவது எதற்கென்றால், ஆட்சியாளர்கள் ஏழைகள், எளியவர்கள் விஷயத்தில் அக்கறை செலுத்துவது இடையாது என்பதை விளக்கத்தான். எனக்கு முன்பு பேசிய தோழர் ஸ்ரீ ரத்தினசாமியும், ஸ்ரீ வெங்கடசாமி நாயுடுவும் சென்னையில பல சேரிகள் நிறைந்திருக்கின்றன, அவைகளைக் காண கண்கள் கூசுகின்றன, நகரத்தின் மத்தியில் அவமான சின்னங்களாக அமைந்திருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில், ஆட்சியாளர்கள சென்ற வருஷம் சேரிகள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ஒரு லட்ச ரூபாயை, செலவு செய்யாமல் மிச்சப்படுத்தி விடடிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இங்கே நமக்கு கொடுக்கப்படடிருக்கிற Audit Report ஐ பார்த்தால், Agriculture, Industries, Fisheries போன்ற இலாகாக்களுக்கு ஒதுக்கப்பட்ட பணங்களில் சுமார் 40 சத விகிதம் செலவழிக்கப்படாமல் மிச்சப படுத்தப் பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. அதே நேரத்தில் முதலாளிகளை பெருக்க வைக்கும்படியான ஆலைகளுக்கு உதவவும் நிலப் பிரபுக்களுக்கு உதவவும் மான்யங்கள் அதிகமாக கோரப்பட்டு செலவழிக்கப்படுகிறது. ஆனால் ஏழை மக்களின் அத்தியாவசியமான வசதிகளுக்கு ஒதுக்கப்படும் பணத்தில் 40 சத விகிதம் மிச்சப்படுத்தப்பட்டு திருப்பிக் கொடுக்கப்படுகிறது. ஹரிஜனங்களுக்காக சில பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டாலும், அவர்கள் அபிவிருத்திகாக ஒதுக்கப்படும் பணத்தில் எவ்வளவு செலவழிக்கப் படுகிறது, எவ்வளவு பணம் மிச்சப்படுத்தப்படுகிறது, எவ்வளவு பணம் அலுவலியமாக செலவழிக்கப்பட்டு மக்களுடைய வரிப் பணம் நாசமாக்கப்படுகிறது என்பதை பார்க்கும் போது, மிகவும் வேதனையாக இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் நாங்கள் கண்டது இதுதான். எங்கெங்கே குறைகள் இருக்கின்றனவோ, எங்கெங்கே மக்கள் துன்புறுத்தப் படுகின்றனரோ, எங்கெங்கே மக்கள் அவதிப்படுகிறார்களோ, எங்கெங்கே அதிகாரிகள் மோசமாக நடக்கிறார்களோ, அவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லி, கவனம் செலுத்தப்படவேண்டுமென்று சொன்னால், அமைச்சர்கள் எங்களை உதாசீனம் செய்கிறார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள்

25th November 1955] [Sri A. Ratnam]

சொல்லுவதை, நாம் கேட்பத என்று நினைக்கிறார்கள். இன்னென்ன இடங்களில் அக்கிரமங்கள் நடக்கின்றன என்று எழுத்து மூலமாக எடுத்துச் சொன்னாலும்கூட, பலன் கிடைப்பதில்லை இந்த ஆட்சியாளர்களிடமிருந்து. ஆட்சியாளர்கள் அதிகாரிகளை என் இப்படிச செய்கிறீர்கள் என்று கேள்வி கேட்பதுமில்லை. அதிகாரிகள மீது நாங்கள் குறைகூறினாலும், செல்வாக்கு மிகுந்த காங்கிரஸ்காரர்களை அவர்கள் பிடித்து நாங்கள் சொல்லுவது நிஜமாக இருந்தாலும்கூட, அது பொய்யாக்கப் படுவதோடு மட்டுமில்லாமல், எங்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவுக்கு ஆட்சியாளர்கள் வருகிறார்கள் என்றால், அது எவ்வளவு மிலேச்சத்தனமான காரியம் என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

இப்பொழுது காரியங்கள் சரியாக நடந்து வரவில்லை. தாழ்த்தப்பட்டவர் 11-01
களுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யவில்லை. எதாகிலும் காரியங் a.m.
கள் செய்ய வேண்டும் என்று கேட்டால் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். தாழ்த்தபபட்டவர்களுக்கு என்று தனியாக அலுவலகங்கள் இருக்க வேண்டும். அவர்களுக்கு என்று தனியாக பணத்தை ஒதுக்கி தனியாகவே ஆபீசர்களை நியமிக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தில் ஒரு அதிகாரி இருகிறார். அந்த ஆபீசர் யார்? இங்கு ஹரிஜனங்களுக்கு என்று ஒரு ஆபீஸ் வேலை செய்கிறதா? ஒரு வருஷத்திற்கு முன்னதாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியாக ஒரு ஆபீசர் இருந்தார். அதற்கு முன்பு கிரி என்ற ஆபீசர் இருந்தார். இப் பொழுது அவர் சென்று விட்டார். வட நாட்டிலிருந்து அவர் வந்திருந்தார். இம்மாதிரி காரியங்கள் எல்லாம் நடக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கப்படும் பணம் எல்லாம் வேறு இனங்களுக்குச் செலவு செய்யப் படுகிறது. இந்த சர்க்கார் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்காமல் மத்திய சர்க்காருக்குப் போங்கள் என்று தூண்டி விடுகிறார்கள. அப்படி போய் வருவதாக இருந்தால் சுமார் ஆறு மாதங்களாகின்றன. ஏற் கெனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணத்தைவிட ரூ. 150 குறைவாகக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். வீடுகள் கட்டுவதற்கு என்று ஒதுக்கப் பட்ட பணம் எல்லாம் வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுகிறது. இப்படி மற்ற இனங்களுக்கு செலவு செய்யப்படுவது மோசமான அம்சமாக இருக்கிறது. எந்த வகையில் செலவு செய்தாலும் அவைகள் ஹரிஜனங் களுக்கு செலவு செய்வதாகவே இல்லை. இதைப் பற்றி ஐந்தாண்டு திட்டத்தில் பல புள்ளிவிவரங்களை எடுத்துச் சொலலமுடியும். அவர்களுக்கு என்று ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டும் அவர்களுக்கு என்று தனியாக ஒன்றும் செலவு செய்யப்படவில்லை. திட்ட வட்டமாக அச்சடித்து கொடுத் திருக்கிறார்கள். அந்த புள்ளி விவரங்களிலிருந்து நன்றாகத் தெரியும். இந்த அரசாங்கம் ஹரிஜனங்கள விஷயத்தில் ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் கடன் கேட்டால் கிடையாது, பல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டால் உதவி செய்வதில்லை. குடிசைக் தொழில் அமைக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு உதவி அளிக்கப்படுவதில்லை. மின்சாரம் வேண்டும் என்றாலும் கிடையாது. யந்தரங்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும் எனறாலும் அதுவும் கிடையாது. எவைகளை கேட்டால் அதற்கு என்று ஒரு கமிட்டி அமைத்துக் கொண்டு சட்ட திட்டங்கள் அமைத்துக் கொண்டு கூட்டுறவு மூலமாக சொசைட்டிகள் அமைத்து ரிஜிஸ்தர் செய்து கொண்டு வந்தாலொழிய சலுகைகள் செய்ய முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். அதனால் அவர்களால் பயன் அடைய முடியாமல் போய் விடுகிறது அவர் களுக்கு என்று ஒதுக்கப்படும் பணம் ஹரிஜனங்களுக்கும், தொழிலாளி களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும், பாட்டாளி மக்களுக்கும் உதவி செய் வதற்குத்தான் அந்தப்பணம் எல்லாம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் பயன் அடைய முடியாமல் இருக்கிறார்கள். ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கும் பணம் எல்லாம் பெரும் முதலாளிகளும், பெரும் நிலச்சுவாந்தார்களும் தான் பலன் அடைகிறார்கள். எனக்கு நேரம் இல்லாத காரணத்தால் அதிகமாகச் பேச முடியவில்லை. ஆகவே காங்கிரஸ்காரர்களுக்கு ஏழை தொழிலாளர்கள் விஷயத்தில் மனப்பான்மை மாறவேண்டும் எதிர்க் கட்சி சொல்வதை விசாரணை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

செல்வாக்குள்ள காங்கிரஸ்காரர்களுடைய பேச்சைக் கேட்டு ஹரிஜனங்களுக்கும் தொழிலாள மக்களுக்கு பாட்டாளி மக்களுக்கும் தொந்தரவுகள் கொடுக்கக்கூடாது. கேடு விளைவிக்கக் கூடாது. அப்படியே நடந்து கொண்டு போனால் அது மோசமான நிலைமையில் கொண்டு போய் விடும் என்று எச்சரித்து என் வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

11-05 a.m. SRI M. PALANIYANDI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உப மான்ய கோரிக்கை மீது பேசும்போது நமது கனம் நிதி மந்திரி அவர்கள் ஒன்று சொன்னார். இந்த உப மானிய பட்ஜெட் விஷயத்தில் கண்டிருக்கும் விஷயங்களைப்பற்றி மட்டில் பேசவேண்டும் என்றும் அதற்கு அப்பால பேசக்கூடாது என்றும் சொன்னார். அதனால் சில விஷயங்களை மட்டும் எடுத்துச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. முதலாவதாக ஸ்ரீ கே. விநாயகம் அவர்கள் ஒன்று சொன்னார், வெகு நாட்களாகவே இங்கு ஒரு குறை இருக்கிறது. அதாவது நிலச் சீர்திருத்தம். அதைக் கொண்டுவரவேண்டும எனறு வெகு நாட்களாகவே பேசப்பட்டு வருகிறது. 1952-ம் வருஷம் முதற்கொண்டே நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். என்ன காரணத்தினாலோ அதைக்கொண்டுவராமல் காலம் தாழ்த்திக்கொண்டு வருகிறார்கள். அந்த நில சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவரவேண்டும் என்பதுதான் எங்களுடைய அவா. இந்த வருஷத்திலேயே சர்க்கார் அதைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யவேண்டும். வார வரம்பு நிர்ணயிக்கப்படவேண்டும். இதைக் கொண்டு வராததால் நாட்டில் இப்பொழுது கொந்தளிப்பு எற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் சர்க்கார் என்ன சொல்லுகிறார்கள் என்றால் அரசியல் சட்டதைத் திருத்த வேண்டியதாக இருக்கிறது என்று. அதனால் அரசியல் சட்டத்தை உடனடியாக திருத்தி அமைத்து இந்த நில சீர்திருத்தச் சட்டதை சீக்கிரத்தில் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது எங்களுடைய முதல் அவா.

இரண்டாவதாக ஜில்லாவாரியான நிர்வாகத்தைப்பற்றி சொல்லும் போது இப்பொழுது இருக்கும் நிலைமையைப்பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு கனம் ராஜா அவர்கள் நன்றாக எடுத்துச் சொன்னார். இது சம்பந்தமாக நான் ஒன்று சொல்லுகிறேன். கள்ளக்குறிச்சியில் பஞ்சாயத்து பிரசிடென்ட் அவர்கள் சுமார் 2.000 ரூபாய் வரையில் கையாடல் செய்திருக்கிறார். எந்தக் காரணத்தினாலோ அவர் மேல் நடவடிக்கை எடுக்காமல் அங்குள்ள நிர்வாகிகள் நடந்துகொண்டு வருகிறார்கள். அங்குள்ள காங்கிரஸ்காரர்களின் முயற்சியினாலும் பெரிய செல்வாக்குள்ளவர்களுடைய முயற்சியினாலும் அவர்மேல் நடவடிக்கை எடுக்கப் படாமல் இருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றுகூட புகார் வந்திருக்கிறது.

(ஸ்ரீ ஜி. கோவிந்தன் அவர்களுடைய குறுக்கீடல்)

DEPUTY SPEAKER : Order, order.

SRI G. GOVINDAN : அப்படி எங்கு நடந்திருக்கிறது எந்த ஜில்லாவில், கனம் மெம்பர் குறிப்பிட்ட காங்கிரஸ் மெம்பர் யார் என்பதைச் சொல்லவேண்டும்.

SRI M. PALANIYANDI : நான் சொல்லுகிறேன். திருச்சி ஜில்லாவில் ஸ்ரீரங்குடிக்கு பக்கத்தில் கள்ளக்குறிச்சியில் கிராம பஞ்சாயத்துத் தலைவர் ரூ. 2,000 கையாடல் செய்திருக்கிறார். இதைப்பற்றி புகார் வந்து அங்கிருக்கும் நிர்வாகிகள் அவர்மேல் நடவடிக்கை எடுக்கிறார்களா என்றால் நடவடிக்கை எடுப்பதில்லை. அங்குள்ள பெரிய நபர் முத்தையா என்பவர் போய் ஆபீசர்களிடம் சொல்லுகிறார் நடவடிக்கை எடுக்காதீர்கள் அவரை தப்பித்துவிடுங்கள் என்று. ஏன் அவர் நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கவேண்டும் ? இந்த மாதிரியெல்லாம் நிர்வாகத்தில் தலையிடக்

கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மாதிரி அங்குள்ள பெரியவர்கள் நிர்வாகத்தில் தலையிட்டால் பொது மக்களுடைய குறைகள் எப்படி நீங்கும் என்று கேட்கிறேன். இப்படித் தலையிடுவதனால் காரியங்கள் நடப்பது இல்லை. இப்படிப்பட்ட சிறு விஷயங்களில்கூட அவர்கள் தலையிடுகிறார்கள் அப்படி தலையிட்டுக்கொண்டுவந்தால் ஜனங்களுடைய குறைகளை தவிர்க்க முடியாது. குறைபாடுகள் நீங்காது. ஜனநாயக பண்பு கெட்டு விடும். அதனால் யாராக இருந்தாலும் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்ற ஒரு கொள்கையை சர்க்கார் கடைபிடிக்கவேண்டும்.

ஆபீஸ்களில் வேலைகள் கொடுப்பதில்கூட அங்குள்ளவர்கள் தலையிடுவதாக தெரியவருகிறது. ஆபீஸ்களில வேலை கொடுப்பதாக இருந்தால் அவர்களுக்கு சர்வீஸ் கமிஷன் மூலமாகக் கொடுக்கலாம். யார் போய் சிபாரிசு செய்கிறார்களோ அப்படி சிபாரிசு செய்யக்கூடியவர்களுக்குத்தான் வேலைகள் கொடுக்கிறார்கள். எந்தக் கட்சி சிபாரிசு செய்கிறதோ அந்தக் கட்சி ஆள்களுக்குத்தான் வேலை கொடுக்கிறார்கள். யாருக்கு செல்வாக்கு இருக்கிறதோ அவர்கள் கொண்டுபோகக்கூடியவர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. இந்தக் கொள்கையைக் கடைபிடித்தால் வேலை இல்லா திண்டாட்டம் நீங்காது. டெம்பரரி வேலையாக இருந்தாலும் சிபாரிசின் பேரில்தான் கொடுக்கப்படுகிறது. பெரிய உத்யோகஸ்தர்களுடைய பெயரைச் சொன்னாலோ அல்லது காங்கிரஸ்காரர்களுடைய பெயரைச் சொன்னாலோ தான் வேலைகள் கிடைக்கின்றன. இந்த நிலைமை இருக்கக்கூடாது. இதை தவிர்க்கவேண்டும்.

ஜில்லாக்களில் பார்த்தால் டிபுடி கலெக்டர்களுக்கு இப்பொழுது ஜீப் கார்கள் கொடுத்திருக்கிறார்கள். அது நல்லது தான். ஆனால் அங்கு தாலூகாக்களிலுள்ள தாசில்தார்களுக்கு அதிகப்படியான வேலை இப் பொழுது எற்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஒருவன் நிலம் வேண்டும் என்று கேட்டால், ஒரு ஹரிஜன விவசாயி நிலம வேண்டும் என்று மனுக் கொடுத்தால் அதைப் போய்ப் பார்த்து அளந்து கொடுப்பதற்கு இரண்டு மூன்று வருஷங்களாகின்றன. சட்டசபை உறுப்பினர்கள் மனுக் கொடுத்தாலும் அதைப் போய் பார்த்துவிட்டு வருவதற்கு நாட்களாகின்றன. நில அடமானம் செய்யவேண்டும் என்று கேட்டால் பல வருஷங்களாகின்றன. இப்படி நாளாகிறது எனபது சாதாரணமாக எல்லோருக்கும் தெரியும். என் என்றால் தாசில்தார்களுக்கு சரியான வசதி கிடையாது. தாலூகா பூராவும் அவர்போய் பார்த்துவிட்டு வருவது என்றால் முடியாமல் இருக்கிறது. அதனால் ஒவ்வொன்றுக்கும் அவருக்கு குறைந்தது ஐந்து வருஷங்களாகின்றன. இரண்டு எக்கர் நிலம் கொடுப்பதற்கு ரிவினியூ இன்ஸ்பெக்டர் சிபாரிசு செய்து அதன்மேல் இவர் போய் பார்த்துவிட்டு வந்து அதன்மேல் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. அதனால் அவருக்கு வசதி செய்து கொடுக்கவேண்டியதாக அவசியமாக இருக்கிறது. அதனால் தாசில்தார்களுக்கும் ஜீப்கள் வாங்கிக்கொடுத்து வசதி செய்துகொடுக்கவேண்டும் எனறு கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அவர்களுக்கு வசதி செய்து கொடுத்து அவர்கள் சீக்கிரம் வேலைகளைச்செய்யச் சொல்லவேண்டும்.

அடுத்தபடியாக கல்வி இலாக்காவைப் பற்றி பலர் பேசியிருக்கின்றார்கள். ஆரம்பக் கல்வி முறையை சீர்திருத்தி அமைப்பதற்காக அமைக்கப்பட்ட அழகப்பச் செட்டியார் கமிட்டி தனது ரிப்போர்ட்டை சமர்ப்பித்துவிட்டது. அதை அரசாங்கமும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைச் செய்தித் தாளில் பார்த்தோம். ஸ்ரீ விநாயகம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இன்றைய தினம் இருக்கக்கூடிய கல்வி முறை மிகவும் மோசமானதாக இருக்கிறதாகையால் இதை மாற்றியமைக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமானது. அவசரமானது. எனென்று கேட்டால் பத்தாம் வகுப்பு வரை தாழ்ந்த பாடபோதனை பெற்ற ஒருவன் கலாசாலை சென்றால் அங்க எல்லாவற்றையும் ஆங்கிலத்தில் போதிப்பதால் ஒன்றும் புரியாமல் தவிக்கிறான். ஆகவே கல்லூரிகளிலும் தமிழையே பாடபோதனையாகக் கொண்டுவர சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கையை வரவேற்கிறேன். அதைச் சீக்கிரமாகக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 11-10 a.m.

[Sri M. Palaniyandi] [25th November 1955

பொது சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால் பல நகரங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் படுக்கை வசதிகள் போதாது. எண்ணிக்கையும் மிகக் குறைவு. கிராமப் புறங்களில் வைத்திய வசதியே கிடையாது. நேற்றைய தினம்கூட மருந்து டெப்போக்களிலிருந்து ஜில்லா ஆஸ்பத்திரிகளுக்கு காலாகாலத்தில் மருந்துகளே போய்ச் சேருவதில்லையென்றும், அதனால் எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது என்பதைப் பற்றியும் கனம் அங்கத்தினர்கள் கேள்விகளின் மூலம் சபையில் தெரிவித்தார்கள். என் அப்படியிருக்கவேண்டும்? மருந்து வசதி, படுக்கை வசதி இவற்றையெல்லாம் ஜில்லா ஆஸ்பத்திரிகளில் அதிகப்படுத்தவேண்டும். திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள குளித்தலை போன்ற இடங்களில் ஆஸ்பத்திரிகளே கிடையாது. கிராமப் புறங்களில் மொபைல் வான்கள் மூலம் வைத்திய வசதி அளிக்கப்போவதாகச் சொன்னார்கள். ஆனால் எங்கோ ஒன்றிரண்டு மொபைல் வான் இருந்தால் போதாது. அவற்றை அதிகப்படுத்தவேண்டும். கிராமங்களில் குடிதண்ணீர் வசதிகள் கிடையாது. திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள உடையார்பாளையம் தாலூகாவில் தண்ணீர் வசதியின்மையினால் நரம்புச் சிலந்தி என்ற நோய் அதிகப்பட்டு வருகிறது என்பதைப் பல மெம்பர்கள் இங்கே எடுத்துச் சொலலியிருக்கிறார்கள். வைத்திய வசதியின்மையினால் மக்கள் படுகிற கஷ்டத்தை மனிதன் கண்கொண்டு பார்த்தால் நாம் ஒதுக்கியிருக்கிற 20 ஆயிரம் ரூபாய் போதவே போதாது. வைத்திய வசதியும், நல்ல தண்ணீர் வசதியும் கொடுத்து அந்தத் தாலூகா வாசிகள் நரம்புச் சிலந்தி வியாதியால் அல்லலுறுமல் காபாற்றவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ரோடுகள் பற்றி சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். திருச்சி ஜில்லாவிலுள்ள உடையார்பாளையம் தாலூகா மிகவும் பிற்பட்ட தாலூகா. அங்கே தஞ்சாவூர் ஜில்லாவுடன் இணைப்பு எற்படும் வகையில் அரியலூர் பக்கம் சரியான பாலம் கட்டப்பட்டால், அந்தப் பிரதேசம் முன்னேற்றம் அடைய வழி ஏற்படும். ஆகவே திருமானூருக்குப் பக்கத்தில் பாலம் கட்டவேண்டும். பொருளாதாரத்திலும், விவசாயத்திலும், கல்வியிலும் முன்னேற்றம் அடைந்துள்ள ஜில்லாவாக தஞ்சாவூர் இருக்கிறது. அத்துடன் திருச்சி ஜில்லாவிற்கு இந்தப் பக்கம் இணைப்பு இருக்குமேயானால் இவை எல்லா வகையிலும் முன்னேற்றம் அடைவதற்கு வழி வகைகள் எற்படும் என்றே இதனை நாங்கள் வற்புறுத்துகிறோம்.

கடைசியாக எழைகளுக்கு படிப்பு வசதியை இலவசமாக அளிப்பதைப் பற்றி சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். இந்த நாட்டில் பிறந்த எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவசமாக கல்வி அளிப்பது சர்க்காரின் கொள்கை என கனம் நிதி மந்திரி அவர்கள் குறிப்பிட்டார். அதை நான் வரவேற்கிறேன். அதோடு இந்த நாட்டிலேயே பிறந்த ஒருவன் மதம் மாறிவிட்டான் என்ற காரணத்திற்காக கல்விச் சலுகை கிடையாது என்று சொன்னால் அது மிகவும் வருந்தவேண்டிய விஷயம். தெரிந்தோ தெரியாமலோ சில ஹரிஜனங்கள் கிருஸ்துவ மதத்திற்கு வெகுகாலத்திற்கு முன்பே மாறிவிட்டார்கள். மாறுத ஹரிஜனங்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை அளித்தால், அந்தச் சலுகை மதம் மாறிவிட்ட ஹரிஜனங்களுடைய குழந்தைகளுக்குக் கிடையாது எனறு சொன்னால் அது மிகவும் வருந்தவேண்டிய விஷயம். கிருஸ்துவ மதத்தில் ஜாதி வேற்றுமையே கிடையாது என்று வேண்டுமென்றே சில பாதிரிமார்கள் சொல்லிக்கொண்டிருக்கலாம். நம்முடைய மதத்தில் இருப்பது போலவே கிருஸ்துவ மதத்திலும் நமது ஹரிஜன மக்களைத் தீண்டப்படாதவர்களாகவே கருதுகிறார்கள். அவர்கள் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை எந்த வகையிலேயாவது மேம்பட்டு இருக்கிறதா என்று கணக்கு எடுத்துப் பாருங்கள். இந்தக் கல்விச் சலுகை வேண்டுமென்றால் இவர் தகப்பன் தான் மதம் மாறினான், இவன் மாறவில்லை என்பதாக சர்டிபிகேட் வாங்கிக் கொண்டுவரச் சொல்லுகிறார்கள்: இதனால் எற்படுகிறது என்ன?

25th November 1955] [Sri M. Palaniyandi]

எல்லோரும் பொய் சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். பாதிரிமார்களும் கையொப்பம் போட்டுக் கொடுத்துவிடுகிறார்கள். இது சரியல்ல. இந்த மாதிரியாக கல்விச் சலுகையில் பாகுபாடு செய்யக் கூடாது. இதைக் கல்வி மந்திரி அவர்கள் பரிசீலனை செய்து ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கக்கூடிய கல்விச் சலுகையை மதம் மாறிய கிருஸ்துவ ஹரிஜனங்களுடைய குழந்தைகளுக்கும் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* Sri K. R. VISWANATHAN: கனம் உதவி அவைத் தலைவர் அவர்களே, இந்த உப வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த உப வரவு செலவு திட்டத்தில், ஜில்லா நிர்வாகத் திட்டத்தின் கீழ் ஹரிஜன அற நிலையங்களின் பாதுகாப்புக்காக இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு வருவாய் குறைவாயுள்ள சிறு கோயில்களையெல்லாம் செப்பனிட உத்தேசித்திருப்பதாகவும் கூறப்பட்டிருகிறது. இதை நான் வரவேற்கிறேன். அதற்காக அரசாங்கத்தாரையும் பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல. இப்படிப்பட்ட கோயில்களின் நிர்வாகத்தையும் சீர்திருத்தம் செயயவேண்டியது அவசியமாக இருக்கிறது. அதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். 11–16 a.m.

முக்கியமாக நம்முடைய தமிழ் நாட்டுக்கு கோயில்களினால்தான் அதிகப் பெருமை வந்திருகினறது. அதனாலதான நம்முடைய ராஜ்யத்தின் அடையாளமாக கோபுரததை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இல்லை என்று சொல்ல முடியாது. அந்தக் கோயில்களின் பராமரிப்புக்காக இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. கோயில்களைப் பராமரிப்பதோடு நின்று விடாமல் நம் ராஜய மக்களுடைய உள்ளத்திலே சமய அறிவு அதிகப்படும்படியாகச் செய்ய வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன் சமயப் பிரசாரத்திறகாக பிரசாரகர்களை வைத்திருந்தார்கள். வைஷ்ணவம், சைவம் முதலிய மதங்களைப் பிரசாரம் செய்யக் கூடிய பிரசாரகர்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களது சொற்பொழிவின் மூலம் அவ்வறிவைப் பரப்பி வந்தார்கள். அம்மாதிரியான முறை தற்போது கைவிடப்பட்டுவிட்டது. காரணம் வெற்றிகரமாக அவர்கள் பிரசாரம் செய்யாததுதான். ஆகவே இன்றைக்கு மகளுக்கு சமய அறிவு பெருக வேறு நல்ல முறையைக் கையாள வேண்டியது மிகவும் அவசியம். முன்பு நம் ராஜ்யத்திலே இருந்த திருப்பதி கோயிலுக்கு அதிகமான வருவாய் வந்ததினால், அந்தப் பணத்தைக்கொண்டு கலாசாலையை ஏற்படுத்தி மாணவர்களுக்கு முதலில் கல்வி அறிவைப் புகட்டி பின்னர் சமய அறிவைப் புகட்டவும் வழி ஏற்பட்டது. அதைப் போலவே இன்றைக்கு எஞ்சி இருக்கிற சென்னை ராஜ்யத்திலுள்ள கோயில்களில் எதற்கு அதிகமான வருமானம் வருகிறதோ, அதில் அதன் நிர்வாகச் செலவு போக பாக்கியிருப்பதைக் கொண்டு நம் நாட்டு வாலிபர்களுக்கு கல்வி அறிவு, சமய அறிவு புகட்ட வழி செய்தாகவேண்டும். இப்படிச் சொன்னால் ஹிந்து அற நிலையங்களுக்கு வருகிற பணத்தைகொண்டு அம்மதத்தைச் சேராத முஸலீம், கிருஸ்துவ குழந்தைகளுக்கும் அதனைச் செலவிடுவதா என்று சிலர் கேட்கிறார்கள்.

ஆகையினால் எஞ்சிய கோயில் பணத்தை அம்மாதிரி பயன் படுத்தாமல் அதை தேவாரப் பாடசாலைகள், மத போதனைகள் முதலியவற்றிற்குத்தான் பயன் படுத்தவேண்டும் என்று கூறுகிறார்கள். அம்மாதிரிக் கூறுவது ஒருவாறு ஒப்புக்கொள்ளத் தக்கதாக இருந்தாலும், காலம் முனனேற, முனனேற மதத்திலே திருந்திய கருத்துக்கள் புகுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதையும் சிந்திக்கவேண்டும். ஒரு காலத்தில் ஆதித் திராவிடர்கள் கோயிலுக்குள் புகக்கூடாது என்ற கருத்து இருந்தது. பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்கள் மத நூல்களைப் படிக்கக்கூடாது என்ற காலம் இருந்தது. ஆனால் இபபொழுது அவைகள் மாறிவிட்டன, ஆகவே, காலம் மாற. மாற, நாம் கருத்துக்களை மாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். அதே போல் ஹிந்து மதக் கோயில்களின் 11.20 a.m.

[Sri K. R. Viswanathan] [25th November 1955

பணத்தை பொதுக் கல்விக்காகப் பயன்படுத்தும் போது மற்ற மதத்தினரும் அதனால் பயனடைந்தால் பரவாயில்லை என்ற கருத்தைக்கொண்டு, ஹிந்து மதக் கோயில்களில் எஞ்சியுள்ள பணத்தை பொதுக் கல்விக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவாளர் வெங்டசாமி நாயுடு அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் கோயில்களில் எஞ்சியிருக்கும் பணத்தைக்கொண்டு அனுதை விடுதிகள் ஏற்படுத்தி நடத்த முயற்சி எடுக்கப்பட்டது. அதன்பேயே 1953–54-ம் ஆண்டில் ஒவ்வொரு ஜில்லா தலைநகரிலும் ஒரு அனுதை விடுதி நிறுவப்பட்டு அந்தந்த ஜில்லாவில் உள்ள கோவில்களில் எஞ்சியுள்ள பணத்தை அனுதை விடுதிகளுக்கும், அனுதை விடுதிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்துவதற்கென்று ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து அதை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் முற்பட்டார்கள். ஆனால் சில சுயநல தர்மகர்த்தாக்களும், மடாதிபதிகளும் கோர்ட்டில் வழக்காடிய காரணத்தால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் பிற்கு திருத்தப்பட்டு ஓரளவுக்கு அந்த மாதிரி செலவு செய்யலாம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தினாலே சர்க்கார் அந்த முறையிலே கோவில்களில் எஞ்சியிருக்கின்ற பணத்தைச் செலவு செய்ய முடியும். ஆனால் அவர்கள் ஒரேயடியாக அந்த பொறுப்புக்களை கோவில் தர்மகர்த்தாக்கள் மீது எறிந்துவிடுகிறார்கள். கோயில் தர்மகர்த்தாக்கள் பெரும்பாலும் படிக்காதவர்களாகவும், மதக் கல்வி இல்லாதவர்களாகவும், சுயநலமிகளாகவும், அவர்களுடைய கருத்துக்குமட்டும் மதிப்பு கொடுத்துவிட்டு, நியாயமான முறையில் மக்கள் நன்மையடையும் படியாக அந்தப் பணத்தைச் செலவழிப்பதற்கான வழிகளைச் சொல்லும் சர்க்கார் அறிவாளிகளின் கருத்துக்களைப் புறக்கணிப்பது அவ்வளவு நலலதல்ல. ஆகவே பரம்பரை தர்மகர்த்தாவாக இருந்தாலும் சரி, சர்க்காரால் நியமிக்கப்படும் தர்மகர்த்தாவாகலும் சரி, சர்க்கார் தலையிட்டு, கோயில்களில் எஞ்சிய பணத்தை நல்ல முறையில் செலவழிப்பதற்காக சட்டத்தைத் திருத்தியோ, அலலது வட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியம் இல்லாவிட்டால் கோவில்களுக்கு உத்தரவிட்டோ. அந்தப் பணத்தைச் செலவழிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில இடங்களில் காடுகள் மிகுதியாக இருக்கின்றன. உதாரணமாக உடையார்பாளையம் தாலூகாவில் காடுகள் மிகுதி. அந்தக் காடுகளை சர்க்கார் எற்றுக்கொண்டு, சில ஆண்டுகள் ஆகின்றன. சர்க்காரால் எற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அவை சரியாக கவனிக்கப்படவில்லை. முன்பு எப்படி இருந்ததோ அதைவிட மோசமாக காடுகள் அழிந்துகிடக்கின்றன. இதைப் பற்றி பலதடவை இந்த சபையில் சொல்லியிருக்கிறேன். சர்க்காரால் காடுகள் நன்முகப் பராமரிக்கப்படாததற்குக் காரணம் அந்தக் காடுகளை பராமரிப்பதற்கு போதிய அதிகாரிகள் நியமிக்கப்படாதது தான். தவிரவும் சில அதிகாரிகளை நியமித்தாலும், காட்டிலாகாவில் லஞ்சம் தாண்டவமாடுகிற காரணத்தால், காடுகளைப் பாதுகாப்பதற்கென்று நியமிக்கப்பட்ட அந்த சில அதிகாரிகளும் காடுகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, அவர்களே காடுகளை அழிப்பதற்கு வழி காட்டிகளாகவும் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதை பல தாக்கீதுகள் மூலமாகவும், விண்ணப்பங்கள் மூலமாகவும், மகஜர்கள் மூலமாகவும் அரசாங்கத்தாருக்கு நான் எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஆகவே இதுபற்றி அவசியமான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக உடையார்பாளையம் தாலூகா ஜமீன் பிரதேசமாக இருந்தது. அது சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்போது 'ஸெட்டில்மெண்ட்' நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அங்கு பல வரிகள் பாழாகி இருக்கின்றன. அவைகள் ஸ்பெஷல் 'மைனர் இர்ரிகேஷன்' திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவேண்டியிருக்கின்றன. அம்மாதிரியான பல வரிகளை அரசாங்கத்தார் எடுத்து கவனிக்காமல் இருக்கிறார்கள். அவற்றை அவர்கள் எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் என்னவென்றால், அவற்றை எடுத்துக்தால் லாபம் இல்லை என்று அவர்கள் கருதுவதுதான். உடையார்பாளையம் தாலூகாவில் நீர்ப்பாசன வசதி மிகக் குறைவு. அங்கு ஆற்று வாய்க்கால்கள்

25th November 1955] [Sri K. R. Viswanathan]

இல்லை. மேலே தோண்டி, குழாய் கிணறு போட்டு, அதன் மூலமாகத் தண்ணீர் எடுக்கும் வசதி செய்யவும் வழியில்லாமல் இருக்கிறது. இப்போது இம் மாதிரி நீர்பாசன வசதி இல்லாத கோயம்புத்தூர், திருநெல்வேலி, ராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களை 'Special Minor Irrigation Programme'-ன் கீழ் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் திருச்சிராப்பள்ளிப் பகுதியில் உள்ள காடாரம்பப் பிரதேசங்கள் ஆகிய உடையார்பாளையம், பெரமபலூர் ஆகிய தாலூகாக்களை ஸ்பெஷல் 'மைனர் இர்ரிகேஷன்' திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டால் லாபமில்லை என்ற காரணத்தால் அவ்விதம் எடுத்துக்கொள்ளவில்லை. இம மாதிரியான இடங்களை எடுத்துக்கொண்டால் லாபம் இல்லாவிட்டாலும்கூட இந்த இடங்களையும் முன்னுக்குக்கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த திட்டங்களை அமுலுக்குக்கொண்டு வரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI P. RAMAMURTHI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வருஷாந்திர பட்ஜெட்டை விவாதிப்பது போன்ற ஒரு விவாதத்தை இதில் ஆரம்பிக்க நான் விரும்பவில்லை; அது சரியானதும் அல்ல. சில குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றி வெட்டுப் பிரேரணை வரும்போது பேசிக்கொள்ளலாம் என்று இருக்கிறேன். ஆனால் வெட்டுப் பிரேரணை கொடுக்கமுடியாமல் இருக்கும் விஷயத்தைப்பற்றி நான் இப்போது பேச விரும்புகிறேன்.

வந்திருக்கும் பட்ஜெட்டில் கல்வி சம்பந்தமாக சில பிரேரணைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, 'Himalayan Mountaineering Institute' என்று ஒரு ஸ்தாபனம் சமீபத்தில் கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே இப்படிப்பட்ட ஒரு ஸ்தாபனம் இல்லாமலிருந்தது. அதனுடைய அதிபர் இந்தியத் தன்மையை உத்தேசித்து அதற்கு 5,000 ரூபாயை மானியமாகக் கொடுப்பது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மாகாணத்திலிருந்து மாணவர்கள் அந்த ஸ்தாபனத்திற்குச் சென்று படித்தாலும் படிக்காவிட்டாலும் 5,000 ரூபாயை இந்த ஸ்தாபனத்திற்குக் கொடுப்பது என்றிருக்கிறது. இவ்விதம் கொடுப்பது தப்பு என்று நான் சொல்லவில்லை, கொடுக்கவேண்டுமென்று தான் சொல்கிறேன். ஆனால் இந்த மாதிரி எதோ ஒரு பட்ஜெட்டை இங்கே நுழைத்துவிட்டு, இந்த விஷயமே ஜனங்களுக்குத் தெரியாத முறையில் பண்ணியிருப்பதை ஆக்ஷேபிக்கிறேன். உதாரணமாக, நம் நாட்டில் இரண்டு வருஷங்களுக்கு முன்பு எவரெஸ்ட் சிகரத்தில் ஸ்ரீ டென்லிங் நெக்கிக் காலடி எடுத்துவைத்தார் என்று கேட்ட மாத்திரத்தில் உண்மையிலேயே ஒவ்வொரு இந்தியனுக்கும் பெருமை ஏற்பட்டது. இன்றைக்கு உலகத்திலே இயற்கையை வெல்லுவதற்கு மனிதனால் சாதிக்கமுடியாத விஷயம் ஒன்றும் இல்லை என்று மேலும் மேலும் நிரூபிக்கக்கூடிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். ஆகவே இந்த மாதிரியான வேலைகளில் நம் நாட்டு மக்கள் மேலும் மேலும் பழக்கப்படவேண்டும். இன்றைக்கு "மேலை நாட்டவர்கள் தான் இந்த மாதிரி வேலைகளில் ஈடுபடுவது சாத்தியம், மேலை நாட்டவர்களை தான் பூகோள அமைப்பில் உள்ள விஷயங்களைக் கண்டுபிடிக்க முடியும், இந்நாட்டவர்கள் திறமையற்றவர்கள், இந்நாட்டவர்களால் அது சாத்தியமில்லை" என்ற கருத்து பொய்ப்பிக்கப்பட்டு, நம் நாட்டவர் எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப்பிடித்திருக்கிறார். இதற்கும் மேல் நம் நாட்டவர்கள் அட்லாண்டிக் பகுதிக்கும் போகமுடியும் என்பதை நிரூபிக்கும் காலகட்டம் சீக்கிரத்தில் வரவேண்டும் என்று நாம் அனைவரும் விரும்புகிறோம். அப்படியிருக்கும்போது, இந்தச் செயல்களுக்கெல்லாம் பயிற்சியளிக்கும் ஒரு ஸ்தாபனத்தில் தமிழ்நாட்டவர்கள் படித்தாலும் படிக்காவிட்டாலும் 5,000 ரூபாய் மானியமாக அந்த ஸ்தாபனத்திற்குக் கொடுப்பது என்பதற்குப் பதிலாக, "இந்த மாதிரி ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; தமிழ்நாட்டில் இருக்கும் மக்களும் இன்றைக்கு மேலையில் ஏறுவதை கற்றுக் கொள்வது அவசியம்" என்று தமிழ் நாட்டு மக்களிடையே பிரசாரம் செய்து, அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்கு வேண்டிய முறையை அரசாங்கம் கையாண்டிருக்குமேயானால், அதை நான் நிச்சயமாக வரவேற்பேன். நான் பேசக்கூடிய விஷயம் மானியம் கொடுப்பதைப்பற்றி மட்டுமல்ல.

தமிழ் நாட்டு வாலிபர்களுக்கு இந்தக் காரியங்களில் ஈடுபடுவதற்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்ற விஷயத்தைப் பற்றித்தான் நான் இங்கு பேசுவது.

11-30 a.m. அதே மாதிரி மூன்றுவது item-த்திலிருக்கும் மதரஸ் Educational association-னால் நடத்தப்படும் பள்ளிக்கூடத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் மானியம் கோரப்பட்டிருக்கிறது. டில்லியிலுள்ள அந்தப் பள்ளிக்கூடத்தில் இரண்டாயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களுக்கு தமிழ் போதிக்கப்படுகிறது. அந்த இரண்டாயிரம் மாணவர்களும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான். அப்படிப்பட்ட டில்லி பள்ளிக்கூடத்தில் சில பாஷையைதான் அநுசரித்து பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இருந்தாலும், அங்கு தமிழை சொல்லிக்கொடுக்க அங்கிருக்கும் கல்வி இலாகா ஒதுக்கொண்டிருக்கிறது. அங்கே தமிழ் சொல்லிக் கொடுப்பதினாலே, தமிழ் வாத்தியார்களுக்காக பணம் கேட்கப் டவில்லை. பள்ளிக்கூட கட்டிடத்திற்காகத்தான் சென்னை சர்க்காரை பணம் கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே, 2 லட்சம் ரூபாய் அக்கட்டிடம் கட்ட வசூல் செய்திருக்கிறார்கள், மீதம் ஒரு லட்ச ரூபாய் தேவைபடுகிறது, அதற்காக சென்னை சர்க்காரை அணுகி இருக்கிறார்கள். அந்த ஒரு லட்ச ரூபாய் அந்த பள்ளிக்கூட கட்டிடத்திற்காக கொடுப்பதாக முடிவு செய்து இந்த மானியத்தில் கோரியிருக்கிறார்கள், நிதி மந்திரி அவர்கள். இந்த முடிவும், கோரிக்கையும் சரியானதுதான். ஏன் கொடுக்கிறேம்? அங்கு படிப்பவர்கள் தமிழ் மாணவர்கள். அந்த பள்ளிக்கூடத்திற்கு கட்டிடம் இல்லாமல்போனால் அந்த மாணவர்கள் தமிழ் படிக்க முடியாது. ஆகவே இந்த சர்க்கார் அந்த கட்டிடதிற்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுப்பதென தீர்மானித்திருக்கிறது. இந்த இடத்திலே ஒரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன.

தமிழ் நாட்டிலிருந்து டெல்லிக்குப்போய் வசித்துக்கொண்டிருக்கும் ஜனங்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒரு லட்சம் இருக்கும். 15 லட்சம் ஜனத்தொகை கொண்ட டெல்லியில் ஒரு லட்சம் தமிழ் மக்கள் வேலை செய்கிறார்கள், அதுவும் முக்கியமான பல வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் அலுவலகங்களிலும் வேலை செய்கிறார்கள். தொழிற்சாலையிலும் அநேகர் வேலை செய்கிறார்கள். ஆகவே இந்த மாதிரி வேறுமொழி பேசும் மக்கள் ஒரு லட்சம் இருக்கும்போது, அந்த டெல்லியிலுள்ள அரசாங்கம், நிச்சியமாக அங்குள்ள அந்த மாணவர்களுடைய கல்விக்காக சகல வசதிகளும் செய்யவேண்டியது அதன் பொருப்பாகும். அந்தப் பொருப்பை, டெல்லி சர்க்காருக்கு உணர்த்தவேண்டும். டெல்லி state-ல் போதுமான பணம இல்லாமலிருக்கலாம். அதனால் மத்திய சர்க்காருக்கு மிகப் பெரிய பொருப்பு இதில் இருக்கிறது. அந்த state சர்க்காரோ, மத்திய சர்க்காரோ, இங்கிருந்து டெல்லிக்குப் போயிருக்கும் குடும்பங்களுக்கு, தாய்மொழியை கற்பிப்பதற்கு சகல வசதிகள் செய்வது தான் நல்லது. அந்த சர்க்கார்களின் உதவி இல்லாததால், தமிழ் மொழி வைத்திருக்கும் பள்ளிக்கூடத்திற்கு கட்டிடம் கட்ட, இடம் வாங்க, அந்த association-யைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார்கள். கடைசியாக, அந்த பள்ளிக்கூட கட்டிடம் கட்ட கொடுக்கப்பட்ட இடம், ஒரு மலைப் பிராந்தியம். அங்கு டைனமைட் வைத்து உடைத்து நிலத்தை சரிபடுத்த வேண்டியதாக இருக்கிறது. இப்படிப் பட்ட நிலைமை ஏற்படக்கூடாது. தமிழ் நாட்டிலிருந்து மட்டுமல்ல, ஆந்திராவிலிருந்தும், மலையாளத்திலிருந்தும், வங்காளத்திலிருந்தும் மக்கள் அங்கு வந்து குடியேறி இருக்கிறார்கள். இந்த மாதிரி டெல்லி போன்ற, மத்திய சர்க்காரினுடைய கேந்திர ஸ்தானங்களில், மற்ற மாகாணங்களிலிருந்து குடியேறி இருக்கும் ஜனங்களுடைய குழந்தைகளுக்கு, கல்வி, பள்ளிக்கூட கட்டிட வசதிகள் முதலியன கொடுப்பது, மத்திய சர்க்காரின் மிகப்பெரிய பொருப்புகளில் ஒன்றாகும். இந்த பொருப்பை மத்திய சர்க்கார் தானாகவே செய்யவேண்டியதவசியமாகும். அப்படி செய்யாமல் இருந்தால் நம் தேச ஜனங்களிடையே மனக்கசப்பு ஏர்பட்டு, மக்களுடைய பிளவுக்காக உழைக்கும் பிரதான சக்திகளின் கைகள் பலப்பட்டுவிடும். ஆகவே, சென்னை சர்க்கார் நிச்சயமாக இந்த ஒரு லட்ச ரூபாய் தற்போது அந்த

பள்ளிக்கூடத்திற்காக கொடுக்கவேண்டியதுதான், ஆனால் இனிமேல் இப்படிப் பட்ட நிலைமை ஏற்படாமல், டெல்லியில் உள்ள தமிழ் மாணவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் வேண்டிய வசதிகள் செய்ய, சென்னை சர்க்கார், மத்திய சர்க்காருக்கு எழுதி, இப்படிப் பட்ட நிலைமையை மாற்றும்படியான நடவடிக்கை எடுக்கவேணுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, first I shall deal with the points raised by Mr. Ramamurthi, particularly with reference to the responsibility of the Central Government or the Delhi State Government for providing sufficient educational facilities for persons who are resident there and who belong to other parts of the country. As far as recurring grant is concerned, the institution mentioned by him is receiving a recurring grant as any other institution there. So also with regard to the building grant, it is receiving the building grant as any other institution is receiving there. But as far as the non-recurring grant for buildings is concerned, they do not give full grant for the purpose of putting up buildings and we cannot ask for a favourable treatment so far as institutions belonging to or catering to the needs of persons belonging to other States are concerned. Therefore, applying those tests, they have received some building grant but that is not enough and persons who are resident there are almost Government servants or are employed in other institutions there. Therefore, the persons in charge of that institution are not able to provide enough money for putting up the building, and they approached this Government and represented that the building grant which has been made available to them by the Delhi Government is not sufficient and they have to incur extra expenditure, which this Government should meet by providing some money for the purpose. As a matter of fact, the Andhra Government have paid a non-recurring grant of Rs. 1½ lakhs to an institution catering to the needs of the smaller population of Andhras resident in Delhi. We have given only Rs. 1 lakh. Therefore, there is no point in saying that the Delhi State Government or the Central Government have not taken over the responsibility of providing educational facilities. They are providing educational facilities without any discrimination whatsoever. So, if the extra money has got to be found, whether we should help that institution is the only question for consideration. It has been commended by the hon. Leader of the Opposition that it deserves help and we should give it. It is only on that basis that *ad hoc* non-recuring grant was given to that institution. 11-36 a.m.

With regard to the Mountaineering Institute, it is our intention to help this institution, whether we are able to send our students to that Institute or not, because we are not quite sure whether any person would be coming forward to take advantage of the training given there. Therefore, we have not made it a condition precedent to the grant of Rs. 5,000. That is what is mentioned in the Explanatory Note. It is not our intention that no students should go there. As a matter of fact when the time comes for recruiting students, they will inform us also, and it should be possible for us to send at least a few students to get the training there even though we may not be

climbing the Himalayan mountains. But still the training itself would give a certain amount of self-confidence and initiative to the people. Therefore, it may be possible to send a few students there provided they come forward to take advantage of this training. I may assure the hon. Leader of the Opposition that we shall not only encourage any student going there but certainly we shall consider, when the occasion arises, whether any further facilities should be made available by this Government.

